கல்வியின் மறுமலர்ச்சி

கே. எஸ். நாகராஜன்
விவேகானந்தர் கல்லூரி
மயிலை, சென்னை.

— வெளியீடு —
S. விசுவநாதன்

கல்வியின் மறுமலர்ச்சி

கே. எஸ். நாகராஜன்
விவேகானந்தர் கல்லூரி
மயிலை, சென்னை.

— வெளியீடு —
S. விசுவநாதன்

Printed by S. Viswanathan, at the Central Art Press,
14, Singanna Naick St., G. T., Madras.

முகவுரை

நாம் ஒரு புதிய சகாப்தத்தில் வாழ்கின்றோம். நமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தை நன்கு அநுபவித்துப் பயன்படுத்த நமது மக்கள் யாவரும் அறிவும் ஆற்றலும் உடையவர்களாக வேண்டும் இதற்கு அடிப்படையாக நம் தாய்மொழி பல துறைகளில் சிறந்தோங்க வேண்டும். இந்த நோக்கத்துடன் கல்வித் துறை பற்றிய கருத்துக்கள் சிலவற்றைத் திரட்டி இச்சிறுநூலை யான் தமிழன்னையின் திருத்தாள்களில் சமர்ப்பிக்கிறேன்.

கல்வி மனிதனுக்கு இன்றியமையாதது. இதை உணர்ந்த பெருமக்கள் பண்டு முதல் அவ்வப்போது இருந்த சமூக சூழ்நிலைகளுக்கேற்ப, கல்வித் திட்டங்களை உருவாக்கிக் கல்விச் சாலைகளை நடத்தி வந்துள்ளனர். இத்தகைய கல்வியாளர்களின் சீரிய கருத்துக்களை ஆராய்வதும், அவற்றின் உதவி கொண்டு, தற்போது சீர்கேடான நிலையிலுள்ள நம் கல்வி முறையைத் திருத்தியமைக்க வழி காண்பதுவுமே இச்சிறு நூலினை யான் எழுதியதன் நோக்கமாகும்.

இந்நூலின் கையெழுத்துப் பிரதி தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசு திட்டத்திற்கு அனுப்பப் பெற்றது. 1946, 47-ம் ஆண்டுப் பரிசுத் திட்டத்திற்கென எழுதப் பெற்ற நூல்களில் கல்வி, தத்துவம், மனத்தத்துவம் என்னும் பகுதியில் இந்நூல் சிறந்தது என்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தேர்ந்தெடுத்தனர். இதற்குரிய பரிசு 17-4-49 அன்று திருவாரூரில் நடந்த தமிழ்த் திருநாளில் எனக்கு வழங்கப்பெற்றது.

இந்நூல் வெளிவருதற்குரிய உதவிகள் செய்த வித்வான் உயர்திரு S. V. வரதராஜ ஐயங்கார், M. O. L. அவர்கட்கு என் அன்புகலந்த நன்றி உரியதாகும். இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பினை ஏற்ற திரு S. விசுவநாதன், B. A. அவர்கட்கு யான் கடப்பாடுடையேன்.

விவேகானந்தர் கல்லூரி
சென்னை.—1-12-49.

கே. எஸ் நாகராஜன்.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
I	கல்வி	1
II	பரம் பொருட் கல்வி	6
III	இயற்கையின் போதனா சக்தி	11
IV	பண்டைக் கிரேக்க நாட்டில் கல்வி	13
V	பண்டை இந்தியாவில் கல்வி	20
VI	சுவாமி விவேகானந்தருடைய கருத்துக்கள்	29
VII	மகாத்மா காந்தியடிகளுடைய கருத்துக்கள்	38
VIII	அன்னே பெஸண்ட் அம்மையருடைய கருத்துக்கள்	43
IX	பிரௌடு என்பாருடைய கருத்துக்கள	49
X	ரவீந்திர நாத் தாகூருடைய கருத்துக்கள்	55
XI	வார்தாத் திட்டம்	60
XII	ஸார்ஜண்ட் திட்டம்	79
XIII	ஒரு புதுக் கல்வித் திட்டம்	82
XIV	நாட்டுப் புறங்களில் கல்வி	91
XV	முதியோர் கல்வி	95
XVI	ஆசிரியர்கள் நிலை	105
XVII	புதுத்திட்டம்—ஓர் அட்டவணை	107
XVIII	முடிவு	108

கல்வியின் மறு மலர்ச்சி

"கேடில்விழுச் செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" பொய்யாமொழி

செல்வங்களுள் மிகச் சிறந்தது கல்விச்செல்வ மென்பதைப் பற்றி ஐயப்படுவோர் இரார். ஆகவே இத்தகைய கல்வியின் தத்துவம், சில சிறந்த நாகரிகங்களில் இருந்த கல்விமுறைகள், நம் நாட்டில் பண்டைக்காலத்தில் இருந்த கல்விமுறைகள், இப்பொழுது உள்ள கல்விமுறை, இனிச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் ஆகிய இவற்றைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

I

"கல்வி" என்னும் தமிழ்ச்சொல் 'கல்லுதல்' என்னும் சொல்லிலிருந்து வந்தது. கல்லுதல் என்றால் 'தோண்டுதல்' என்பது பொருள். அறிவு அனைத்தும் நம் உள்ளத்தே இருக்கிறது. ஆதலால் நம்மால் கற்கப்படும் பொருள் நமக்கு வெளியில் காணப்படுவதில்லை. நமக்குப் புறத்தே உள்ளன அனைத்தும், நமக்குள்ளே உள்ள உண்மையை நாம் கண்டு அறிய உதவியாகும் கருவிகளே. இதைச் சுவாமி விவேகானந்தர் மிக அழகாக விளக்குகிறார்: "தத்துவ சாஸ்திரியாகிய நியூட்டன் உலகக் கவர்ச்சி நியதியைக் கண்டுபிடித்தார். ஆனால் அவர் கண்டுபிடித்த பிறகுதானா கவர்ச்சி உண்டாகியது? நியூட்டனுக்கு முன்னும் கவர்ச்சி இருக்கத்தான் இருந்தது." இதுபோலவே புதிது புதிதாக நம்மில் பலரும் கண்டு பிடிக்கும் தத்துவங்கள் அனைத்தும் நம் உள்ளத்தே பொதிந்து கிடக்கின்றன. ஆகவே நம் உள்ளம் ஒரு சுரங்கம்; அதில் மறைந்து கிடக்

கின்றது அறிவாகிய விலையிடமுடியாத உலோகம். நாம் அச்சுரங்கத்தினின்றும் உலோகத்தைத் தோண்டியெடுக்க வேண்டும். இம் முறையையே "கல்வி" என்ற சொல்லால் குறிக்கிறோம்.

கல்வியை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பரம் பொருட் கல்வி அல்லது உயர் கல்வி.
2. உலகியற் கல்வி அல்லது சாதாரணக் கல்வி.

பரம்பொருட் கல்வியாவது பரம்பொருள் அல்லது ஆண்டவனைப் பற்றிய அறிவைப் பெறுவது. இதுபோலவே உலகியற் கல்வியாவது உலகத்தின் இயல்பைத் தெரிந்து கொள்வது. நம்மில் பலருக்கு உலகியற் கல்வியைப் பற்றி நன்கு தெரியும். ஆனால் பரம்பொருட் கல்வியைப் பெறுவது சுலபமான காரியமன்று. ஆயினும் அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். அவ்வகைக் கல்வியால்தான் மனிதன் தன் உண்மை நிலையை அடைய முடியும். இது நிற்க, உலகியற் கல்வியும் நமக்கு அவசியந் தான். உயிருடன் இருக்கும்வரை நாம் உலகோடு ஒட்டி வாழ வேண்டும். இதற்கு நாம் உலகியற் கல்வியைப் பெறுவது இன்றியமையாததாகும். இப்படிக் கூறும்போது ஒரு சந்தேகம் எழலாம். பரம்பொருட் கல்வி நமக்குக் குறிக்கோளானல் அதையே பெற முயல்வோமே! இந்த உலகியல் கல்வி எதற்கு? இதற்கு விடை கொடுப்பது சுலபம். உலகை அறிவதால் பரம்பொருளை அறிய விரும்பும் ஒருவன் எவ்வகையிலும் தாழ்மை அடைவதில்லை. உலகை அறிந்து அதன் மூலம் பரம்பொருளை அறிவது முறை.

இதை ஓர் உதாரணம் கொண்டு விளக்குவோம். ஒரு கலைஞன் பல வர்ணங்களை உபயோகப்படுத்தி ஓர் அழகான

யத்தை வரைகிறான்; வர்ணந் தீட்டப் பெரிய துணி, தீட்டுங் கருவி போன்ற பல பொருள்களையும் உபயோகிக்கிறான். கலைஞனின் மனத்தில் கலை முதலில் உருவெடுக்கிறது. ஆனால் தன் மனத்தில் எழுந்த கலையைப் பிறரறியச் செய்யவேண்டுமென்ற ஆர்வத்தால் அக்கலையை ஓர் ஓவியத்தின் வாயிலாக வெளியிடுகிறான். அவன் அங்ஙனம் தோற்றுவிக்கும் முறையில் பயன் படுகின்றன வர்ணங்களும் துணி முதலியனவும். ஆகவே அவ்வோவியத்தைச் சிருஷ்டித்த கலைஞனின் உள்ளத்து எழுந்த கலையை வெளிப்படுத்தும் அளவுக்கு இவ்வர்ணங்களும் துணியும் மதிப்பு உடையன. ஆனால் தனியே பிரித்துப் பார்க்கும்போது அவற்றிற்கு எவ்வித மதிப்பும் இல்லை. இவற்றிற்கு முன்னும் கலை இருக்கத்தான் இருந்தது. வேறு ஒரு பொருளும் இல்லாவிட்டாலும் அந்தக் கலை என்றும் இருக்கும். இது நிலைத்த உண்மை. ஆனால் இந்த வர்ணங்கள் முதலியவை இல்லாமல் கலைஞன் தன் கலையைப் பாமர மக்களுக்குத் தெரியப்படுத்த முடியுமா? முடியாது. ஆகவே வர்ணங்கள், துணி முதலியவற்றை உண்மை அவசியம் என்றும், ஆனால் அவை நமது குறிக்கோள் அல்ல, அவை கலைஞனின் உள்ளத்தெழும் கலையைத் தோற்றுவிக்கும் கருவிகளே என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். "வர்ணம், துணி ஆகிய இக்கருவிகளே நம் குறிக்கோள், இவையே கலை" என்று உணர்பவன் அறிவிலியாவான். ஆனால் "கலையென்பது இவ்வர்ணமல்ல, இந்தத் துணியல்ல; அதுவேறு. அதைத்தான் மதிக்கவேண்டும். இவ்வர்ணம் முதலியவற்றை மதிக்காதே" என்று கூறும் மனிதன் கலையையும் அதைத் தோற்றுவிக்கும் கருவிகளையும் சம்பந்தமற்ற இரண்டு தனிப் பொருள்களாகப் பார்க்கிறான். அவன் பெருமூடன். கருவிகளைக் கருவிகள் என்

றும் அவற்றின் மூலம் தன் குறிக்கோளாகிய கலையை அறிந்து நுகரவேண்டும் என்றும் உணர்வதே முறை. அதுவே உண்மை அறிவு. ஆகவே பரம் பொருட் கல்வி யையே நமது குறிக்கோளாகக் கொண்டாலும் அதன் பொருட்டு உலகியல் கல்வியைப் பொருட்படுத்தாது இருப் பது தவறு.

இது நிற்க, கல்வியின் அவசியத்தைச் சிறிது பார்ப் போம். கல்வியின்றேல் பண்பாடு இல்லை. நிலத்தை உழுது சரிப்படுத்தாவிட்டால் அது வேளாண்மைக்கு உதவாது. அதுபோலவே கல்வி பயின்று மனத்தைப் பண்படுத்தாவிட் டால் மனிதன் இன்பம் பெற இயலாமல் தவிக்க நேரும். மனம் ஒரு பரந்த நிலம் போன்று இருக்கிறது; கல்வியே ஏர்; அறிஞர்களே உழவர்கள். இவ்வுழவர்கள் கல்வியின் உதவியால் மனத்தைப் புனிதப் படுத்தினார்களானால் பண் பாடாகிய பயிர் நன்றாக விளையும்; நல்ல பலனைக் கொடுக் கும். இக்கருத்துக்கள் அனைத்தையும் சுருக்கிக் கூறுகிறார் திருவள்ளுவர். அவர் குறளைச் சிந்தித்துப் பாருங்கள்:

"வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை"

இங்கே சொல் என்பது கல்வியைக் குறிக்கும். "சரி. கல்வி யில்லாவிட்டால் என்ன? பண்பாடுதானே இருக் காது, போகட்டுமே" என்று சொல்லக்கூடும். ஆனால் பண்பாடுதான் மனிதனையும் விலங்குகளையும் பிரிக்கிறது. உலகத்தில் வாழும் மனிதர்களை மக்கள், மாக்கள் என்று பிரித்துக் கூறுவதுண்டு. பண்பாடு உடையவர்கள் தான் மக்கள் என்று அழைக்கத் தகுந்தவர்கள். பண்பாடு இல்லாதோர் விலங்குகளுக்குச் சமானமானவர்களேயாவர். இதனாலேயே, விலங்குகளுக்கும் மனிதனுக்கும் எவ்

வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் கற்றவனுக்கும் மற்றவருக்கும் இடையில் இருக்கிறது என்பதை உணர்த்தத் திருவள்ளுவர்,

“ விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர் ”

என்று கூறுகிறார். பண்டைக்காலத்தே நம் நாடு குடிவளம், கோல்வளம் ஓங்கி நின்றதற்கு முக்கிய காரணம் நாட்டினர் பெருமையேயாகும். மக்களுக்குரிய வீர வாழ்க்கை அல்லது பெருமித வாழ்க்கை நான்கு பொருள்களைப் பொறுத்திருக்கிறது என்று தொல்காப்பியனார் கூறுகிறார். அவையாவன கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகியவை. “ கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே” என்பது சூத்திரம். இதில் கல்விக்கே முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் நம் நாட்டினர் கல்வியின் இன்றியமையாமையை அறிந்திருந்தனர் என்பதற்கு மற்றோர் உதாரணத்தைக் காண்போம். கல்வியில் பெரிய கம்பர் நாட்டுப் படலத்திலே கூறுகிறார்:

“ வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லையோர் செறுநர் இன்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால் ”

இதன் பொருளை ஊன்றிப் பாருங்கள். மற்ற எல்லாச் சிறப்புக்களைப் பெற்றிருந்தாலும் கல்வி இல்லாத குறை ஒன்று இருந்தால் போதும்; அந்நாடு பெருமிதத்திற்கு உரியதாகாது; ஆகவே மற்றெல்லா வழிகளிலும் சிறப்புற்றிருந்த அந்நாடு கல்வி கேள்விகளிலும் சிறந்திருந்தது;

அதனல் அதற்கு எவ்விதக் குறைவுமில்லை என்ற பொருள் தொனிக்கிறதல்லவா?

இன்னும், இக்கல்வியே மக்களுக்குக் கண்ணுகும் என்பது தோன்ற "கண்ணுடையர் என்பவர் கற்ருேர்" என்றும், உண்மையான செல்வம் கல்விச் செல்வம் மட்டுந் தான் என்பதை உணர்த்த "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றும் கூறுகிருர் திருவள்ளுவர். இன்னும் கல்வியின் பெருமையை விளக்கும் நூற்பகுதிகள் எண்ணிறந்தன. உலக நிகழ்ச்சியைப் பார்ப்போம். எவன் கல்வியறிவால் சிறப்புற்றிருக்கிருனே அவனே பெருமை யடைகிருன். அவனையே உலகம் மதிக்கிறது. இதுபோலவே எந்தநாடு கல்வியறிவால் மேம்பட்டு நிற்கிறதோ, அந்த நாடு மிக்க செல்வத்தினையும், பிற நாடுகளின் மரியாதையையும் பெற்று விளங்குகிறது. எனவே, ஒரு நாடு முன்னேற வேண்டுமானல் அந்நாட்டில் கல்வி வளம்பெற வேண்டும்.

II

பரம் பொருட் கல்வியைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

"பரம் பொருள் ஒன்று உண்டு. நாம் அதன் மக்கள்" என்ற கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களைப் பற்றிக் கவலையில்லை. கடவுள் ஒருவர் உண்டானல் அவரைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அனைத்தும் அன்புருவான ஆண்டவனை அறிதலே பரம்பொருட் கல்வியின் குறிக்கோள். அப் பரம்பொருளிலிருந்து பிறந்தன, உள்ளன அனைத்தும்; பிறந்தபின் அதனுதவியால் வாழ்கின்றன, அவையனைத்தும். இறுதியாக அவையனைத்தும் அதில்தான் போய்ச் சேருகின்றன. ஆகவே, இத்தகைய பரம்பொருளைப்பற்றி அறிவது நம் கடமையல்லவா! இக்கல்வியின் குறிக்கோள், இக்கல்வியைப் போதிக்கும் முறை, இத்தகைய கல்வியைப்

பெற்றுவோனுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் எல்லாவற்றையும் விளக்கும் வகையில் ஒரு கதை கூறுகிறேன்.

ஒரு சிறு கிராமம். அதில் ஒரு கூரைவீடு. உட்புறத்திலிருந்து ஏதோ ஒரு மெல்லிய குரல் கேட்டது. வெளியே நின்றுகொண்டிருந்த சபாலை "என்ன குழந்தாய்?" என்று கேட்ட வண்ணமாய் உள்ளே சென்றாள். சபாலை சிறு வயதிலிருந்து கூலி வேலை செய்து ஜீவனம் செய்து வந்தவள். அப்படி ஒரு நாள் வேலைக்காக வெளியே சென்றுகொண்டிருந்த சமயம் வழியில் ஒரு குழந்தை கிடக்க, அதை யெடுத்து அணைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். அதைத் தன் குழந்தையைப் போலவே பாவித்து அன்று முதல் வளர்த்து வந்தாள். குழந்தைக்கு வயது ஏழு ஆகிவிட்டது. அச்சிறுவனின் பெயர் 'சத்ய காமன்' என்பது. அவனே சபாலையைக் கூவி அழைத்தவன்.

வேதம் முதலான நூல்களையெல்லாம் பயின்று ஆத்மிக வாழ்க்கை நடத்த விரும்பினான் சத்யகாமன். பாடசாலைகளில் சேர வேண்டுமென்றால் நம் பிறப்பு, வளர்ப்பு, குடிவழி ஆகியவற்றை ஆசிரியனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். "நல்லொழுக்கத்தோடு வாழ இவனால் முடியும்; நல்ல குடியில் வந்தவன்; கற்றுக்கொள்ளத் தகுதியுடையவன்தான்" என்று ஆசிரியர் எண்ணினால்தான் அவரிடம் பாடங் கேட்க முடியும். இதனால் சத்ய காமன் தன் தாயிடம் சென்று தன் குடிவழியைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டான்.

சபாலை சிறிதுநேரம் ஒன்றுந் தோன்றாமல் மரம்போல அசைவற்று நின்றாள். பிறகு அரைமனதுடன் உண்மையைச் சொன்னாள்: "உன் குடிவழி எனக்குத் தெரியாது. என் பெயர் சபாலை. உன் பெயர் சத்ய காமன். அதனால்

யார் உன்னைக் கேட்டாலும் 'சத்யகாம—சபாலே' என்று உன் பெயரைச் சொல்லிக்கொள்'' என்று சொல்லி ஆசி கூறி அவனை அனுப்பிவிட்டாள். சத்ய காமன் நேரே ஒரு முனிவரிடம் சென்றான். அவரைக் கண்டு மிக பணிவுடன் தான் வந்ததன் காரணத்தைக் கூறினான் அதற்கு அம்முனிவர் "உன் குடிவழியைச் சொல்லு, பார்க்கலாம்'' என்றார். சிறிதும் தயங்காமல் "நான் எக்குடியைச் சேர்ந்தவன் என்பது எனக்குத் தெரியாது. நான் என் தாயைக் கேட்டேன். அவளும் தனக்குத் தெரியாதென்று சொல்லி விட்டாள். சத்ய காமன் என்ற என் பெயரையும் சபாலே யென்ற அவள் பெயரையும் சேர்த்து, சத்யகாம—சபாலே யென்று என் பெயரைச் சொல்லச் சொன்னாள்'' என்று சிறுவன் விடையிறுத்தான்.

முனிவருக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. "நீ உள்ளதை உள்ளவாறு சொல்லிச் சத்ய காமன் என்ற பெயருக்குத் தகுதியுடையவனாய்விட்டாய். பரம்பொருட் கல்வி பெறத் தகுதியில்லாதவன் எவனும் இவ்வளவு நேர்மையாக நடந்து கொள்ளமாட்டான். உன் நடத்தையே உனக்குக் கல்விபெற உரிமையுண்டு என்பதைக் காட்டுகிறது. நான் உன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார். சில சடங்குகளையெல்லாம் செய்து முடித்தபின் அம்முனிவர் சில பசுக்களைத் திரட்டிக்கொண்டு வந்தார். சத்ய காமனைப் பார்த்து, "இந்தப் பசுக்களைக் காட்டிற்கு ஓட்டிக் கொண்டுபோ. இங்கு நானூறு பசுக்கள் இருக்கின்றன. இவை எண்ணிக்கையில் ஆயிரமானதும் திரும்பிவா'' என்று சொல்லி வழியனுப்பினார் அப்பெரியர். சத்ய காமனும் அவர் கட்டளைப்படி காட்டிற்குச் சென்று சில காலத்திற்குப் பிறகு திரும்பி வந்தான்.

இவனைக் கண்டவுடன் அம்முனிவர் "சத்ய காமா," என்று புன்னகையுடன் கூப்பிட்டார். 'ஐயா' என்று பதிலளித்த வண்ணமாய் அவர்முன் கைகட்டி நின்றான் சீடன். அவன் முகத்தில் என்றுமில்லாத ஓர் ஒளியைக் கண்ட ஆசிரியர் "சத்ய காமா! உன் முகம் மிக்க ஒளி பெற்று விளங்குகிறது. பரம்பொருளை அறிந்தவனுக்கு இது அறிகுறி. உனக்குப் பரம்பொருளின் தத்துவத்தைச் கற்பித்தது யார்?" என்று கேட்டார்.

"எனக்கு அறிவு புகட்டியவர் மனிதரல்லர், இயற்கை அன்னையேதான். ஆயினும் நான் சீடன், தாங்கள் ஆசிரியர். சரண் புகுந்தேன். உண்மையை விளக்கி அருள் புரிய வேண்டும்" என்று சீடன் பணிந்ததும், உபதேசஞ் செய்தார் முனிவர். இக்கதையிலிருந்து அறியவேண்டிய உண்மைகள் பல. வெறும் பொழுது போக்குக்காக அல்ல இந்தக் கதையைச் சொல்லியது. அப்படிக் கதை சொல்ல இது இடமுமன்று.

பரம்பொருளின் தத்துவத்தை அறிந்திருந்த போதிலும் நேரான முறையில் தகுதியுள்ள ஓர் ஆசிரியனிடம் பணிவுடன் கல்வி கற்கும் முறையின் சிறப்பை உற்று நோக்கவேண்டும். மேலும், மெய்ப் பொருளை அறிய வேண்டுமென்னும் ஆவல் நிறைந்தவனுக்கு இயற்கையன்னைதான் மிகச் சிறந்த ஆசிரியர். பொன்னும் மணியும் பட்டும் சரிகையும் நிறைந்த செயற்கைக் கோயில்களைவிட இயற்கைக் கோயில்தான் இறைவனை எளிதில் அறிவிக்கும். அடர்ந்த ஒரு கானகத்தே எழும் ஒலியே வேதகானம்; அக் கானமே பிருந்தாவனம்" என்றெல்லாம் வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர் நம் நாட்டு முனிவர்கள். திடீரென்று கீழ்வானத்தில் ஒரு சோதி தோன்றுவதும், கதிரவனின்

அழுதிளங் கிரணங்கள் தடாகக் கரையில் இருக்கும் மரங்க ளிடையே நுழைந்து வருவதும், தாமரை முதலிய மலர் களின் மொட்டுக்கள் சிலிர்ப்பதும், உடனே நறுமணம் வானவெளியை நிரப்புவதும், நீலவானம் மெருகுடன் பிரகாசிப்பதும் பறவைகளின் இன்னிசையும், இரவிலே வானத்து மீன்கள் இன்பமுடன் சிரிப்பதும் எவர் மனத் தைத்தான் கொள்ளை கொள்ளாதிருக்க முடியும்? எவர்— தான் மெய்ம்மறந்து கணப்பொழுதேனும் “இங்ஙனம் இயற்கையை உண்டாக்கியவன்தான் எவனோ!” என்று வியப்புறாது இருக்கமுடியும்! தாகூரை உலகம் வியக்கும் ஒரு கவியரசராகச் செய்தது கங்கை நதியின் வனப்பும், அதன் இரு கரைகளிலும் நிறைந்துகிடந்த சோலைகளுமே அல்லவா! இதுவன்றி, இக் கதையிலிருந்து பிறப்பால் ஒரு வருக்குப் பெருமையும் மெய்யறிவுபெறத் தகுதியும் இல்லை யென்பதும், எப்பொழுதும் நன்னெறியினின்று தவறாது நடப்போன் அத் தகுதியைப் பெறுவான் என்பதும் தெளிவு. இத்தகைய கல்வி முறையில் அரண்மனையொத்த கட்டடங்களும் மற்ற ஆடம்பரங்களும் கிடையா; வரை யறைக்குட்பட்ட பாடத்திட்டங்களோ குறிப்பிட்ட நூல் களோ கிடையா. ஆசிரியனிடம் பணிவோடிருந்து அவன் எது செய்யச் சொல்லினும் அதை உடனே செய்து முடிக்கவேண்டும். ஆசிரியர்களோ என்றால் பேரறிவாளி கள். அது மட்டுமா! நூல்கள் மூலம் அறிந்த உண்மை யைத் தாங்களே அனுபவித்து உணர்ந்த பெருமக்கள். புத்தகங்களும் நியமங்களும் ஆன்ம வாழ்க்கையின் முதற் படிகளேயாகும். இதோடு நில்லாமல் மேலும் மேலும் சென்று இறைவன் திருவடிகளைக் கண்ட பெரியோர்களே பரம் பொருட் கல்வியைப் போதிக்கத் தகுந்த ஆசிரியர்கள். அத்தகையோர் நம் நாட்டில் பலர் இருந்திருக்கின்றனர்.

உண்மை அறிவு பெற்றுப் பயன்பெற வேண்டும். இதற்கான வசதிகள் இன்றும் இல்லாமல் இல்லை. ஆனால் மன ஒருமை ஒன்று மட்டும் இருக்கவேண்டும்.

III

'கல்வி' என்ற பொருளைப் பற்றிப் பேசும்போதெல்லாம் எனக்கு இயற்கையின் போதனு சக்தியே ஞாபகத்திற்கு வருகிறது. இது நம் நாட்டுப் பெரியோர்கள் மட்டும் சொல்லிப் போனதன்று. ஆங்கிலக் கவிகளும் இயற்கையில் தத்துவத்தைக் கண்டார்கள்; உண்மை அறிவைப் பெற்றார்கள். ஷேக்ஸ்பியர் "புஸ்தகங்களில் இருக்கும் அறிவை ஓடும் ஓடைகளில் காணலாம். உபதேச வாக்கியங்களைக் கீழே கிடக்கும் கற்களில் காணலாம்" என்று சொல்லுகிறார். வர்ட்ஸ்வொர்த் என்ற ஆங்கிலப் பெருங்கவியும் இயற்கையின் அழகில் சிறுவயதிலிருந்தே ஈடுபட்டார்; ஓடும் ஜலத்திலும் பசுமையான செடி கொடிகளிலும் அழகான மலரிலும் தனது மனத்தைப் பறி கொடுத்தார். அவற்றின் வெளியழகு அவரை மயக்கியது. ஆனால் பக்குவம் அடைந்த பிறகு அவர் இயற்கையின் அழகின் அடியில் இருக்கும் பெரும் உண்மைகளைக் கண்டார். அந்த அனுபவத்தினால் ஏற்பட்ட பாடல்கள் இன்றைக்கும் ஆங்கில இலக்கியத்தில் முதலிடம் பெறுகின்றன.

இது வெறும் வாய்ப்பேச்சன்று. இயற்கையைக் கண்டு மகிழ்வதால் ஒருவன் அதனோடு நின்றுவிடுவதில்லை. இயற்கை அன்னை எப்பொழுதும் நமக்குச் சில பாடங்களைப் போதிப்பாள். கம்பர் அடிக்கடி இயற்கை அழகைக் கண்டு மயங்கினார். அதில் ஈடுபட்டு மனத்தைப் பறி கொடுத்தார். அத்துடன் நின்று விடவில்லை. இயற்கையின்

அழகு அவரை ஆண்டவனருகில் கொண்டு செல்லும் ஒரு வாகனமாக இருந்தது. அவர் இயற்கையின் அழகை மாத்திரம் அனுபவித்து அதை நமக்குப் போதிக்கவில்லை. அவர் அதிலிருக்கும் தத்துவத்தையும் போதிக்கிறார். இதை இராமன் "அந்தியை நோக்கினன் அறிவை நோக்கினன்" என்ற கம்பரின் வாக்கியத்தில் அழகுறக் காணலாம். அந்தியின் அழகிலே ஈடுபட்டுக் கம்பர் திருப்தி அடையவில்லை. அந்த ஈடுபாட்டை மெய்ப்பொருளை அறிய ஒரு கருவியாக உபயோகித்துக் கொண்டார்.

சூரியன் மறைவதைப் பார்க்கிறார் கவி. அதன் அழகு கவியின் மனத்தைக் கவருகிறது. அத்துடன் அதில் இருக்கும் தத்துவமும் அவருடைய மனக் கண்ணுக்குப் புலப்படுகிறது. சூரியன் மறைவதில் வாழ்க்கையின் நிலையாமையைக் காண்கிறார் கவி. ஓர் அரசன் எட்டுத்திசைகளையும் வென்று மகிழ்கிறான். ஆனால் கடைசியில் அந்த அரசன் இரத்தமோடும் போர்க்களத்திலே உயிர் விடுகிறான். சூரியன் மறையும் காட்சி இந்த அரசன் வாழ்க்கையைத் தான் ஞாபக மூட்டுகிறது.

"விரிஇருள் பகையை ஓட்டித்
திசைகளை வென்று மேல்நின்று
ஒருதனித் திகிரி உந்தி,
உயர்புகழ் நிறுவி, நானும்
இருநிலத்து எவர்க்கும் உள்ளத்து
இருந்தனன் அறத்தின் வீந்த
செருவிடை வீரன் என்னச்
செங்கதிர்ச் செல்வன் சென்றான்"

என்று அழகாக ஒரு தத்துவத்தைப் போதிக்கிறார்.

IV

சிறந்த கல்வியாளர்கள் கூறும் சீர்திருத்தங்களை ஆராய்ந்து, அவற்றிலுள்ள நல்ல அம்சங்கள் அனைத்தையும் கொண்டுதான் ஒரு கல்வித்திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். உருவாக்கியபின் அதை மாற்றுதல் கஷ்டம்; சரியுமன்று. அப்படி மாற்றவேண்டிய நிலை வந்தாலும், கல்வித் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை அடிக்கடி மாற்றுதல் என்பது கல்விக்குச் சாவு தேடுவதாக முடியும். அதனால் ஒரு நாட்டுக்குக் கல்விமுறையை உருவாக்குவது என்றால் இதற்கு முன்னர் நாகரிகத்தாலும், பண்பாட்டாலும் மேம்பட்டிருந்த நாடுகளில் எத்தகைய கல்விமுறை கையாளப்பட்டு வந்தது? இத்துறையில் உழைத்து அனுபவம் பெற்ற பெரியார்கள் என்ன சொல்லிப் போயிருக்கிறார்கள்? என்பதை எல்லாம் நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. நமது வருங்காலத்தைத் தற்கால நிலையைக்கொண்டு நிச்சயிக்கிறோம். ஆனால் தற்கால நிலையே நம் பண்டைக்காலத்தின் விளைவு என்பதை அறவே மறந்துவிடுகிறோம். ஒருவனுக்கு ஒரு வியாதி வருகிறது என்று வைத்துக்கொள்வோம். வைத்தியர் வருகிறார்; அவன் உடலைப் பரிசோதிக்கிறார்; நோயின் தன்மையை அறிகிறார். ஆனால் இப்படிச் செய்யும் வைத்தியம் தக்க பலன் தராது. முழுப்பலன் வரவேண்டுமானால், இந்நோய் உண்டானதன் காரணத்தை ஒருவாறு ஊகித்து அறியவேண்டும். நோயாளி இதற்கு முன் எந்தச் சூழ்நிலையில் இருந்தான்? என்ன உணவு உட்கொள்ளுவது வழக்கம்? அவன் மனநிலை எப்படியிருக்கிறது? என்பதையெல்லாம் நன்றாகத் தெரிந்துகொண்டு, நோயின் தன்மையை நிர்ணயித்து, அதற்குத் தக்க மருந்தரைத்துக் கொடுப்பது சிறந்த முறை. இப்படிப் பார்ப்போ

மானல் நம் நாட்டின் தற்காலக் கல்விமுறையில் உள்ள ஊழல்களையும் வருங்காலத்திற்கான சீர்திருத்தங்களையும் கவனிப்பதற்குப் பண்டைக்காலத்தில் சிறந்திருந்த பண்பாட்டிற்கு எத்தகைய கல்விமுறை கருவியாயிருந்தது என்பதை அறியவேண்டும். மேலும் கல்வித்துறையில் உழைத்த பெரியோர்களுடைய வாக்கியங்களைப் பார்த்தால் அங்கும் பண்டைய பண்பாடு, பண்டைக் கல்விமுறை இவற்றைப் பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. ஆதலால் பண்டைய நாளில் உலகம் வியக்குமாறு பண்பாட்டினால் சிறந்தோங்கிய இரண்டு பெரு நாடுகளில் பின்பற்றப்பட்ட கல்விமுறைகளை ஆராய்வோம்.

முதலாவதாக கிரேக்க நாட்டை எடுத்துக்கொள்வோம். அந் நாட்டின் தலை நகரம், ஏதென்ஸ். அங்கிருந்த எல்லா ஆண்பிள்ளைகளும் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆனால் பெண்களைப் பற்றி ஒருவரும் ஊக்கம் கொள்ளவில்லை. பெற்றோர்களே தங்களுக்கு வேண்டிய ஏதேனுமொரு பள்ளியில் தன் குழந்தைகளைச் சேர்த்து விடவேண்டும். பள்ளிக்குக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. சர்க்கார் எந்தப் பள்ளியையும் நடத்தவில்லை. தனி மனிதர்கள் அல்லது கல்விக்கழகங்கள் பள்ளிகளை நடத்த நேர்ந்தது. பள்ளி ஆசிரியர்களுக்கு எவரும் மரியாதை கொடுக்கவில்லை. மாணவர்களிடமிருந்து கட்டணத்தை வசூலிப்பதே ஒரு பெருந் தொல்லையாக இருந்தது. ஏழை மக்களும் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பித் தீரவேண்டும். ஆதலால் பள்ளிக் கட்டணம் மிகக் குறைவாயிருந்தது. இதிலிருந்து வரும் வருமானம் ஆசிரியர்களுக்குப் போதவில்லை. மக்களில் பெரும்பாலோர்

எழுத்தறிவைக் கொண்டு திருப்தி அடையவில்லை. சங்கீதம், உடற்பயிற்சி இவற்றைக் கற்றுக்கொண்டால்தான் பரந்த கல்வி பெறமுடியும் என்று மக்கள் அறிந்தார்கள். இதனால் சங்கீதத்திற்கான பள்ளிகளும் உடற்பயிற்சிக்கான மல்லக சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பினால் நேராகப் பள்ளிக்குச் சென்று பாடங்கேட்கிறார்களா என்று அறியவும், வீதிகளில் குறும்புச் சண்டைகள் இல்லாமல் சென்று வருகிறார்களா என்று கவனித்துக் கொள்ளவும் பணக்காரப் பெற்றோர்கள் தங்களிடமிருந்த அடிமைகளில் ஒருவனை நியமிப்பார்கள். இவன் குழந்தைகளுடன் பள்ளிக்குச் செல்லுவான்; வகுப்பறைக்கு வெளியே காத்திருப்பான்; ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குச் செல்லும் போது அவர்களது நடத்தையைக் கவனித்துக் கொள்வான். பிறகு பள்ளி முடிந்ததும் அவர்களை அழைத்துக் கொண்டு வீடுவந்து சேருவான். அந்தக் குழந்தைகளின் நடத்தையும் ஒழுக்கமும் அவன் கையில் ஒப்புவிக்கப் பட்டன. மென்மையான நடத்தையைச் செல்வமெனக் கருதிவந்தார்கள் கிரேக்கர்கள். வயதில் பெரியவர் ஒருவர் அறைக்குள் நுழைந்தால், அவர் யாராயினும சரி, அவ்வறையிலுள்ள சிறுவர்கள் எல்லோரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தியாக வேண்டும்.

குழந்தைக்கு வயது ஆறு ஆனதும், அதைப் பள்ளிக்கு அனுப்ப ஆரம்பிப்பார்கள். ஆரம்பக்கல்வி ஆறு வயதிலிருந்து பதினான்கு வயது வரை புகட்டப்படும். பள்ளியில் உலோகத்தாலான ஒரு கருவியைக்கொண்டு மெழுகாலான ஒரு பலகையின்மேல் எழுத்துக்களை எழுதிப் பழகுவார்கள். பிறகு ஆசிரியர் ஒரு பாடத்தைச் சொல்லிக்

கொண்டே போவார். அதைக் குழந்தைகள் தங்கள் பலகைகளில் எழுதிக் காட்டுவர். இங்ஙனம் சொல்லி எழுத வைப்பார்கள். தேசிய இலக்கியங்களிலிருந்து பெரும் பகுதிகளைக் குழந்தைகள் மனப்பாடஞ் செய்வர். அவற்றை ஆசிரியர் எப்பொழுது கேட்டாலும் தவறுமல் ஒப்புவிக்கப் பழகிக் கொள்வார்கள். 'ஹோமர்' என்ற தேசியக் கவியின் கவிதை முழுதும் பாடமாக அமைவதுமுண்டு. பொருள் விளங்காத பாடப் பகுதிகளை ஆசிரியர் விளக்கிச் சொல்வார். பாடங்களைப் பாராமல் ஒப்புவித்தல்தான் பள்ளிக்கல்வியில் முதலிடம் பெற்றிருந்தது. பாடங்களை ஒப்புவிக்கும்போது சைகைகள் செய்வதுமுண்டு. இதற்குக் காரணம், அக்காலத்தில் 'கவிதை யென்றுல் அதை உரக்க ஒப்புவித்தால் போதாது; அதை நடித்துக் காட்டவும் வேண்டும்' என்ற கொள்கை மக்களிடையே இருந்ததே யாகும். எளிய கணக்கு வகைகளும் சொல்லித்தரப்படும். கிரேக்கர்களின் எண்முறை மிகவும் கடினமானது. இதற்காகச் சிறு கூழாங்கற்களைக் கொண்டு ஆரம்ப வகுப்புகளில் கணக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்.

சங்கீதப் பள்ளிகளைப் பற்றிப் பார்ப்போம். புல்லாங்குழல் பெரும் பான்மையோருக்குக் கற்றுக்கொடுக்கப் பட்டது. ஆனுல் இதில் உயர்ந்தவகை ஒலிகளை எழுப்புவது கடினமாதலால் அவை உயர்தரப் பள்ளிகளுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டன. சாதாரண சங்கீத வகைகளே ஆரம்பப் பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்படும். இதற்குப் பின் 'லையர்' என்னும் வீணைபோன்றதொரு (கம்பிக்) கருவியில் பயிற்சி அளிக்கப்பட்டது. கிரேக்க நாட்டில் பிரபலமான இசைக் கருவி 'லையர்' என்பதுதான். சாதாரணமாகப் பாடுவது என்றுலே இக்கருவிக்கு ஒப்பப் பாடுவ

தென்றே கொள்ளப்பட்டது. இதனாலேயே கிரேக்க, ஆங்கில இலக்கியங்களில் 'லிரிக்' என்றே ஒரு வகைக் கவிதை ஆக்கப்பட்டு வந்தது. தேசியப் பாக்கள் அனைத்தும் பண்ணோடு பாடப்படும். அப்போது இக் கருவியையும் வாசிப்பார்கள். சாதாரணமாக ஒரு வீட்டுக்கு யாராவது விருந்தாளி வந்தால், சாப்பாடு முடிந்ததும் வந்த விருந்தாளி சில பாட்டுக்கள் பாடுவது வழக்கமாயிருந்தது. அவ்வேளைகளில் தேசியப் பாக்களே பாடப்படும்; 'லையர்' என்ற கருவியுடன் சேர்ந்தே பாடுதல் நிகழும். பரந்த கல்வி என்ற முறையில் வர்ணந்தீட்டுதல், ஓவியம் வரைதல் இவை இரண்டும் பயிலப்பட்டு வந்தன. பணக்காரப் பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு இவை அனைத்திலும் பயிற்சி அளிப்பார்கள்.

இவை தவிர, ஒரு பையன் மல்லக சாலைகளுக்கும் சென்று பயிற்சி பெறுவான். அங்கு 'குஸ்தி' போடுதல் முதலான உடல் பயிற்சிகளில் பிள்ளைகளைப் பழக்க ஒரு வலிய மனிதன் நியமிக்கப் பட்டிருப்பான். உடல், ஒழுக்கம் இரண்டும் சரிவர வளர உடற்பயிற்சி உதவியாயிருக்கும் என்பது அவர்களது முழு நம்பிக்கை. உடற்பயிற்சியில் நாட்டியமும் சேர்ந்ததே. குழலின் இசைக்குத் தக்கபடி நாட்டியம் ஆடப் பிள்ளைகள் கற்றுக் கொள்வார்கள். இவை தவிர இன்னும் எத்தனையோ வகை விளையாட்டுக்கள் உண்டு. இவற்றில் ஆசிரியன் நடுநிலை வகித்து வெற்றி யாருக்கு என்று முடிவு கூறுவான். படித்தல், ஒப்புவித்தல், வர்ணந்தீட்டுதல், இசை, பொது அறிவு, உடற்பயிற்சி ஆகிய எல்லாவற்றிலும் போட்டிகள் நடைபெறும். இவற்றில் வெற்றி பெறுவோருக்கு அரசியலாரோ அவ்வவ்வூரிலுள்ள கலைக் கழகங்களோ பரிசுகள் வழங்கும். இங்ஙனம்

பிள்ளைகளுக்குப் பயிற்சியில் ஊக்கம் ஊட்டிவந்தார்கள். சிறு பிள்ளைகள் அக் கல்வி முறையில் சிறிதும் அதிருப்தி அடைய இடமில்லாமல் இருந்தது.

ஏறக்குறைய பதினன்கு வயதானதும் ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டு அவர்களையும் தொழில் செய்து பிழைக்க அனுப்புவார்கள். கைததொழிலோ வியாபாரமோ செய்து அவனும் பொருளீட்ட ஆரம்பிப்பான். பணக்காரர்களானல், தங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி முடிந்ததும் நான்கு வருடங்களுக்கு உயர்தரக் கல்வியில் பயிற்சி கொடுப்பர். ஏனெனில் பதினெட்டு வயதானல்தான் ஒருவன் இராணுவத்தில் சேர்ந்து சேவை புரியமுடியும் ஏதென்ஸில் நிலவிய ஜனநாயகத்தைப்பற்றி அறியவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுணடு. எல்லோருக்கும் அறிவுபெற வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. பலதிறப்பட்ட வேலைகளும சம்பாஷணைகளும் இவ்வார்வத்தை அதிகரிக்கச் செய்தன. சுதந்திர அரசியலாதலால் ஒவ்வொருவனும் தன் முக்கியத்துவத்தை உணர்ந்தான்; ஆகவே சமூகத்தில் பெருமைப் படத்தக்க இடங்களைப் பெற முயன்முன். இதனுல் முழுக் கல்விக்குத் தேவை அதிகமாயிற்று. (ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட அறிஞர்கள் பலர் ஏதென்ஸுக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்களில் சிலர் வேறு நாடுகளிலிருந்தும் வந்திருந்தனர். இங்ஙனம் வெளிநாடுகளிலிருந்து வந்த 'ஸோபிஸடு'கள் என்று அழைக்கப்பட்ட ஆசிரியர்கள முக்கியமாகக் கணிதம் (அதிலும் ரேகாகணிதம்) பூகோளம், சரித்திரம், திறம்படப் பேசுதல் ஆகிய இக்கலைகளில் தனிச் சிறப்புற்று விளங்கிஞர்கள். ஆகவே, ஏதென்ஸ் நகரில் இவர்கள் வந்ததும் அங்கு இக்கலைகள் விரைவில் பரவ

லாயின. இவ்வாசிரியர்களுக்கு ஏராளமான பணம் வாரியிறைக்கப்பட்டது. பெருஞ் செல்வம் பெற்ற இவ்வாசிரியர்கள் உண்மையைச் சிறிதும் இலட்சியஞ் செய்யாமல் சொல் நயத்திலும் தர்க்கத்திலும் தம் வாழ்நாளை முற்றிலும் செலவழித்து வந்தார்கள். தர்க்கஞ்செய்து வெற்றி பெறுதல் ஒரு தனிக் கலையாயிற்று. உண்மைக்காகப் பாடுபடுவோர் இல்லாது போயினர். இருப்பினும் இந்த 'ஸோபிஸ்டு'கள் வெகு சீக்கிரத்தில் பிரபலமானார்கள். இவர்களைத் தேடிக்கொண்டு வந்த மாணவர்கள் எண்ணிறந்தவராயினர். இம் மாணவர்கள் 'ஸோபிஸ்டு'களைத் தேடிக்கொண்டு ஊர் ஊராகத் திரியவும் தயாராயிருந்தார்கள். இவ் வழிகளால் கற்பதற்கார்வமும், ஆராய்ந்தறியும் சக்தியும், தர்க்கஞ்செய்து வெற்றி பெறுவதில் ஊக்கமும் குறையாமல் பாதுகாக்கப்பட்டன.

பொருள்களினுள்ளும் சொற்களினுள்ளும் நுழைந்து பார்ப்பது கிரேக்கர்களின் தனிச்சிறப்பு என்றே சொல்லலாம். எதைக் கண்டாலும் அதன் அடிப்படைக் காரணத்தை அறிய ஆவல் மேலிட்டது அவர்களுக்கு. கிரேக்கப் பண்பாடே திரண்டுவந்ததுபோல் தோன்றினார் 'ஸாக்ரடீஸ்' என்ற பெரியார். அவர் நுண்கண் கொண்டு பொருள்களைக் காணும் கலையின் எல்லையைக் கண்டுவிட்டார். 'கேள்வியும் பதிலும்' என்ற முறையை அவர் கையாண்டார். எதைப் பார்க்கினும், எதைக் கேட்பினும் அதைப்பற்றிப் பல கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு விடையறிதல் என்பது இம்முறை. உண்மையைப் புறக்கணித்து விட்டுத் தர்க்கத்தையே நம்பிவந்த காரணத்தால் கிரேக்கர்களின் அறிவுநிலை வெகு விரைவில் சீர்குலைய ஆரம்பித்தது. இவ்விதமாக 'ஸோபிஸ்டு'கள் புகுத்திய

புதுமுறைக் கல்வி கிரேக்கர்களின் வாழ்வைக் குலைத்துப் பாழாக்கிவிட்டது. உண்மையைத் தேடிச் சென்று அடைவதே கல்வியின் நோக்கமாயிருத்தல் வேண்டும். மனத்தின் எண்ணுஞ் சக்தியை நம்பி மோசம் போகலாகாது. மனத்தின் வழி நாம் செல்ல முற்பட்டால் அது எளிதில் சுற்றும் புலன்களில் நிலைத்துவிடும். பிறகு நம் அறிவை நாம் புலன்களுக்கு அடிமையாக்கி விடுவோம். இந்த ஆபத்து நேராவண்ணம் காக்கவேண்டியது நம் கடமை.

V

இனிப் பண்டைக்காலத்தில் நம் நாட்டில் இருந்த கல்வி முறையைச் சிறிது பார்ப்போம். குழந்தைகளுக்கு ஏழு வயதாகும் வரையில் அவர்களுடைய கல்வி முழுதும் வீட்டிலேயே நடைபெறும். ஏழுவயது முதல் பதினாறுவயது வரையில் ஒரு பள்ளியில் சேர்ந்து கற்று, பிறகு பல்கலைக் கழகங்களில் சேர முற்படுவர். குழந்தைப் பருவம் ஏழாவது வயதில் முடிகிறது. ஆகவே அப்பருவத்தில் குழந்தை தன் உடலைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்; பாடங்கள் அனைத்தும் விளையாட்டு மூலமாகவே கற்றுக் கொடுக்கப் படவேண்டும்; சிறு குழந்தைகளுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். இக் கருத்தை முற்றிலும் தழுவியிருந்தது பண்டைக்காலக் கல்விமுறை. ஒட்டுக் குடும்ப முறை பழக்கத்திலிருந்ததால் ஒவ்வொரு வீட்டிலும் பல குழந்தைகள் இருக்கும். அவை ஒன்று சேர்ந்து தங்களுக்கான ஒரு சமூகம் அமைத்துக் கொள்ளும். அச் சமூகத்தில் பழகுவதால் தெரிந்தும் தெரியாமலும் அன்பு, மென்மையான நடத்தை, பிறர்க்குதவும் மனம் ஆகிய நற்குணங்கள் குழந்தைக்கு ஏற்படுகின்றன. தற்காலத்தில் குடும்பங்கள் அனைத்தும் பிரிந்துபோய் சிறு சிறு குடும்பங்

களாக ஆகிவிட்டமையால் குழந்தைகளுக்கு வீட்டைவிடப் பள்ளிக்கூடமே விளையாட்டுக்கான வசதிகளை அதிகம் அளிக்கிறது. ஆகவே அது பள்ளிக்கூடத்திலேயே காலங் கழிக்க விழைகிறது. ஆனால் இவ்விளையாட்டுத் தனத்தை, ஏழாம் ஆண்டுக்குப்பின் சிறிது சிறிதாகக் குறைத்து வேறு வழிகளில் குழந்தைகளின் மனத்தைத் திருப்புவர் பெற்றோர். ஏழிலிருந்து பதினான்கு ஆண்டுகள் வரை குழந்தையின் மனம் பொருள்களைச் சீக்கிரம் உணரும் நிலையிலிருக்கும். அதுவுமன்றி ஞாபக சக்தி அதிகமாயிருப்பதும் இப்பருவத்தில்தான். ஆகவே நம் முன்னோர்கள் இப்பருவத்தில் வீரம், நல்லொழுக்கம் இவற்றால் மேம்பட்ட சரித்திர வரலாறுகளைக் கதைகள் மூலம் குழந்தைகளுக்குச் சொல்லுவர். பிற நாடுகளைப் பற்றியும் புராணங்களைப் பற்றியும் சொல்லிச் சேவைக்கான ஊக்கத்தையும், நம்பிக்கையையும் உண்டுபண்ணுவர். இப்படியாகத் தன் மனத்தையும் உணர்ச்சிகளையும் சரியான வழியில் அடக்கிச் செல்லும் குழந்தை தன் முதற் பருவத்திலிருந்து பிள்ளைப் பருவத்திற்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் செல்கிறது. பதினான்கு முதல் இருபத்தொன்று வரை அப்பிள்ளைக்குக் கடினமான படிப்பு தரப்படும். ஏறக்குறையப் பதினாறு ஆண்டுகள் நிரம்புவதற்குள் அப்பிள்ளையின் தனித் தகுதி தெரிந்துவிடும். இத் தகுதிக்கேற்ப ஒரு தொழிலை நிச்சயித்துக்கொண்டு அத் தொழிலுக்கான கல்வியைப் பயில ஆரம்பிக்கும். அப்பிள்ளை இங்ஙனம் பதினாறாம் ஆண்டு ஆரம்பமாகி ஐந்து ஆண்டுகளுக்கு நடைபெறும் தனிக்கல்வி, அல்லது சிறப்புக்கல்வி இவ்வகையாக மனித மனோதத்துவத்தை நன்கு அறிந்து, அதற்கேற்பக் கல்வி முறை படிப்படியாக அமைக்கப்பட்டிருந்தது.

பண்டைக் காலத்தில் அரசரோ, அவரது அதிகாரிகளோ கல்விச்சாலைகளின் வேலையிலும் கல்வி முறைகளை வகுப்பதிலும் சிறிதும் தலையிட மாட்டார்கள். நிலங்களும் பொருட் செல்வமும் வேண்டிய அளவு கொடுத்துவிட்டுக் கல்விச்சாலைகளை நடத்துமாறு அறிஞர் சிலரைப் பணிந்து கேட்டுக்கொள்வர். அதன்படி அவர்கள் பொறுப்பு ஏற்று நடத்துவர். அத்தகைய கல்விக் கழகங்களில் கல்வியிற் சிறந்தார்க்கு அல்லாது வேறு எவர்க்கும் மரியாதை செலுத்தப்பட மாட்டாது.

அடுத்தபடி பரம்பொருட் கல்வி, உலகியற் கல்வி என்ற பாகுபாடே பண்டைக் காலத்தில் நம் நாட்டில் கிடையாது. ஆச்சிரமங்களில் நடத்தி வந்த பள்ளிகள் அனைத்திலும் பரம்பொருட் கல்வியே தரப்பட்டது. உலக வாழ்வுக்கான அறிவை அதற்கு அடுத்தபடி வைத்திருந்தார்கள். பரம்பொருட் கல்வி பயிலும்போது தற்செயலாக உலகியற் கல்வியையும் மாணவன் பெறுவான். ஆகவே உலகியற் கல்வியென்பது பரம்பொருட் கல்வியைப் பெற ஒரு கருவியாகவே கருதப்பட்டது மனிதனுக்குள்ள உணர்ச்சி, அறிவு, மன வலிமை ஆகிய மூன்று சக்திகளையும ஒருங்கே சரிவர வளர்த்து வந்தார்கள் நம் முன்னோர்கள். காலஞ் செல்லச் செல்ல இந்நிலை மாறிப்போய்விட்டது. புது முறைப்படி அறிவு ஒன்று மட்டும் வளர்ந்ததேயல்லாமல் உடல் வலிமையும் அதனுதவியால் பெறும் உணர்ச்சிகளும் மன வலிமையும் குன்றிப் போய்விட்டன. இதனாலேயே நம்மில் பலர் நரம்புத் தளர்ச்சி, விரைவில் கிழத்தனம் அடைதல், கண்களின் பார்வை குறைதல் ஆகிய பல இன்னல்களுக்கு ஆளாகிறார். உணர்ச்சிகளைச் சரிவர வளர்க்காமல் அறிவை மாத்திரம் காப்பாற்றி வந்ததன் விளைவாகத் தன்னலம்.

வளர ஆரம்பித்துவிட்டது. இதனால்தான் இந்நாட்டில் சமூக, தேசியக் கருத்துக்கள் அழியத் தலைப்பட்டன. தனி மனிதன் தன் நாட்டுக்கும், சமூகத்திற்கும் செய்யவேண்டிய கடமைகளை மறந்து, தன் உரிமைகளை மட்டும் பெற முயன்றான். சமூக உணர்வு அறவே ஒழிந்து தவிக்கிறோம் இன்று. பொதுக் காரியங்களுக்காக உழைப்பதற்கும், சுய நலனற்ற சேவைக்கும் அடிப்படை சமூக உணர்வு. உணர்ச்சிகளை அடக்கிச் சரிவர வளர்த்தல்தான் சமூகத்தின் பொதுநிலை உயரும்.

பண்டை இந்தியக் கல்வி முறையில் நாம் குறிப்பாகக் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. இயற்கை எழிலிடையே பள்ளி அமைந்திருத்தல்தான் நல்லது என்பதே அது. இதனால்தான் ஆச்சிரமங்கள் அனைத்தும் ஊர்களுக்குப் புறம்பே இயற்கைப் பொருள்களிடையே அமைந்திருந்தன. கல்வி முறையோ ஆழ்ந்த அறிவை ஊட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. விரைவில் பயிற்சி முடிய வேண்டும் என்று எவரும எண்ணவில்லை. ஆசிரியன் பாடத்தைப் படித்து அதை விளக்கி உரை கூறும் முறை பின்பற்றப்படவில்லை. உண்மைக் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவதோடு ஆசிரியன் வேலை முடிந்துவிடும். பிறகு மாணவன் தன் சக்தியாலும், இயற்கை அன்னையின் உதவியாலும் அக்கருத்துக்களின் சீரிய பொருளைத் தெளிவாக உணர்ந்து பயன் பெறுவான். இங்ஙனம் கல்வி பெறுவதில் ஊக்கமும் முயற்சியும் மாணவன்பால் அதிகம் இருக்க வேண்டும். அவனுக்கு அடிப்படைக் கருத்துக்களைக் கொடுத்து உதவுவதுதான் ஆசிரியனின் கடமை. இதனால் 'உடன்பாட்டுக் கல்வி' கொடுக்க முடிந்தது. அதாவது மாணவனிடமுள்ள சக்தியை வெளிப்படுத்தும் வகையில்

கல்வி முறையை அமைக்க முடிந்தது. இக்காலத்தில் மாண வனிடம் உள்ள இயற்கைச் சக்திகளைப்பற்றித் தெரிந்து கொள்ளாமல் உபயோகமற்ற பல விஷயங்கள் அவனுக்குள் பலாத்கார முறையில் புகுத்தப்படுகின்றன. இவ்வித 'எதிர் மறைக் கல்வி'யால் விளையும் கேடு அளவிட முடியாதது. நம் நாட்டில் சில பள்ளிகளிலேனும் யோகங்களைச் சரிவர சொல்லிக் கொடுத்து மாணவனை நல்ல யோகியாக்கி உலகத் திற்குக் கொடுப்பார்களானல் அவர்கள் உலக வாழ்க் கையை மேற்கொண்ட போதிலும் ஒழுக்கந் தவருது நடப் பர். இங்ஙனம் பரம்பொருள் அறிவைப் பெற்றும் உலகில் வாழ்பவனே சமூகத்திற்கு உண்மையான தொண்டு செய்ய முடியும். இதை அறிந்துதான் பண்டைய நாளில் ஆச்சிர மங்களில் சில வயது வந்த அறிஞர்களும், மாணவர்களும் ஒன்று கூடி வாழ்ந்தனர். மாணவர்களுக்கு அறிவுக் கலை களும் தொழிற் கலைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டன. கற்றறிந்த பெரியோர்கள் வாழ்ந்தமையால் அவ்விடம் புனிதமாயிற்று. அத்தகைய புனிதமானதோரிடத்தில் அமர்ந்திருந்து மாணவர்கள் கல்வி பயின்றுர்கள். இன்றும் சில காடுகளில் ஆச்சிரமங்கள் அமைத்து அங்கு முழு துணர்ந்த பெரியோர்கள் கல்வி போதிப்பார்களானல் இந்திய நாடு மறுபடியும் உலகின் ஆன்மிகச் சிகரமாக விளங்க முடியும்.

பௌத்த விஹாரங்களும் இதேபோன்று இயற்கைச் சூழ்நிலையில் பல்கலைக் கழகங்களை அமைத்திருந்தன. விசால மான இடத்தைச்சுற்றி உயர்ந்த ஒரு மதிலை எழுப்பிவிடு வார்கள். அதற்கு ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வாயில்கள் இருக்கும். நலாந்தா என்னுமிடத்தில் இருந்த பல்கலைக் கழகத்திற்கு ஒரேவாயில்தான் இருந்தது.

விக்ரமஷீலா என்ற இடத்தில் இருந்த கழகத்திற்கு ஆறு வாயில்கள் இருந்தனவாம். இது எங்ஙனமாயினும் ஒவ்வொரு வாயிலும் மிக்க கவனத்துடன் காவல் செய்யப்பட்டு வந்தது. இம்மதிற் சுவருக்குள் அழகான கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கோபுரங்கள், வில் மண்டபங்கள், அடர்ந்த மரங்கள் இடை கூடாரங்கள் பூஞ்சோலைகள், நீர் ஊற்றுக்கள் ஆகிய அனைத்தும் காணப்பட்டன. மலர்கள் மிதக்கும் ஏரிகளும் புதர்களும் அதன் அழகுக்கு உதவி செய்தன. இயற்கை எழிலின் சக்தி அனைவராலும் உணரப்பட்டது. இந்து, பௌத்த சமய நூல்கள் பயிலப் பட்டு வந்தன. கல்வித் திட்டத்தில் இடம், கூற்று, இலக்கணம், வைத்தியம் இவைகளும் உயர்ந்த இடம் பெற்றிருந்தன. அசோகர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்தியசாலைகளை ஏற்படுத்தினார் என்பதை நினைத்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். அங்குப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருந்த துறைகள் பின்வருமாறு:—ஐந்து சித்தாந்தங்கள், தர்க்க நூல், இலக்கணம், தத்துவம், ஆன்மிகம், சரித்திரம், கணக்கு, ரேகா கணிதம், வானநூல், சம்ஸ்கிருதம், பாலி, இசை, தந்திரமுறை வைத்தியம். இன்னும் மாக்டனெல் என்னும் சரித்திர ஆராய்ச்சியாளர் "விஞ்ஞானம், உச்சரிப்பு முறை, இலக்கணம், கணிதம், உடல் கூற்று இலக்கணம், வைத்தியம், சட்டமுறை ஆகிய இத்துறைகளில் இந்தியர்கள் கிரேக்கர்களைவிட வெகு முன்னணியிலிருந்தார்கள்" என்று கூறுகிறார். இதனால் பண்டைக்காலத்தில் நம் நாட்டில் எந்தெந்தத் துறைகளின் மக்கள் பயின்று வந்தார்கள் என்பது தெரிகிறது. நமது முன்னோர்களுக்குப் பரம்பொருட் கல்வியைத் தவிர வேறொன்றும் தெரியமற்

போகவில்லை, இன்னும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். சாந்தோக்கிய உபநிடத்தில் நாரதர் என்ற முனிவர் சனத் குமாரர் என்பவரிடம் சென்று தனக்குக் கல்வி போதிக்கும்படி வேண்டிக்கொண்டதாக ஒரு வரலாறு வருகிறது. சனத் குமாரர் "என்ன துறைகளில் பயின்றிருக்கிறாய்?" எனக் கேட்க, நாரதர் கூறும் பதில் பின்வருமாறு.—'நான் நான்கு மறைகளையும், இதிகாசங்களையும், புராணங்களையும், இலக்கணம், ஆசார முறைகள், எண்களைப்பற்றிய நூல்கள்; பௌதிகம், தர்க்கம், நிர்வாகமுறை, 'டெக்னலஜி' என்று இப்பொழுது கூறப்படும் துறை, ஐம்பெரும் பூதங்களைப் பற்றிய விவரங்கள், வில்வித்தை, வானநூல், நுண் கலைகள் (நாட்டியம், இசை, சிற்பம், வர்ணந்தீட்டுதல்) ஆகியவற்றையும் கற்றுள்ளேன்."

இதிலிருந்து, இப்பொழுது நம் பல்கலைக் கழகங்கள் சொல்லித்தரும் கல்வித்துறைகளில் ஏறக்குறைய அனைத்தையும் நம் முன்னோர்கள அறிந்திருந்தார்கள் என்பதைக் காணலாம். பள்ளி அல்லது கல்லூரியில் படித்து முடிக்கும்வரை பிரமசரிய வாழ்க்கையை மாணவர்கள் தவறாது பின்பற்ற வேண்டியிருந்தது. இந்தப் பிரமசரிய வாழ்க்கையை மறுபடியும் மாணவர்க்கு கட்டாயமாக்கவேண்டும். மனு என்ற பெரியார், ஒரு மாணவனுக்கு வேண்டிய குணங்களைச் சொல்லும்போது, எளிய உடை, எளிய உணவு, கடினமான படுக்கை, பிரமசரிய வாழ்க்கை ஆகிய நான்கும் இன்றியமையாதன எனக் கூறுகின்றார். இந்தச் சட்டத்திற்கு இளவரசனையினும் பிரபுவானாலும் சாதாரண மனிதனானாலும் விலக்கு ஆகமாட்டான். அனைவருக்கும் ஒரே விதச் சலுகை காட்டப்பட்டு வந்தது. எவ்வளவு பணக்காரர்கள் ஆனாலும் சரி, கல்வி பயிலும் பருவத்தில்

மென்மையான, ஆடம்பர வாழ்க்கை வாழ அனுமதிக்கப் படமாட்டார்கள். இதனால் அவர்கள் நோயற்று நீண்ட காலம் வாழ்ந்திருந்தார்கள்.

(தக்ஷசிலம் என்னும் இடத்தில் இருந்த கலைக் கழகத்தில் மாணவர்களுடைய உடற்பயிற்சிக்கும் உரிய இடம் தரப்பட்டது. ஆனால் பௌத்தக் கழகங்களில் உடல் வலிமையை வளர்க்க யாதொரு ஏற்பாடும் செய்திருந்ததாகத் தெரியவில்லை. தக்ஷசிலத்தில் மாணவர்களுக்கு வில் வித்தை, வாள் வீச்சு, ஈட்டி உபயோகித்தல் ஆகிய துறைகளின் மூலம் உடற்பயிற்சியும் தற்காப்புக்கான பயிற்சியும் கொடுக்கப்பட்டு வந்தன. அங்கு இராணுவ, வைத்திய, சட்டக் கல்லூரிகள் தனித்தனியே அமைக்கப்பட்டிருந்தன. பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியே சென்றதும் இளைய பிரபுக்கள் பல்வேறு ஊர்களையும் சுற்றிப் பார்ப்பர். ஆங்காங்கு உள்ள கலைஞர்களையும் தொழிலாளர்களையும் கண்டு பேசி நாட்டுக் கலை அல்லது தொழில் நிலை குன்றாதிருக்குமாறு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருவர். இவ்வாறாகப் பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் அவற்றோடு நின்று விடாமல் சிற்றூர்களுக்கும் பரவின. படித்து வெளியே செல்லும் மாணவர்கள் சுற்றுப் பிரயாணத்தால் உலகியல் அறிவைப்பெறுவர். கிராமங்களில் உள்ளவர்கள் கலைக்கழகங்களில் போதிக்கப்படும் விஷயங்களைத் தெரிந்து பயனடைவர்.)

(முகமதியர் காலத்தில் சிற்பக்கலை தழைத்து ஓங்கியது. இதற்கு அரேபியா, ஸ்பெயின், இந்தியா இந்நாடுகளில் காணப்படும் சிற்பங்களே போதிய சான்றாகும். முகமதிய அரசர்களது சபையில் பல அறிஞர்களும் ஓவியக்காரர்களும், கவிஞர்களும், இசை வல்லுநரும் இருந்தனர்.)

இந்துக்களது கல்வி நிலையங்கள் இந்துக்கோயில்களுடன் தொடர்புடையனவாக இருந்தது போலவே முகமதிய ருடைய பள்ளிகளும் அவர்களது மசூதிகளுடன் இணைக்கப் பட்டிருந்தன. பள்ளிகளில் ஆரம்பக் கல்வியும் 'மதரஸா'க் களில் உயர்ந்தரக் கல்வியும் கொடுக்கப்பட்டன. இந்து, பௌத்த, முகமதியப் பள்ளிகள் எல்லாவற்றிலும் தொழிற் கல்வி ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கதாகும். சமூகத்தில் உள்ள பல வேலைகளைச் செய்யவும், இலக்கிய, கலை வளர்ச்சிக்கும், அரசியல், நிர்வாக இராணுவ உத்தியோகங்களுக்கும் அக்கல்வி மக்களைத் தகுதியுடைய வராகச் செய்தது. அப்பொழுதிருந்த பள்ளிகள் கைத் தொழில் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கும் எழுது தல் படித்தல், கணக்கு, சாதாரண கலைத் திறனமைந்த தொழில் முறைகள் ஆகிய இவை கற்றுக் கொடுக்கப்பட் டன. சமயம், நல்லொழுக்கம் இவைபற்றி எல்லாப் பள்ளி களிலும் போதிக்கப்பட்டன. முதியோரின் அறிவு நிலையை வளர்க்கத் துறவிகள் சிலர் ஊர் ஊராக நடந்து சென்று, மாலை நேரங்களில் உயர்ந்த நூல்களிலிருந்து சில கதைகளை எடுத்துச் சொல்லியும் தோத்திரப் பாக்களைப் பாடியும் வந்தனர். இதன் நல் விளைவுகள் மிகப்பல.

ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, ஆச்சிரமங்களில் (இந்து) தத்துவம், சமயம் இவை முதலிடம் பெற்றிருப்பினும், கலைகளும் விஞ்ஞானமும் புறக்கணிக்கப்படவில்லை என்ப தும், விஹாரங்களில் (பௌத்த) விஞ்ஞானத்திற்கு முதல் இடம் கொடுத்திருந்தாலும் கலைகளும் தத்துவமும் புறக் கணிக்கப்படவில்லை என்பதும், மதரஸாக்களில் (முகமதிய) கலைகளுக்கும் விஞ்ஞானத்திற்கும் சரிசமமான இடம் தரப்பட்டிருந்தது என்பதும் அறியலாகும். இந்த ஒப்புமை

முற்றும் சரியன்று. எல்லாப் பள்ளிகளும் தேசிய வாழ்வை உயர்த்தப் பெரு முயற்சிகள் செய்தன. பொது மக்களுக்கு இப் பள்ளிகள் அனைத்தும் சமமாக உதவி புரிந்தன. ஏனெனில் இப் பள்ளிகள் எல்லாவற்றிலும் கீழ்க் கண்ட அடிப்படைக் கொள்கைகள் முக்கிய இடம் பெற்றிருந்தன:— அறிவுக்கு மரியாதையும் அன்பும் காட்டுதல், சொல்லால் மாத்திரமல்லாமல் உதாரணத்தாலும் கல்வி போதித்தல், பொருட் செல்வத்திலும் அறிவுச் செல்வம் மேம்பட்டது என்பது, சமூக சேவைக்காக வேண்டுமானால் நாமாகவே ஏழைமையையும், தியாகத்தையும் கைக் கொள்ளவேண்டும் என்பது, ஒருவருக்கொருவர் உதவி புரியும் சமூக வாழ்க்கை, எழிலை அடிப்படையாகக் கொண்டு பெறும் கல்வியின் சிறப்பு.

இத்தகைய இந்திய இலட்சியங்கள் ஒவ்வொன்றாக அழிந்துபோக ஆரம்பித்தன. அன்னியர்கள் படையெடுத்து வந்து, அன்னிய சாம்ராஜ்யங்கள் இந் நாட்டில் ஏற்படுத்தப் பட்ட போதிலும் இந்திய நாட்டின் உண்மைச் சக்தி, ஆன்மா, சிறிதும் அசைக்கப்படவில்லை. கிழக்கு இந்திய கம்பெனி 1757-ம் ஆண்டில் இந்நாடு வந்து சேர்ந்ததும் அப்பெருஞ் சக்தி அழியத் தலைப்பட்டது. நம் இன்றைய நிலையைப்பற்றிக் கூறவேண்டிய தேவையே இல்லை.

VI

சுவாமி விவேகானந்தர் கல்வியைப்பற்றிக் கொண்டிருந்த அருங் கருத்துக்களைச் சிறிது பார்ப்போம். பலாத்கார முறையில் சீர்திருத்தம் செய்ய முயல்வதில் சீர்திருத்தத்தின் நோக்கம் குன்றுகிறதே ஒழிய நிறைவேறுவதில்லை. "ஒருவனுக்குச் சுயேச்சையளித்தால் அவன் பலம் பெற்றுச் சிங்கம்போலாக வழியுண்டு. ஆனால் அவனைப் பலாத்

காரப்படுத்தி அடக்கி வைத்தால் அவன் தன் குறைகளை மறைத்து நரிபோலாவான்" என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவது வழக்கம். இன்னும் அவர் கூறியுள்ளவற்றை ஆராய்வோம்.

இப்பொழுதுள்ள கல்வி முறையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் இதன் கெடுதல்கள் அதன் நல்ல அம்சங்களையெல்லாம் மறைக்கும்படி அவ்வளவு அதிகமாக இருக்கின்றன. இந்தக் கல்வி முறை நம் மக்களுக்கு மனிதத் தன்மை அளிக்கக்கூடிய கல்வியாக இல்லை. அது முற்றிலும் எதிர்மறைத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. எதிர்மறைக் கல்வியைவிடச் சாவே மேலானது. உடன்பாட்டு முறையில் போதிக்க ஆரம்பித்தாலன்றிக் கல்வியால் நாம் யாதொரு பயனும் அடைய முடியாது. வெறும் விஷயங்களை ஒருவனுடைய மூளையில் திணிப்பதால் அவன் எவ்வித அறிவும் பெற்றவனாகமாட்டான். கற்கும் விஷயங்கள் உயிர் ஊட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய் மனிதத் தன்மை தருவனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்கவேண்டும். அன்னிய ஆதிக்கமின்றி நம் சொந்த அறிவுத் துறைகள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ச்சி செய்தல் அவசியம். அதனோடு, ஆங்கில மொழியையும் மேல் நாட்டு விஞ்ஞான நூல்களையும் நாம் கற்கவேண்டும். இவற்றுடன் தொழிற் கல்வியும் தொழில் வளர்ச்சிக்குள்ள சகல அறிவும் நமக்குத் தேவை இவற்றின் மூலம், படித்தவர்கள் வேலை தேடித் திரிவதற்குப் பதிலாக, தங்களுக்கு வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள்ள ஆற்றல் பெறுவார்கள். ஆண்மையளிப்பதே கல்வியின் இலட்சியமாயிருக்கவேண்டும். கல்வி பெற்ற ஒருவன் சக்தியானது, எதற்கும் அஞ்சாததாய் அசை,

நிலைப் பொருள்களின் இரகசியங்களையும் ஊடுருவி அறிய வல்லதாய், அறிந்த பின் அவற்றின் நோக்கத்தை எவ்வகை யிலேனும் பூர்த்தி செய்யும் ஆற்றல் உள்ளதாய், மரணம் ஏற்படினும் அஞ்சாததாய் இருத்தல் வேண்டும் அத்தகைய ஆண்மை தரக்கூடிய கல்வியே நமக்குத் தேவை.

மனத்தை ஒருமுகப் படுத்தினாலின்றிக் கல்வி பயிலு தல் இயலாது. எத்தகைய அறிவு பெறவேண்டுமானாலும் சரி. மன ஒருமை அவசியமாகிறது. கல்லூரிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களும், கல்வி பயிலும் மாணவர்களும், இன்னும் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடுவோர் அனை வரும் இவ்விதம் தங்கள் அறிவை வளர்க்க மனத்தை ஒரு மைப் படுத்தவேண்டும் மன ஒருமை அதிகமாக ஆக அறிவு வளர்ச்சியும் அதிகம் ஆகும். மனிதர்களுக்குள் உள்ள வித்தியாசமும் அவரவர்களிடத்தில் உள்ள மனத்தை ஒரு முகப்படுத்தும் சக்தியைப் பொறுத்துத்தான் இருக் கிறது. மனத்தை ஒருமைப்படுத்தி நமக்குள்ளேயே செலுத்தினால், நம் உள்ளிருக்கும் நம் புலன்கள் அனைத்தும் நம் வசப்படும். கிரேக்கர்கள் தங்கள் ஒருமுகப்படுத்திய மனத்தை வெளி யுலகின்மேல் செலுத்தினார்கள். அதன் காரணமாகச் சிற்பம், இலக்கியம் முதலிய கலைகளில் முழுமை பெற்றார்கள். உலகம் வியக்க அவர்கள் நாகரிகம் தழைத்தோங்கியது. இந்தியர்கள் தங்கள் ஒருமுகப்படுத்திய மனத்தை நம் வெளிப் புலன்களுக்கு எட்டாத ஆன்மீகத் துறையில் செலுத்தினார்கள். இதன் விளைவே நம் நாட்டுச் சமய வுணர்வு. உலகம் என்றும் கண்டிராத சமயங்கள் இங்குத் தோன்றின.

கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பிரமசரிய வாழ்க்கை இன்றியமையாதது. இவ்விதம் வாழ்வதால் ஒருவன் எதை

யும் விரைவில் கற்க முடியும். ஒருதரம் கேட்டதும் தெளி வாகத் தெரிந்துகொள்ளும் சக்தியையும் சிறந்த ஞாபக சக்தியையும் அவன் பெறுகிறான். தூயமனம் இருந்தால் அள வில்லாப் பலமும் மனத்திடமும் சக்தியும் தாமாகவே நம்மைத் தேடிவரும். ஒவ்வொரு மாணவனுக்கும், பிரம சரியத்தை அனுசரித்துத் தூய வாழ்க்கையைப் பின்பற்றப் பயிற்சி அளிக்கவேண்டும். தூய்மை என்பதால் உள்ளம், சொல், மெய் ஆகிய மூன்றிலும் தூய்மையாயிருக்கவேண் டும் என்பதை உணரவேண்டும். பிரமசாரியாக இருக்க விரும்புகிறவன் இங்ஙனம் எண்ணங்களிலும், சொல்லிலும், செயல்களிலும் தூய்மையுடையவனாக இருக்க வேண்டும். பிரமசரிய வாழ்க்கை நடத்தினால்தான் ஒருவனிடத்துத் தன்னம்பிக்கை உண்டாகும். தன்னைப் பலமற்றவனாக நினைப்பவன் பலமற்றவனாகவே ஆகிறான் என்று பரமஹம் ஸர் கூறுவதுண்டு. அது முற்றிலும் உண்மை. அளவற்ற தன்னம்பிக்கை நம் மனத்தில் புகவேண்டும். இதுவே வெற்றியின் இரகசியம். 'தன்னம்பிக்கை' என்ற சீரிய கருத்தைக் குழந்தைகளுக்குப் பிறவியிலிருந்தே ஊட்டி வளர்க்கவேண்டும்.

குரு குல முறையில் கல்வி அளிப்பதே உயர்ந்த முறைக்'கல்வி'யென்றவுடன், பயிலுவோன், பயிற்சி கொடுப் போன் அல்லது ஆசிரியன், மாணாக்கன் என்ற இருவர் நம் மனக்கண்முன் தோன்றுகின்றனர். இவர் இருவரும் சரிவர வாழ்ந்து ஒத்துழைத்தால் அல்லாமல் நல்ல கல்வி முறை ஏற்படாது. மாணவனுக்கு வேண்டிய சில இலக் கணங்கள்: (1) அறிவு வளர்ச்சியில் உண்மையான அவா (2) விடாமுயற்சி (3) தூய வாழ்வு. இதேபோல ஆசிரிய னுக்கு ஆவன: (1) சொல், பொருள் சுவைகளை உணர்ந்து

இலக்கியங்களைப் பயிலும் திறன் (2) மாசு இல்லாத ஒழுக்கம் (3) மாணுக்கன் பேரிலும் மனித சமூகத்தின் பேரிலும் பேரன்பு. இங்ஙனம் கூறுவதால் ஒரு கல்வித் திட்டத்திற்கான எல்லா விவரங்களும் கொடுத்துவிட்டதாக எண்ணிவிடாதீர்கள். அப்படி எண்ணினுல் உடனே ஆசிரியனுக்குச் சம்பளம் வேண்டாமா? மாணுக்கன் ஆசிரியனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டாமா? என்ற கேள்விகள் எழும். பணத்துக்காகவோ, பெயருக்காகவோ, புகழுக்காவோ ஆசிரியன் கற்பிக்காமல், சமூகத்திற்கு ஒரு பணி ஆற்றும் வகையில் தன் வேலைகளைச் செய்துவர வேண்டும். இத்தகைய சமூக ஊழியர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வது சமூகத்தின் கடமை என்று சொல்லவும் வேண்டுமா? பழங்காலத்தில் மாணவர்கள் கட்டணம் கொடுக்கவேண்டுமென்ற நியதியில்லை. "கல்வியறிவு மிகவும் புனிதமானது; அதை விலைக்கு விற்கலாகாது" என்று கருதப்பட்டது. இதனுல் ஆசிரியர்கள் பட்டினி கிடக்கவில்லை. இவ்வாசிரியர்களுடைய வாழ்வுக்கும், இன்னும் மாணுக்கர்களுக்கு உணவும் உடையும் அளிக்கவும் செல்வம் பெற்றுள்ளவர்களும் அரசியலாரும் முன்வந்து இத்தகைய பணவுதவி செய்யவேண்டும். இவ்வகையில் ஆசிரியர்கள் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டியது ஒன்று உண்டு. மாணுக்கர்களுடைய மனத்தையும் இழுத்துக்கொண்டு வரவேண்டும். பிறகு தன் மனம் முழுவதையும் அவன் மனத்தில் செலுத்தி, அவன் பார்க்கிற மாதிரி பொருள்களையும் கருத்துக்களையும் பார்த்து, அவன் மனத்தில் எழும் ஐயங்களையும் திரிபுகளையும் நீக்கி, அறிவு வளர்ச்சியை உண்டாக்க வேண்டும். இது எளிதான வேலை அன்று. ஆனுல் இதைச் செய்துதான் ஆக

வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் பொருளின்மை இடையூறாயிருக்கிறது என்று எங்கும் கூக்குரல். இதை நான் மறுக்கவில்லை. இதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனாலும் பொருளில்லை என்ற காரணத்தால், தான் மேற்கொண்டுள்ள ஒரு புனிதத் தொழிலை யாருக்கும் பலன் அளிக்காத வகையில் செய்தல் ஏற்காது.

எல்லாக் கல்வி முறைகளிலும் மதக் கல்வி மிக முக்கியமான அம்சமாய் இருக்கவேண்டும். மதக் கல்வியென்றால் ஒரு குறிப்பிட்ட மதத்தைப்பற்றிய கல்வியாகாது. மனித வாழ்க்கைக்கு அடிப்படையான ஆன்ம இயற்கை நியதிகளை மக்கள் அறியுமாறு எடுத்துச் சொல்லவேண்டும். உலகப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் கண்டறிந்த பேருண்மைகளையும் தெரிந்துகொண்டு, அவர்களைப் பின்பற்றித் தங்கள் வாழ்க்கையை மக்கள் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். இதிலும் ஆண்மையுணர்ச்சி பொங்கும்படியாக அமையவேண்டும். நாம் தரும் மதக் கல்வி ஒப்பற்ற ஆண்மையுடனும், அளவற்ற வேகத்துடனும் துறவைக் கவசமாக ஏற்று, ஞானத்தைக் கத்தியாகக் கொண்டு உண்மைக்காக உழைத்து, அம்முயற்சியில் வேண்டுமானால் தங்கள் உயிரையும் பறிகொடுக்கக்கூடிய வீரம் செறிந்த ஆண் தகைகளாக நம்நாட்டுக் குழந்தைகளை மாற்றவேண்டும்.

(சுவாமி விவேகானந்தர் சமயம், பாவம், கருமம் போன்ற சொற்களைப் புது முறையில் விளக்குகிறார். இன்றைய நிலையில் எவ்விதம் சமயம் அமைந்தால் நம் நாட்டினர்க்கு இன்பம் தருமோ, அதையொத்து அவரது கருத்துக்கள் அமைந்துள்ளன.)

அளவற்ற பலமே சமயம்; பலத்துடன் வாழ்வதே நல்ல கருமம்; பலவீனமே பாவம். இதை மனத்தில் வைத்துக்கொண்டு கல்வி முறையை மாற்றியமையுங்கள். ஆண்மை தரும் சமயத்தைக் கற்றுக்கொடுங்கள். பலம், வலிமை, சக்தி இவ்வெண்ணங்களையே உபநிடதங்களின் ஒவ்வோர் ஏடும் எடுத்தோதுகின்றது உலகிற்கு. எல்லா நாடுகளிலும், சமூகங்களிலும், சமயங்களிலும் உள்ள வலிமையற்றோர், துன்புற்றோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய அனைவரையும், வலிமைகொண்டு எழுந்துநின்று விடுதலை பெறும்படி உபநிடதங்கள் பேரிகை கொட்டிக் கூவியழைக்கின்றன. "உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றினுக்கும் விடுதலை" என்பதே உபநிடதங்கள் உபதேசிக்கும் உயர் மொழி. இதை ஓயாது குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். உபநிடதங்களைச சிறிது சிறிதாக மக்களுக்குக் கற்றுக் கொடுங்கள். இதனினும் சிறந்த பாடப் புத்தகம் வேறு இல்லை. இதய உணர்ச்சியை வளர்க்கும் இம்முறையில் எங்கும் மதவெறி புகுந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். இதுவரை தோன்றியிருக்கும் எல்லாப் பெரியோர்களுக்கும இப்பொழுது தோன்றியிருக்கும் பெரியோர்களுக்கும் நமது வணக்கம்! இனிமேல் தோன்றவிருக்கும் பெரியோர்களுக்கும் நமது வணக்கம்!

மாதர்க்குரிய மதிப்பை அளிப்பதன் மூலமே எல்லா நாட்டினரும் சிறப்பெய்தியிருக்கிறார்கள். பெண்கள் நிலையை உயர்த்த முற்பட்டால் எழும் தங்கு தடைகள் பல. ஆனால், கல்வியென்னும் அருமருந்தால் ஆற்றமுடியாத காரியம் ஒன்றில்லை. ஆண்களுக்கு எவ்வளவு ஊக்கத்துடன் கல்வி புகட்டப்படுகிறதோ அவ்வளவு ஊக்கத்துடன் பெண்களுக்கும கல்வி புகட்டப்படவேண்டும். நம்

இந்திய சகோதரிகள் மற்ற எந்த நாட்டுப் பெண்களைக் காட்டிலும் ஆற்றலில் குறைந்தவர்கள் அல்லர். பெண்களுக்குரிய கல்வியானது சமயஉணர்ச்சியை முதன்மையாகக் கொண்டு பரப்பப்படவேண்டும். இந்தியப் பெண்கள் சீதையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வளரவேண்டும். அவச்சொல் ஒன்றுமின்றி அளவற்ற துன்பத்தைப் பொறுத்த அவள்—அந்தக் கற்புக்கரசி—எப்பொழுதும் நம்தேசீய இலட்சியமாயிருக்கவேண்டும். பெண்கள் உயர்வு பெறவேண்டும். அவர்கள் மூலந்தான் நம் வருங்கால மக்கள் உயர்ந்த கருத்துக்களைப் பெற்று உயர்ந்த காரியங்களைச் செய்ய முடியும். நமது நாடு சிறப்பெய்துதற்கான வழி இதுவே. இவர்கள் மூலமாகத்தான் நம் நாட்டில் கல்வியும் சமயமும் பண்பாடும் சிறப்புற்று விளங்கும். இதற்கென ஒரு திட்டம் அமைத்தால் அதன்படி (1) தேச சரித்திரம் (2) சமய நூல்கள் (3) குடும்ப நிர்வாக முறைகள் (4) பலவிதமான கலைகள் (5) குடும்பத்தின்பால் நமக்குள்ள கடமைகள் (6) ஒழுக்கத்துக்கு ஏற்ற கொள்கைகள் (7) வீர உணர்ச்சி இவற்றைப் பெண்கள் பெறவேண்டும்.

நம் நாட்டிலிருக்கும் கல்வியறிவு அனைத்தும் ஒரு சிறுபான்மையோர் கையில் அகப்பட்டதுதான் நம் நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம். நாம் மறுபடியும் புத்துயிர்பெற வேண்டுமானால், அனைவரிடத்தும் கல்வி பரப்பவேண்டும். ஆன்மிக வாழ்க்கைக்கு அவசியமான அறிவு நூல்கள் பல வடமொழியில் புதைந்திருக்கின்றன. இவ்வரிய கருத்துக்கள் எல்லோருக்கும் கிட்டும்படி செய்யவேண்டும். குறித்ததொரு மொழியைத் தெரிந்துகொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் இவ்வரிய கருத்துக்கள் நம் நாட்டிற் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் சொந்த உடைமையாக வேண்

டும். எனவே, அவ்வெண்ணங்கள் பொதுமக்களுடைய சொந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். (விவேகானந்தர் கல்விப் பயிற்சிக்கான மொழியைப்பற்றிக் கூறும் எண்ணங்கள் மிகவும் உபயோகமானவை. தாய் மொழியில் கல்வி புகட்டுவதைப்பற்றி எண்ணிறந்த எதிர்ப்புக்கள் இருந்துவரும் இந்நாளில் விவேகானந்தர் கூறியுள்ள பொன்மொழிகள் ஆராய்ச்சிக்குரியவை.) அவரவர்களுடைய தாய்மொழியில் கல்வி புகட்டுங்கள். அவர்களுச்கு இவ்வெண்ணங்களைக் கொடுங்கள். இதன் மூலம் அவர்கள் சிறந்த விஷயங்களை அறிந்துகொள்வார்கள். பிறகு அறிவு, அன்பு ஆகிய இரு பெருங் குணங்களையும் அவர்களுக்கு அளியுங்கள். இதனோடு வடமொழியையும் பயிலவேண்டும். அம்மொழியின் உச்சரிப்பிலேயே ஒரு வீரமும், சக்தியும், பெருமிதமும் தொனிக்கின்றன. (இதை விளக்கும் வகையில்) ஓர் உதாரணத்தைப் பாருங்கள் :— புத்த பகவான் உயர்ந்த கருத்துக்களை அக்காலத்து மொழியாகிய 'பாலி'யில் பரப்பினர். அது அரிய காரியந்தான். அதன்மூலம் பெரும்பயன் உண்டாயிற்று. அக்காலத்து மக்களின் சொந்த மொழியில் அவர் உபதேசம் செய்த காரணத்தால் அவர் அருள்மொழிகள் நாடெங்கும் பரவின. ஆனால் அதனோடு மக்கள் வடமொழியும் பயின்றிருக்கவேண்டும். அம்மொழியைப் பொதுமக்கள் பயிலாதவரை, ஒரு சிலர் மாத்திரம் அதைப் பயின்று உயர்ந்த வகுப்பு என்று விளங்க இடமிருக்கிறது. (இக்கருத்தைப் பொறுத்தமட்டில் எண்ண வேறுபாடுகள் இருப்பது இயல்பு. ஆயினும் விவேகானந்தர் கூறியுள்ள கருத்துக்களில் நமக்குப் பொருத்தமானவற்றை எடுத்து நமது கல்வித்திட்டத்தில் புகுத்தலாம்.) பள்ளிகள் ஏழைகளைத் தேடிச் செல்லவேண்டும்.

VII

மகாத்மா காந்தியடிகளின் கனவுகளில் சில இன்று நனவாகி யிருக்கின்றன. அவரது கல்வித்திட்டத்தை அமுலில் கொண்டுவருதல் நம் கடமை. ஆகவே, கல்வித் திட்டங்களைப் பற்றிய அவரது கருத்துக்களைப் பார்ப்போம். 'ஹரிஜன்' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்தும், அவரை நன்கறிந்த பெரியார்கள் கூறியுள்ளதிலிருந்தும் எனக்குத் தெரிந்தவற்றைக் கூறி, காந்தியடிகள் கல்வியைப் பற்றிக் கண்ட கனவை விளக்க விரும்புகிறேன்.

தற்கால ஆரம்பக்கல்வி பயத்தையும் பொய்ம்மையையுமே குழந்தைகளிடம் உண்டுபண்ணுகிறது. ஆரம்பக்கல்வியால் குழந்தைகள் உபயோகம் அடையாமலிருப்பது மட்டுமன்று; நேரிடையாக அவர்களுக்குத் தீமையே விளைகிறது. அநேக பிள்ளைகள் படித்தபிறகு தங்கள் பெற்றோர்களையும் குடும்பவேலைகளையும் உதறித்தள்ளிவிட்டுப் போய்விடுகிறார்கள். கெட்ட பழக்கங்களையும் நகர வாழ்வுக்கான முறைகளையும் கற்றுக்கொண்டு, கல்வியால் உண்டாகவேண்டிய பயனைச் சிறிதும் பெறாதவர்களாக இருக்கிறார்கள். இதே விஷயத்தைப் பற்றி ஒரிஸா மாகாணத்தில் கல்வி மந்திரியாயிருந்த திரு. விஸ்வநாத் தாஸ் என்பவரின் கருத்துக்களைச் சிறிது பாருங்கள்: "தேசியமாகவும் உபயோகமாகவும் இருந்தாலன்றிக் கல்வி உண்மைக் கல்வி ஆகாது. தற்போது பள்ளிக்கூடங்களில் வழங்கும் கல்வி தேசியமாகவும் இல்லை; உபயோகமானதாகவும் இல்லை. இதன் மூலம் மனிதனுக்குள்ள ஆக்க சக்தி அறவே ஒழிந்துபோய்விடுகிறது. ஆகவே, பள்ளிகளிலாயினும் சரி, கல்லூரிகளிலாயினும் சரி, ஆக்க சக்தியை வளர்க்கும் வகை

யில் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும். நம் மனத்துள்ளே பொதிந்து கிடக்கும் அறிவைத் தூண்டி மனிதனையும் கடவுளையும் நேசிக்கச் செய்யவேண்டிய கடமை கல்வியைச் சேர்ந்தது. இங்ஙனம் பார்த்தால் தற்போதுள்ள கல்விமுறை, கல்வியின் குறிக்கோளுக்கு ஒவ்வாததாய் இருக்கிறது.''

காந்தியடிகள் கூறுகிறார்:—“குழந்தையாயினும் சரி, வயது வந்தவனாயினும்சரி, அவனிடத்துள்ள சத்துக்கள் அனைத்தையும்—உடல், உள்ளம், ஆன்மா—வளரவிடுவது எதுவோ அதுவே கல்வியாகும். எழுத்தறிவு கல்வியின் குறிக்கோளாக அமைதல் கூடாது. ஊன்றிப்பார்த்தால் கல்விமுறை எழுத்தறிவுடன் ஆரம்பமாதல்கூடத் தவறு. ஆண் பெண் இருபாலருக்கும் கல்வி புகட்ட நாம் உபயோகிக்கும் சாதனங்களுள் ஒன்றாகவே எழுத்தறிவைக் கருதுதல் வேண்டும். எழுத்தறிவு மாத்திரம் இருந்தால் கல்வி சிறிதளவும் பெற்றதாகாது.'' இதையே விளக்கிக் கூறும் வகையில் அமைந்துள்ளது அவர் 1937-ம் ஆண்டு அக்டோபர் 11-ம் தேதியன்று ‘ஹரிஜனில்’ எழுதிய கட்டுரை. அதில்பின்வருமாறு கூறுகிறார்: “குரலை நாம் வசப்படுத்தி அதைப் பயிற்சி செய்வது, கைகளுக்குப் பயிற்சி கொடுப்பது போன்று இன்றியமையாதது. உடற் பயிற்சி, கைத்தொழில்கள், ஓவியம், சங்கீதம் இவையனைத்தும் இருந்தாலன்றிக் குழந்தைகளின் மனத்தில் உள்ள அனைத்தையும் தூண்ட இயலாது; அவர்களுக்கும் கல்வி கற்பதில் ஆர்வம்உண்டாகாது. இது கைகூடவேண்டுமானால் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். இந்தியின் வருங்கால மக்களுடைய நல்வாழ்வுக்கு அஸ்திவாரம் போடவேண்டுமானால், இவை நான்கும் அதற்கு அவசியம்.

எந்த ஆரம்பப் பள்ளிக்குச் சென்றாலும் சரி, நாம் பார்ப்பது என்ன? சோம்பேறித்தனமும், ஒழுங்கின்மையும், அவசிய மில்லாத இரைச்சலுமே குழந்தைகளிடையே காணப்படு கின்றன. பல்வேறு மாகாணங்களிலுமுள்ள கல்வி மந்திரி கள் கல்வி முறைகளைத் திருத்தி அமைக்கும்போது நான் கூறியுள்ள அடிப்படைக் கருத்துக்களைக் கவனியாமற் போகமாட்டார்கள் என்று நம்புகின்றேன். நான் ஆரம்பக் கல்வியில் கூறும் மாறுதல் முழுவதும் ஒரு நொடியில் கை கூடும், நீங்கள் மாத்திரம் அன்னியமொழியின் பாரத்தைக் குழந்தைகள் தோள்களிலிருந்து எடுத்துவிட்டால்.''

எழுத்தறிவு கல்வியின் தேவையைப் பூர்த்தி செய்யா தென்ற காந்தியடிகளின் வாக்கியம் மிகவும் முக்கிய மானது. ஆதலால், இதே பொருளைப்பற்றி மஷ்ருவாலா என்ற காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகிய பெரியார் கூறுவதைப் பார்ப்போம்: "எழுத்தறிவு முழு அறிவு மாகாது; அதற்குக் கருவியாகவும் அமையாது. அறி வானாலும் சரி, அறிவின்மை ஆயினும் சரி; அதை வெளியிட உதவும் சாதனமாகவே நிற்கிறது எழுத்தறிவு. அறிவின் அடிப்படைக் கொள்கைகள் இருக்குமாயின் பின்பு வேண்டுமானல் எழுத்தறிவு பயன்படும். இங்ஙனம் அறிவின் அடிப்படைக் கொள்கைகளின் மூலம் நம் முள்ளிருக்கும் அறிவூற்றுகளைத் திறந்து விட்டு, அவற்றை வெளியிட எழுத்தறிவை உபயோகிப்பதே வார்தா திட்டத்தின் நோக்கம். இதற்கு முக்கிய சாதனங்கள் ஆறு. அவையாவன (1) வேலை (2) கூர்ந்து கவனித்தல் (3) அனுபவம் (4) பரிசோதனை (5) சேவை (6) அன்பு. இவையின்றிப் புத்தகங்களைக்கொண்டு படிப்பது மனித

னின் உள்ளடங்கிய சக்திகளைப் பாழ்படுத்துவதுமல்லாமல் உடலையும் கெடுக்கிறது.''

இதுவரை கூறியவற்றால் காந்தியடிகள் கல்வியைப் பற்றிக் கொண்டிருந்த அடிப்படைக் கருத்துக்கள் தெளிவாகப் புலப்படும். இனி அவர் வெளியிட்ட இரு திட்டங்களைச் சிறிது ஆராய்வோம். 1937-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி ஹரிஜனில் காந்தியடிகள் எழுதியதாவது:—

(1) அடிப்படைக் கல்வி அல்லது ஆரம்பக்கல்வி ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அமைக்கப்பட வேண்டும். இந்த ஏழு ஆண்டுகளில் இப்பொழுது 10-ம் வகுப்பு வரை சொல்லித்தரப்படும் பாடங்கள் அனைத்தையும், (ஆங்கிலம் நீங்கலாக) சொல்லித் தரவேண்டும். இதோடுகூடக் குழந்தைகளின் அறிவை வெளியிடுவதற்கென ஏதேனும் ஒரு தொழிலில் பயிற்சி தரவேண்டும். இத்தகைய தொழிற்கல்வி ஆரம்ப, இடைத்தர, உயர்தரப் பள்ளிகள் அனைத்திலும் இடம்பெற வேண்டும்.

(2) இங்ஙனம் பெறும் கல்விக்குப்பின் மாணவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் திறன் படைத்தவனாக வேண்டும். இதுவே உண்மைக் கல்வியை அளக்கச் சரியான சோதனையாகும்.

இவ்விரு திட்டங்களையும் பற்றி அவரே மறுபடியும் கூறுகிறார்:—

இப்பொழுதுதான் மாகாணக் கல்வி மந்திரிகளுடன் கலந்து பேசி அவர்களது கருத்துக்களை வகைப்படுத்தும் சமயம் எனக்கு வாய்த்திருக்கிறது. ஏனெனில், இந்த

மந்திரிகள் அனைவரும் என்னுடன் சுதந்திரப் போராட்டத்தில் உழைத்தவர்கள். ஆகவே, நான் கூறிய இரு திட்டங்களைப் பற்றி நினைக்க நினைக்க எனக்கு அவற்றில் நம்பிக்கை அதிகரிக்கிறது. ஆகவே, நான் சுயநலமற்ற பரந்த நோக்குடைய கல்வியாளர்களைக் கேட்டுக் கொள்வது "நான் கூறிய இருதிட்டங்களையும் நன்றாக ஆலோசிக்கவேண்டும்" என்பதே. தங்களுக்கு ஏற்கனவே உள்ள கருத்துக்களையும், என்னுடன் அவர்களுக்கு வேறு வகைகளில் உள்ள கருத்து வேறுபாடுகளையும் மறந்து விட்டு, என் திட்டங்களை ஆலோசிக்க வேண்டுகிறேன். கல்வியைப்பற்றிய என் திட்டங்களை ஆலோசித்து, அதன் உண்மை உயர்வை அறிந்தால் நல்லது.

இந்தத் திட்டங்கள் இரண்டையும் பிணைத்து 'காந்தியக் கல்வித்திட்டம்' என்று கூறலாம். காந்திய திட்டம் ஒரு புது வழியாகத் தோன்றினாலும், காந்தியடிகளுக்கு அதை எளிதில் நடைமுறையில் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை இருந்தது. இதற்குக் காரணம் அவருக்கு இவ்விஷயத்தில் சிறிது நேரடியான அனுபவம் இருந்ததே. இத்திட்டத்தின் வெற்றியில் அவர் பெருநம்பிக்கை கொண்டிருந்தார் என்பது பின்வரும் அவரது கூற்றுக்களால் தெளிவாகிறது: "என் திட்டம் புதிதென ஒப்புக் கொள்கிறேன். அதிக அனுபவத்தின் பயனாக இத்திட்டம் வரவில்லை யென்றும் நான் அறிகிறேன். ஆனால், நானும் என் நண்பர்களும் இதுவரை அனுபவத்தில் கண்டறிந்ததைப் பார்த்தால் இத்திட்டம் வெற்றிபெறும் என்றே தோன்றுகிறது. இததிட்டத்தால் அல்லாமல் ஆரம்பக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும், பயனுள்ளதாகவும் செய்யமுடியாது. தென் ஆப்பிரிக்காவில் டிரான்ஸ்

வால். மாகாணத்திலுள்ள டால்ஸ்டாய் பண்ணையில் நான் சிறிதுகாலம் வேலை செய்தேன். அங்கு நான் சிறு பிள்ளைகளுக்கு முழுக்கல்வி தரவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். வெகு விரைவில் என் எண்ணம் நிறைவேறியதை அறிந்து மகிழ்ச்சியும் அடைந்தேன். அங்குக் குழந்தைகளுக்கு முழுக்கல்வி தர முடிந்தது. அப்பண்ணையில் முக்கியத்துவம் தொழிற்கல்விக்கே தரப்பட்டது. அங்குப் பாடத்திட்டத்தில் எட்டு மணி நேரம் கைத்தொழிற் கல்விக்கென்றும், இரண்டு மணி நேரம் எட்டுப்படிப்புக் கென்றும் ஒதுக்கப்பட்டிருந்தது. தொழிற்கல்வி யென்பதில் நிலத்தைத் தோண்டுதல், சமையல் செய்தல், அசுத்தங்களை நீக்குதல், செருப்புத் தைத்தல், தச்சுவேலை, செய்தி எடுத்துச் செல்வது ஆகிய அனைத்தும் அடங்கியவை. அங்குப் பயின்று வந்த குழந்தைகளின் வயது ஆறு முதல் பதினாறுக்குள்ளிருக்கும்.''

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது தன் பிள்ளைகளையும் டால்ஸ்டாய் பண்ணையில் சேர்த்துப் பயிற்சி பெறச் செய்தார் என்பது சிந்தனைக்கு உரிய விஷயமாகும். இதுகாறும் கூறியவற்றால் காந்தியடிகள் கல்வியைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள், புதுக் கல்வித் திட்டத்திற்கு அவர் தரும் நடைமுறை உதவி, 'நம்பிக்கையுடன் நடத்தினால் அத்திட்டம் வெற்றி பெறும்' என்று அவர் கொண்டிருந்த உறுதி இவை தெரிகின்றன.

VIII

இனி அன்னே பெஸண்ட் அம்மையார் இந்திய நாட்டுக் கல்வியைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதை ஆராய்வோம்.

இந்தியக் கல்வி முறையைப் பற்றி ஆராயவேண்டுமானால் இந்தியர் பண்டைக்காலமுதல் கொண்டிருந்த உன்னத இலட்சியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், இந்திய இலட்சியங்களே இந்நாட்டின் தேசிய வாழ்வை உருவாக்குகின்றன. பண்டைய இந்தியாவில் கல்வியும் பண்பாடும் பிறருடைய கட்டுக்கடங்காது தம்மைத் தாமே உருவாக்கிக் கொண்டன. அப்பொழுதிருந்த மக்கள் எல்லோரும் அவற்றால் பெரிதும் பயனடைந்தார்கள். ஆனால் சர்க்காரோ, செல்வம்படைத்தவர்களோ கல்வித்துறையில் தங்கள் வலிமையைக் காட்ட முற்படவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் சமயம், நல்லொழுக்கம், வல்லமை அனைத்தும் பெற்று விளங்கினார்கள். இதற்கு உதவியாகச் சர்க்கார் கல்வி, பண்பாடு ஆகிய துறைகளில் சிறந்தோர்க்கு முழுச்சுதந்திரம் அளித்து அவர்களைப் போற்றி வந்தனர். கல்விச்சாலைகளை நடத்துவதிலும் சர்க்கார் தலையிடவில்லை. அரசர்கள் பல பலகலைக் கழகங்களை ஏற்படுத்தினார்கள்; அவைகளுக்காக மானியங்கள் வழங்கினார்கள். ஆனால் அவற்றில் தங்களுக்கு ஒரு விதமான தனிச் சலுகையோ மதிப்போ எதிர்பார்க்கவில்லை. இயற்கைப் பொழில்களிடையே அமைந்திருந்த அப் பல்கலைக் கழகங்களிலும் விழாக்கள் நடைபெறும். அச்சமயங்களில் ஓர் அரசனே விழாப் பந்தலில் நுழைந்தாலும் எவரும் எழுந்திருக்கமாட்டார்கள். சாதாரண மனிதர்களைப் போலவே அவனும் சென்று தனக்கான இடத்தில் அமர்வான். ஆனால் அக் கழகத்தின் தலைவர் பந்தலுள் நுழையும்போது, எல்லோரும் எழுந்து நின்று நிசப்தமாக இருந்து மரியாதை செலுத்துவார்கள். பல்கலைக் கழகம் என்பது ஒரு கல்விச்சாலை. அதனால் கல்வி கேள்விகளால் மேம்

பட்டவருக்கே அங்கு மரியாதை நடைபெறும். அறிவால் சிறந்த ஒரு முனிவர் அரசனுடைய சபையில் நுழைந்தால், அவ்வரசன் தன் ஆசனத்திலிருந்து இறங்கிவந்து முனிவரை வணங்குவது வழக்கமாயிருந்தது.

தற்காலத்திலோ என்றால், கல்வி ஒரு சர்க்கார் இலாகாவின் கட்டுக்கடங்கியதா யிருக்கிறது. போதாததற்குச் சட்டசபைகள், கல்வி அதிகாரிகள் ஆகியவர்களையும் திருப்தி செய்யவேண்டியது கல்வித் துறையில் உழைப்போரின் வேலையாகிறது. இந்தத் துக்கமான நிலை கீழ்நாடுகளில் மட்டுமன்றி மேனாடுகளிலும் இருந்துவருகிறது. அறிஞர்களிடத்து ஏராளமான பொருளைக் கொடுத்து, அவர்களுதவியால் கல்விச் செல்வத்தைப் பரப்பி வந்த அரசர்கள், தங்களுடைய சுதந்திரத்தை இழந்து அன்னியர்களுக்கு அடிமைகளானதும், கல்வியும் பண்பாடும் ஆதரிப்பாரின்றி மடிந்தன. இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டுக்கு ஒரு திட்டத்தைத் தயாரிப்பது எப்படி?

பண்டைக் காலத்திலிருந்த இலட்சியங்கள் திரும்ப வந்து நம் நாட்டின் கல்வியும் பண்பாடும் சிறந்தோங்க வேண்டுமானால், அரசியலாருக்கும் கல்விக் கழகங்களுக்கும் இடையே முன்னிருந்த உறவு உயிர்ப்பிக்கப்படவேண்டும். பழைய கல்வி முறையின் கருத்துக்களையே காலத்திற்கு ஏற்பப் புதுமையாக்கி, அவற்றை இப்பொழுது உபயோகிக்கலாம். அரசியலார் கல்விச்சாலைகளுக்கும், பண்பாட்டுக் கழகங்களுக்கும் வேண்டிய பொருளுதவி செய்துவரவேண்டும். நில, பண மான்யங்களைக் கொடுத்து, அக்கழகங்கள் இணையற்ற அறிவும், நல்லொழுக்கமும் கொண்ட மக்களை நாட்டுக்கு உண்டுபண்ணித்தர உதவவேண்டும்.

இத்தகைய மக்களே பிற்காலத்தில் தேசீய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தொண்டுபுரியத் தக்கவர்களாவர். 'அரசியலார் கல்விக்கு என்று செலவழிக்கும் தொகை வீணாய்ப் போவதில்லை. அது நல்ல ஒரு சேமிப்பு' என்பதை நன்குணரவேண்டும். இங்ஙனம் செய்வதால் அத் தொகையின்மீது நாடு பெறும் வட்டி மிக அதிகம். கல்வி பெறும் தனி மனிதனும், சக்தியும் இன்பமும் பெற்று வாழ்வான். படித்த பெரியோர்கள் உயர்ந்த இலக்கியங்களை உண்டுபண்ணித் தம் நாட்டின் பெருமையை மேம்படுத்துகிறார்கள். இதனால் தங்களோடு வாழும் மக்களுக்கேயன்றி வருங்கால மக்களுக்கும் தங்கள் இலக்கியத்தின் மூலம் பணி ஆற்றுகின்றனர். கல்வியும், பண்பாடும் இருந்து மனிதனது உடலும், உள்ளமும், ஆன்மாவும் ஒருங்கே அமைந்தால்தான் நாட்டில் ஏழ்மையை ஒழிக்க முடியும்; நாகரிகம் பரவும்; தீச்செயல்கள் இல்லாது போகும்; சமூகத்திலும் உலகிலும் சமாதானம் நிலவும்; கல்லாமையால்தான் ஏழைமை, துன்பம், பிணி முதலியவை ஏற்படுகின்றன.

ஜப்பான் தேச மக்கள் அனைவரும நாற்பது வருடங்களில் கல்வி கற்றுவிட்டார்கள். இப்பொழுதே இந்திய மந்திரிகள் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாகவும இலவசமாகவும் செய்து வருகிறார்கள். இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றவுடன், கல்விக்கும் பண்பாட்டுக்கும் சுதந்திரம் அளித்து, அறிவை மதிக்க முற்படுவார்கள் என்று நம்புகிறேன். இங்ஙனம் சுதந்திரம பெற்ற பிறகு நாம் கல்வி முறையில் செய்யவேண்டிய முக்கியமான மாறுதல் இந்திய மொழிகளுக்குத் தகுந்த இடம் அளிப்பதே. மக்களுக்கு அன்னிய மொழியைப்போல அடிமை

மனப்பான்மையை உண்டாக்குவது வேறொன்றும் இல்லை. ஜெர்மனி, ருஷ்யா, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் போலந்தைப் பங்கிட்டுக்கொண்டதும், ஒவ்வொரு நாடும் தனக்குக் கிடைத்த போலந்தின் பாகத்தில் முதன் முதலாகப் போலிஷ் பாஷையை ஒழித்துத் தத்தம் பாஷைகளைப் பள்ளிகளில் புகுத்த ஆரம்பித்தது. மெகாலேயும் 'இந்தியர்கள் நாகரிகமில்லாதவர்கள், அறிவற்றவர்கள், இவர்களைக் கடைத்தேற்றுவது ஆங்கிலேயர் கடமை' என்ற எண்ணமும் திமிரும் மேலிட்டு, இந்திய மொழிகளை அவற்றிற்குரித்தான இடங்களினின்றும் நீக்கி ஆங்கிலத்தைப் புகுத்தினர். இதற்குப் பின் தங்கள் தாய்மொழிகளையே வெறுக்க ஆரம்பித்துவிட்டார்கள் இந்தியர்கள். இதனால் ஆங்கிலமறிந்த சிலருக்கும் ஆங்கில அறிவில்லாத பெரும்பான்மையோருக்கும் இடையே பிளவு ஏற்பட்டு, இது நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. சுதந்திர இந்தியாவில் எல்லாப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நம் நாட்டு மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். இதுவரையில் பல்கலைக் கழகங்கள் மக்களிடையே பண்பாட்டைப் பரப்ப முயற்சி செய்யவே இல்லை. சுதந்திர இந்தியாவிலாவது இக்கழகங்கள் கல்வியோடு பண்பாட்டையும் வளர்த்து மக்களை உயர்த்தவேண்டும். பண்டைக் காலத்தில் இருந்தது போலவே மாணவர்கள் இயற்கைச் சூழ்நிலையிலிருந்து கல்வி பயிலட்டும்!

நீதிகளையும் சமயவுண்மைகளையும் போதித்தல், கல்வி முறையின் ஓர் இன்றியமையாத கடமை. இங்கிலாந்திலுள்ள பள்ளிக்கூடங்களில் நீதிகளையும் அந்நாட்டுச் சமயத்தைப்பற்றியும் கற்றுக்கொடுப்பதை இன்றைக்கும் காணலாம். அவர்களுடைய கல்வித் திட்டத்தில் சமய போதனை

ஒரு முக்கிய இடம் பெறுகிறது. இந்தியாவில் பல சமயங்கள் வழங்குவதால், ஏதேனுமொரு சமயத்தைப்பற்றிப் போதிப்பதால் தீமை விளையும் என்று சொல்லிக்கொண்டு சமய போதனையே இல்லாமல் செய்துவிட்டார்கள். நம் நாட்டுக் கல்வியின் இத்தகைய நிலை மாறவேண்டும். கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனும் முதலில் தன் சமயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு சிறிது சிறிதாக மற்றச் சமயங்களிலுள்ள உண்மைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்தியாவில் கல்வி மேலிருந்து கீழாகப் போகிறதே ஒழிய, கீழிருந்து படிப்படியாக மேலே உயர்வதில்லை. அதாவது இந்திய நாகரிகம் நாட்டுப்புறங்களில் விளைந்தது; காடுகளில் அமைந்திருந்த ஆசிரமங்களில் வளர்ந்தது; நகரங்களிலும் பெருங்கட்டிடங்களிலும் பிறந்ததன்று, வளர்ந்ததுமன்று. கிரேக்க நாகரிகம் நகரங்களில் பிறந்து, மாநகரங்களில் முடிவுபெற்றது. இங்கிலாந்தின் பெருமைக்கு இலக்காக விளங்கும் ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜ் இரண்டு பல்கலைக் கழகங்களும் இயற்கை எழிலிடையே அமைந்துள்ளன. பெரு நகரங்களின் மத்தியில் தோன்றியுள்ள பல்கலைக் கழகங்கள் எதுவும் போற்றத்தக்கதாக விளங்குவதைக் காணோம்.

1757-ம் ஆண்டில் கிழக்கிந்தியா கம்பெனி நம நாட்டில் புகுந்து, நம் நாட்டின் கல்வியையும் பண்பாட்டையும் ஒழிக்கத் தொடங்கியது. அதற்குப்பின் இப்பொழுது-தான் நம் நாட்டில் கல்வியைப் பற்றித் தீர ஆலோசிக்கிறோம். இது எதன் விளைவு? இந்திய சரித்திரத்தைப் படித்து உணர்ந்தோம். நம் பண்டைப் பெருமையை அறிந்தோம். பண்டை நாளில் நாம் கொண்டிருந்த இலட்சி

யங்களுக்குப் புத்துயிர் அளிக்கத் தீர்மானித்திருக்கிறோம். இதனால்தான் நாம் கல்விமுறையை மாற்றி அமைக்க விரும்புகிறோம். சுதந்திர இந்தியா தனக்குத் தேவையான முறையில் ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கி, அதன்படி பயின்று, உலகம் முழுவதையுமே தன் இலக்கியத்தாலும், அழகாலும், சகோதரத்துவத்தாலும், சாத்துவிகத்தாலும் பிரமிக்கச் செய்யவேண்டும்.

IX

இனி, 'இலாப தத்துவம்' என்று ஒருவகைத் தத்துவம் உண்டு. இதன்படி, நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் உடனுக்குடன் நமக்குப் பலன் அளிக்கவேண்டும். ஒரு செயலால் இலாபங் கிட்டுமாயின் அது நற்செயலே என்று உடனே கூறுவார்கள் இத்தத்துவத்தைப் பின்பற்றுவோர். இத்தத்துவம் ஏதோ ஒரு சிறு கூட்டத்தினரால்தான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் விஞ்ஞானமும் வியாபாரமும் உலகை ஆளும் இக்காலத்தில் இத்தத்துவத்தை மேனாட்டார் பலர் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, கல்வி முறைகளைப் பற்றி ஆராயும்போது இக்கூட்டத்தாருடைய கருத்துக்களையும் அறிந்து கொள்வது நல்லது. ஆதலால், இலாபதத்துவப் பெரியாரான பிரௌடு (ஜே. ஏ.) என்பாரின் கல்வி பற்றிய கருத்துக்களைச் சுருக்கிக் கூறுகிறேன்.

பண்டைக் காலத்தில் ஐரோப்பியர், கல்வியின் தன்மையை நன்றாக அறிந்திருந்தார்கள். ஆகவே, கல்வி கற்பித்தலில் சீரிய முறைகளைக் கையாண்டு வந்தார்கள். மக்களில் பெரும்பாலோர் பாடுபட்டே வாழ முடியும் என்னும் உண்மையை உணர்ந்த அவர்கள், மாணவர்கள் தம் பிற்காலத்

தில் வறுமையில்லா வாழ்வு அமைக்க, முதன் முதல் ஏதாவதொரு தொழில் முறையைக் கற்பித்தனர். அடுத்த தாக அவர்கள் வேதம் படித்து, அதன்படி இறைவனுக் கும் தீச் செயல்களுக்கும் பயந்து நடக்க வேண்டுமென்று கற்பிக்கப்பட்டார்கள். சுருக்கமாக, அக்காலத்தில், "பத்து இறை ஆணைகளும்" ஒரு தொழில் முறையும் வாழ்வைத் தொடங்க அடிப்படையான இருகருவிகள் என்று கருதப் பட்டன.

தொழில் முறைப் பயிற்சி வேண்டாது அறிவைப் பெற விரும்புவோருக்கும் உயரிய பயிற்சிகள் அளிக்கப் பட்டன. உள்ளத்தின் வளர்ச்சிக்காகவே தம் வாழ்நாளைக் கழிப்பதால் அறிஞர்கள் சிறப்பாக மதிக்கப்பட்டனர். ஆனால், அவர்களுடைய சேவையால் நாட்டின் பொருட் செல்வம் பெருகுவதில்லை. இதனால் அவர்கள் வறுமையால் வாடினர். வாழ்வுக்கு இன்றியமையாத சில பொருள்களு டனே அவர்கள் திருப்தி அடைய வேண்டியிருந்தது. இப் பொழுது ஆக்ஸ்போர்ட் அல்லது கேம்பிரிட்ஜ் கல்விக் கழ கத்துக்குச் சென்றால், ஒரு பிரபுவின் அறையிலுள்ள மரச் சாமன்கள் மட்டும் சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான முள்ளவை என்பதைக் காணலாம். ஆனால் பதினாறாம் நூற் றாண்டில் பெரிய பிரபுக்களுக்குக்கூட நூறு ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள மரச் சாமான்கள் இருந்ததில்லை. அதற்கு முன்னர், ஐரோப்பிய மாணவர்கள், பீடர் அபிலார்டின் என்ற பெரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்கப் பாரிஸ் நகரம் வரை இரந்தும் நடந்துமே செல்வது வழக்கம். இங்ஙனம் கல்வி சிறந்த ஊர்கட்கெல்லாம் நடந்தே சென்று விடுவர். பண்டை ஐரோப்பியக் கல்வி முறையின் கொள்கைகள் சீரியன. ஆதலால், அது நல்ல பயனைக்

கொடுத்தது. அறிஞர் வறுமையில் உழல நேர்ந்தாலும் அறிவும் விஞ்ஞானமும் அதனால் தம்மொளியை இழக்க வில்லை. நாட்ஸ், புக்கனன், மில்டன், ஸ்பைனோசா ஆகி யோர் பண்டைக் கல்வி நிலையங்கள் தந்த பேரறிஞர்களுள் சிலர். இதனால் வறுமையைவிட வெறும் செல்வ வாழ்க்கையே அறிஞரை அதிகம் பாழ்படுத்தும் என்பது தெரிகிறது.

பண்டைக் கல்வி முறை இன்று அடியோடு மாறிவிட் டது; மாறுதல்கள் தீமைதான் விளைத்திருக்கின்றன. மனிதன் செய்யும் ஒவ்வொரு தொழிலிலும் பயிற்சி அளிப்பதே கல்வி என்று கருதப்படுகிறது. இன்று ஒரு மாணவன்மேல் சுமத்தப்படும் பளு மிக அதிகம். பரீட்சை அதிகாரிகள், மாணவர்கள் எல்லோருமே மெகாலே போன்ற படிப்பாளிகளாக இருக்கவேண்டும் என்று கருது கின்றனர். கல்வியின் தத்துவம் இன்று மறைந்துவிட்டது. அது அறிவுத்திறனை வளரச் செய்வதற்குப் பதிலாக, உப யோகமற்ற விஷயங்களையே, நிறைய மாணவன் மூளையுள் புகுத்துகிறது. பல்கலைக் கழகங்களில் இன்று ஆடம் பரமே ஓங்கியிருக்கிறது. மாணவர்க்குப் போதிக்கப்படும் படிப்பு, பண்டைநாள் தன்மையினதே; ஆனால் இக்கழகங் களில் மாணவர்கள் எளிய வாழ்க்கை நடத்துவதற்குப் பதிலாகப் போகவாழ்க்கையை நிலையென்று எண்ணி அதில் மூழ்குகிறார்கள். கல்லூரியை விட்டு வெளியுலகிற்குச் செல்லும்போதுதான், மாணவனின் கண்கள் திறக்கின்றன. அங்குத் தன் வாழ்வை நிர்மாணிக்கும் வகை அறியாது தவிக்கிறான். ஆக்ஸபோர்டிலும், கேம்ப்ரிட்ஜிலும தான் கற்ற கல்வி, யாதொரு. பயனுமற்றுப் போனதை அப் பொழுதுதான் அவன் உணருகிறான்.

மாதிரிப் பள்ளிகளும் (ஆரம்பப் பள்ளிகளும்) பல்கலைக் கழகங்களைப் போன்றே நடத்தப்படுகின்றன. அங்கு முதலில் படிப்பும், எழுத்தும், கணக்கும் கற்றுக்கொடுக்கிறார்கள். அதன்பின் இலத்தீன், கிரீக் போன்ற பண்டைய மொழிகளையும், தரையின் அமைப்பு, வேறுபாடுகள் முதலியவற்றை விளக்கும் பாடங்களையும் போதிக்கிறார்கள். பள்ளி மேற்பார்வையின்போது, ஏதாவது ஒரு அதிசயப் பிறவி எழுந்திருந்து தன் திறமையை வெளிப்படுத்தினால் கல்வி அதிகாரி பள்ளியைப் புகழ்ந்து பேசுவார். அப்போது ஆசிரியனுக்குப் பெருமை கொள்ளாது. ஆனால் உண்மை வாழ்வில் மாணவன் தான் கற்றதால் பெறும் பயன் ஒன்றுமில்லை. இக்காலக் கல்வியின் பயனில்லாத் தன்மை இதுதான். அது சீக்கிரமே, சிறந்த முறைகளில் சீர்திருத்தப்பட்டாலொழிய மனித நிலையையே இத்தகைய கல்வி பாழ்படுத்திவிடும்; காலித்தனம் பெருகி வாழ்வை நாசமாக்கிவிடும்.

பண்டைக் கல்வி முறையின் சிறப்புக்களையும், தற்காலக் கல்வி முறையின் கெடுதல்களையும் எடுத்துக் காட்டிய பிறகு, பிரேளடு தாம் அதிற் செய்ய விரும்பும் சீர்திருத்தங்களைக் கூறுகிறார். ஒவ்வொரு மாணவனும், தன் பிற்காலப் பிழைப்புக்கு உதவும்படி ஒரு தொழில் முறையைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற பண்டைக் கொள்கையை முற்றிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். உழைத்துத்தான் ஒருவன் உண்ணவேண்டும். உழைக்க இயலாதவன், பிச்சை எடுத்தோ திருடியோதான் வாழ முடியும். இங்ஙனம் நேராதிருக்கத் தொழிற் கல்வியை முக்கியமாகப் புகட்டவேண்டும். இதற்கு அடுத்தபடி மாணவன் வேதநூல் படித்து, அதன் வழி வாழ்வை

அமைத்துக்கொள்ள பயிற்சி அளிக்கப்படவேண்டும். முன் காலத்திலிருந்தது போலவே பத்து இறை ஆணைகள் மாணவனின் பிற்கால வாழ்விற்கு அடிப்படையாக அமையவேண்டும்.

இவ்விரண்டினையும் போதித்த பிறகு மாணவனுக்கு உதவியாயிருக்கும் அறிவைப் புகட்டவேண்டும். அது, அவன் தன் கைத்தொழிலைச் செவ்வனே செய்து முடிக்க உதவி செய்வதாயிருத்தல் வேண்டும்; இல்லாவிடில் பயன் இல்லை. உதாரணமாக ஒரு விவசாயி, விவசாயம், இயற்கைச் சக்திகள், உடற் கூறுபாடு முதலியவற்றைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அறிவு இல்லையானால் அவன் தன் தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியாது. அவ்வறிவு அவனை ஒரு சிறந்த உழவனாகச் செய்வதோடு வேதாந்தியாகவும் ஆக்குகிறது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் போதிக்கப்படும் பண்டைப் பெரு நூல்கள், வேதாந்தம் ஆகியவற்றை மிகவும் போற்றி மதிக்கும் சிலர் என் கொள்கையை ஒப்புக்கொள்ளாமற் போகலாம். ஆனால் அவை யாவும் வெறும் அறிவுக்கு அணிகலங்களே யல்லாது, சாதாரணமக்களுக்கு யாதொரு பயனும் அளிப்பதில்லை. வேதாந்தம், பிழைக்கும் வழி கூறாவிட்டாலும் ஆத்மீகத் துறையை வளர்த்தலால் அது மதித்துப் போற்றப்படவேண்டும் என்ற கொள்கையை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நம்மில் வெகுசிலரே, அத்தகைய உயரிய நூல்களைக் கற்று, அதன்படி வாழ்க்கைச் சுகங்களை வெறுத்துத் தள்ளக்கூடிய தகுதி பெற்றவர்கள். நம்மில் பெரும்பாலோர், சாமானிய மனிதர்களே. அதனால் நம் படிப்பும் தொழிலும் அவை அளிக்கும் பயனைப் பொறுத்தே உருவாக்கப் படவேண்டும்.

இதுவரை அறிவு ஒரு தொழிலுக்குதவுமா என்று பார்த்தோம். இனி அறிவையே ஒரு தொழிலாகக்கொள்ள முடியுமா என்று ஆராய்வோம். அறிஞர் பலர், தம் வித்தையைச் சொந்த பிழைப்புத் தொழிலுக்குப் பயன்படுத்துகின்றனர். உள்ளப் பண்பாட்டையும் ஆத்மிகப் பண்பாட்டையும் வளர்க்கும் விஷயத்தில் வித்தை ஒரு சீரிய தொழிலே. ஆனால் அது பொருட் செல்வத்தை வளர்க்காது. எனவே, அதைப் பிழைப்புத் தொழிலாகக்கொள்ள முடியாது. மில்டன், ஷேக்ஸ்பியர் ஆகியோர் தம் நூல்களைக் கொண்டு யாதொரு பொருட் செல்வத்தையும் சம்பாதிக்கவில்லை. அவர்களுக்குரிய புகழ் உண்டாகவே வெகு காலம் ஆயிற்று. கார்லைலும் டெனிசனும் விரைவில் புகழ் சம்பாதித்துக்கொண்டார்கள்; ஆனால் அவர்களும் பணம் சம்பாதிக்கவில்லை. அறிவுக்கெனப் பயில விரும்பும் ஒருவன் இவற்றையெல்லாம் உள்ளத்தில் கொண்டு, தீர ஆலோசித்து அம்முடிவுக்கு வரவேண்டும். அவசர முடிவு அவனது பிற்கால வாழ்வையே நாசமாக்கிவிடும்.

பிரௌடின் கடைசிப் புத்திமதி காலித்தனத்தைப் பற்றியது. பல்கலைக் கழகங்களை விட்டு நீங்கித் தன் வாழ்வைத் தொடங்கும் வாலிபன் வாழ்க்கையின் பெருமை சிறுமைகள், புயல்கள் பலவற்றை எதிர்த்துச் சமாளித்தாக வேண்டும். அவன் அவையனைத்தையுமே தீமையென்று கொண்டு தீவிரமாக எதிர்க்க விரும்பலாம்; ஆத்திரத்தால் அல்லது அறிவின்மையால் அவையாவும் பொய் என்று அவன் தள்ளி விடலாம்; அவை எல்லாம் உண்மையானவை உபயோகமுள்ளவை என்று அவன் கருதலாம். இது எப்படியானாலும் அவன் என்றும் காலித்தனத்திற்கு இலக்காகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வாய்மை

யைப் பொய்ம்மை யென்றோ, பொய்ம்மையை வாய்மை யென்றோ அவன் கொள்ளாதிருக்க வேண்டும். உண்மைகளும், பொருளின் தன்மைகளும் என்றும் நிலையுள்ளவை. அவற்றைத் தவறாகக் கொண்டால், தீமைதான் விளையும். தீவிரவாதியானாலும் சரி, மிதவாதியானாலும் சரி வாய்மையைப் பெரும் புதையலெனக் கொள்ளவேண்டும்; அதை முழுமனத்தோடு போற்ற வேண்டும்.

X

ரவீந்திர நாத் தாகூர் நம் நாட்டில் தோன்றிய மிகச் சிறந்த கல்வியாளருள் ஒருவராவார். அவருடைய தந்தை தேவேந்திரர் கடைசிக் காலத்தில் தம் இருப்பிடமான போல்பூரைச் சார்ந்த சாந்தி நிகேதனம் என்ற இடத்தில் தனியே இருந்துவந்தார். ரவீந்திரரும் அங்கே சென்று கொஞ்சகாலம் அங்குள்ள வனங்களிடையே நிம்மதியாக வாழ்ந்துவந்தார். ஆச்சிரமங்களில் வாழ்ந்துவந்த பெரு முனிவர்களின் வாழ்வைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தார் தாகூர். அடர்ந்த காடுகளிடையே அல்லவா ஆசிரமங்களை அமைத்துக் கொண்டு, சீடர்களுக்கு உயர்ந்த தத்துவங்களைப் போதித்து வந்தார்கள் பண்டை நாட்களில்? இவ்வெண்ணம் தோன்றவே, தாகூர் தாமும் ஒரு நல்ல கல்விச் சாலையை நிறுவவேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

தாகூருக்கு, தாம் சிறு பிள்ளையாயிருக்கும்போது கிடைத்த பள்ளிப்படிப்பில் மிகுந்த அதிருப்தி உண்டாயிற்று. அவருக்குப் பள்ளி வாழ்க்கை அறவே பிடிக்கவில்லை. அது அவருக்குச் சிறை வாழ்க்கையைப்போல இருந்தது. இயற்கையின் அழகில் ஊறித் திளைக்கும் சுதந்திர வாழ்க்

கையையும் உற்சாகத்தையும் பள்ளிவாழ்வு அறவே அழித்துவிட்டது. தன்னை யொத்த பிள்ளைகளிடையே மிகுந்த ஊக்கத்தோடும் மகிழ்ச்சியோடும் பழகுவதை மாணவர்கள் இயல்பாகவே விரும்புவார்கள். ஆனால் மதிற் சுவர்களுக்குள், இயற்கை இன்பத்தினின்றும் வெளியே, கல்வியின் பெயரால் மாணவர்கள் புத்தகங்களுக்கு அடிமைப் பட்டு வாழ்வதால் அவர்களுக்கு இயற்கை இன்பம் இல்லாமற் போகிறது. இக் கொடுமையால் மாணவர்கள் சுய உணர்ச்சியை இழந்து, மனத்தையும் உடலையும் இயந்திரத்தைப் போலப் பழக்குகிறார்கள். இந்தக் கொடுமையைக் கண்டு பயந்த தாகூர், பள்ளியை விட்டு வெளியேறி விட்டார். இங்ஙனம் தாமே பள்ளிப்படிப்பால் பெரிதும் கஷ்டப்பட்டவராதலால், அவருக்கு ஒரு புதிய முறையில் கல்வி போதிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. சுதந்திர உணர்ச்சி, சுய அறிவு, நல்ல உடல் வளர்ச்சி, கல்வியறிவு ஆகியவற்றைப் பெறத்தக்க, அப்போதிருந்த பள்ளிகளினின்றும் முற்றிலும் மாறுபட்ட புது முறைக் கல்வியை மக்களுக்குத் தரவேண்டும் என்ற அவா மேலிட்டது.

சிறந்த கல்வியை நம் நாட்டுச் சிறுவர்களுக்கு வனங்களில் அல்லவா போதிக்க வேண்டும்? இதற்கேற்ப சிறு பிள்ளைகளுக்கென ஒரு பள்ளியை அவர் சாந்தி நிகேதனத்தில் ஆரம்பித்தார். மரங்களின் நிழல் நிறைய வேண்டும். ஆசிரியரது இதயங்களின் அன்பு பெருக வேண்டும். இவ்வளவேதான் இவர் ஆரம்பித்த பள்ளியின் மூலதனம். ஐந்தே மாணாக்கர்கள் வந்தார்கள். அவர்கள் வெகு சீக்கிரமே எவ்வளவோ மாணாக்கர்களை அங்குச் சேர்க்க வழி செய்து விட்டார்கள். புராணக் கதைகளைச் சொல்லிச்

சொல்லிக் குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண் டார்கள் அங்குள்ள ஆசிரியர்கள். இப்படிச் சிறு அளவில் அமைக்கப்பட்ட சாந்தி நிகேதனப் பள்ளி இன்று விசுவ பாரதி பல்கலைக் கழகமாய், உலகத்திலுள்ள பல நாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டுறவுடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

அங்குள்ள பள்ளி ஓர் ஆச்சிரமத்தில் அமைந்துள்ளது. அந்தப் பள்ளியிலுள்ள மாணவர்களின் ஒரு நாளைய நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறினால் அது உங்களுக்கு ஆச்சிர மத்தின் உள் அழகினைக் காட்டும். சூரியன் எழு முன்பே மாணவர்கள் எழுந்து விடுவார்கள். அவர்களில் ஒரு சிலர் முன்பே எழுந்திருந்து கடவுள் வணக்கப் பாடல்களைப் பாடிக்கொண்டு ஆச்சிரமத்தைச் சுற்றி வருவார்கள். நாம் சிறிது தூரத்தே நின்றுகொண்டு கேட்டால், நிசப்தமான அவ்வேளையில் அப்பாக்களின் ஒலியும், அங்கு இருப்பத னால் உண்டாகும் மகிழ்ச்சியும் ஆன்மாவிற்குச் சாந்தியைக் கொடுக்கின்றன.

சிறிது நேரம் கழித்து ஒவ்வொரு மாணவனும் அப் பரந்த வெளியில், ஓர் ஆசனத்தமர்ந்து தனியாகத் தியா னம் செய்ய ஆரம்பிக்கிறான். பிறகு பள்ளிக்கூடம் கூடு வதற்குள் குளிப்பது முதலான வேலைகளை முடித்துக் கொள்வான். பத்தரை மணிவரையில் மாணவர்கள் ப்ள்ளி யில் இருந்து படிப்பார்கள். அவர்களுக்குப் பெரிய வகுப் பறைகள் இல்லை. வானமே கூரை; மரநிழலில் ஆசிரியர் களைச்சுற்றி உட்கார்ந்து கொள்வார்கள். எட்டு அல்லது பத்து மாணவர்கள் ஒன்றுசேர்ந்து ஓர் ஆசிரியரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு கேள்விகள் கேட்பது வழக்கம். ஒரு சில புத்தகங்களையே உபயோகிக்கிறார்கள். சம்பாஷணை

முறையிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. மாணவர்கள் தங்களுக்குள்ள கஷ்டங்களைத் தெளிவாக ஆசிரியரிடம் எடுத்துச் சொல்வார்கள். ஆசிரியரும் மாணவர்கள்மீது அன்புகொண்டு மாணவர்களுக்குள்ள சந்தேகங்களையும் கஷ்டங்களையும் நீக்க முயல்வர். இத்தகைய கல்வி முறை என்றும் அழிவுறாது.

காலைப்பள்ளி முடிந்ததும் மாணவர்கள் சாப்பிடச் செல்வார்கள். மறுபடியும் இரண்டு மணிக்குப் பள்ளி வேலை ஆரம்பமாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது ஒரு கைத்தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். கைத்தொழில் அதிகமாகப் பழக்கத்தில் வரவே, சில மாணவர்கள் மரவேலைகளிலும், சிலர் நூற்றல் நெய்தல் முதலியவற்றிலும் தனிப்பற்றுக் காட்டுவார்கள். சிலர் ஓவியத்திலும் இசை முதலான நுண்கலைகளிலும் ஆர்வம் காட்டக்கூடும். அவரவர்களுக்கு ஏற்பக் கல்வி யளிக்கப்படும் பள்ளிகள் வெகுசிலவே. அவற்றில் சாந்தி நிகேதனப் பள்ளி சிறந்து விளங்குகிறது. நான்கு மணிக்குப் பள்ளி முடிந்தவுடன் எல்லா மாணவர்களும் விளையாட ஓடிவருவார்கள்; சூரியன் மறையும் வரை விளையாடிக் கொண்டிருப்பார்கள். பிறகு எல்லோரும் தியானம் செய்ய நிசப்தமான இடத்தில் உட்காருவார்கள். இராக் காலங்களில் கதை சொல்வதும், நாடகங்கள் நடிப்பதும், குருதேவரது பாடல்களை ஒப்புவிப்பதுந்தான் பொழுது போக்கு, ஒன்பது மணிக்கு எல்லோரும் படுக்கச் செல்வார்கள். மற்றொரு முறை சில மாணவர்கள் பாடிக்கொண்டு ஆச்சிரமத்தைச் சுற்றி வருவார்கள். மாணவர்களின் சந்தோஷமான வாழ்க்கையை எடுத்துச் சொல்ல இயலாது. அங்குக் கற்கும் மாணவர்களின் முகங்களே அவர்கள் மகிழ்ச்சியை எடுத்துரைக்கும்

சாந்தி நிகேதன மாணவர்களது சுதந்திர வாழ்வைப் போல் இந்தியாவில் வேறெந்தப் பள்ளியிலும் மாணவர்கள் வாழ்வு அமையவில்லை என்று சொன்னால் மிகையாகாது.

சுய தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் மாணவர்கள் வாழ்வு அமைந்துள்ளது. காலையில் தாங்கள் குளிப்பதற்குத் தாங்களே கிணற்றினின்று குழந்தைகள் நீர் இறைத்துக்கொள்ள வேண்டும். தங்கள் படுக்கைகளைத் தாங்களே தயாரித்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் ஆடம்பரமான பொருள்களை உபயோகித்தல் கூடாது. உண்மையில் மாணவர்கள் இதில் மிக்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். அவர்கள் பிற்காலத்தில் செல்வ வளர்ச்சியை விரும்பாதிருக்க, இது பெரிதும் பயன்படும். தாகூரின் வித்தியாலயத்திலே குழந்தைகளின் சுய உணர்ச்சியை வெளிப்படுத்தும் தன்மைக்கு மிகுந்த ஆதரவு அளிக்கப்படுகிறது. இசை, நாட்டியம், ஓவியம் முதலியவை கல்வியில் முக்கியத்துவம் பெறுகின்றன. குழந்தைகள், தாங்களே பத்திரிகைகள் நடத்துவர். தாகூரின் நாடகங்களையோ, அன்றித் தாங்களே, தங்கள் சொந்த முயற்சியால் எழுதிய நாடகங்களையோ அன்னார் நடிப்பர்.

பிற பள்ளிகளைப் போலின்றித் தாகூரின் கல்விச் சாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற வேற்றுமை சிறிதும் இன்றி ஒரே குடும்பத்தினரைப்போல் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாசிரம வாழ்க்கையில்தான் தாகூர் பெரும்பான்மையான பாடல்களை இயற்றினார். அவற்றை எல்லாம் பிரசுரிப்பதற்கு முன், அங்குள்ள குழந்தைகளுக்கு அப் பாடல்களைத் தானே படித்துக் காட்டுவது தாகூரின் வழக்கம்.

XI

காந்திஜி 1937ஆம் ஆண்டில் 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு சிறு கட்டுரை எழுதியிருந்தார். அதில் இப்பொழுது வார்தா திட்டம் எனக் கூறப்படும் கல்வி முறையின் அடிப்படைக் கொள்கைகள் தரப்பட்டிருந்தன. இதுதான் வார்தா திட்டத்தின் ஆரம்பம். சுருக்கிக் கூறவேண்டுமானால் காந்தியடிகள் அதிகம் வற்புறுத்திக் கூறியவை தாய்மொழியில் கல்வி புகட்டல், ஒரு கைத்தொழிலைச் சுற்றிக் கல்வி முறைகளை அமைப்பது, கைத்தொழிலால் வரும் வருமானத்தைக் கொண்டே அத்தகைய பள்ளிகளை நடத்த முடியவேண்டும் என்ற மூன்றுந்தான்.

ஏறக்குறைய அந்தச் சமயத்தில்தான், காங்கிரஸ் 1935 ம் ஆண்டிலேற்பட்ட இந்திய அரசியல் திட்டத்தின் படி பொறுப்பேற்று, (பதினொரு மாகாணங்களுக்குள்) ஆறு மாகாணங்களில் சர்க்காரை நடத்தத் தொடங்கியது. அங்ஙனம் அமைக்கப்பட்ட காங்கிரஸ் மந்திரி சபைகள் அனைத்தும் பலாத்காரமோ தீவிரமோ இல்லாமல் பொது மக்களுக்குக் கல்வி ஊட்டுவதை ஒரு தேசியத் தொழிலாகக் கருதி வேலைசெய்ய முற்பட்டன. ஆனால் தீவிரமோ பலாத்காரமோ சிறிதும் இன்றி அதிக வருமானம் (வரிகள் மூலம்) பெறமுடியவில்லை; ஆனால் பொதுமக்களிடத்துக் கல்வி பரப்ப ஏராளமான பணம் தேவையாயிருந்தது. இவ்விரண்டு கொள்கைகளையும் இணைத்து வேலை செய்ய முடியவில்லை. இங்ஙனம் காங்கிரஸ் மந்திரிகள் தவித்துக்கொண்டிருக்கும்போதுதான் காந்தியடிகள் 'அடிப்படைக் கல்வி' என்ற திட்டத்தைக் கொடுத்து உதவினார். இதற்குக் காந்தியடிகள் கொடுத்த பெயர் 'கிராமக் கைத்தொழில்கள் மூலம் கிராம தேசீயக்கல்வி' என்பது. இப்பொழுது

இதற்கு வழங்கும் பிரபலமான பெயர் அடிப்படைக் கல்வி என்பது. காந்தியடிகளின் அன்பளிப்பான இக் கல்வித்திட்டம் நகரங்களுக்கென்று ஏற்பட்டதன்று; இந் நாட்டில் உள்ள எழுபது லக்ஷம் கிராமங்களை மனத்திற் கொண்டே ஏற்படுத்தப்பட்டது. இதனாலேயே இதைக் கிராமக் கல்வி என்று அழைக்கிறார் அவர். இந்திய கிராமங்களின் பொருளாதார நிலைக்கேற்ப அமையவேண்டும் அவைகளுக்கான கல்வி. காந்திஜி கூறிய மூன்று கொள்கைகளையும் ஆராய்ந்து, வார்தாவில் 1937ல் கூடிய கல்வி மகாநாடு அவற்றை ஒப்புக்கொண்டது. கீழ்க் கண்ட நான்கு தீர்மானங்களும் அங்கு நிறைவேறின:—

(1) நாடு முழுவதும் ஏழு வருடங்களுக்குக் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) தாய்மொழியிலேயே பாடங்கள் சொல்லித்தரப் படவேண்டும்.

(3) உடல் உழைப்புக்கொண்ட ஆக்க வேலைகளைச் சுற்றி அமைந்த ஒரு கல்வி முறையைத்தான் இந்த ஏழு வருடங்களுக்குப் பின்பற்ற வேண்டும். குழந்தைகளின் மற்றத் திறமைப்பாடுகளும் சரிவர உபயோகப்படுத்தப்பட வேண்டும். அல்லது கொடுக்கப்படும் பயிற்சி அவர்களது சூழ்நிலைக்கேற்பப் பொறுக்கப்பட்ட ஒரு கைத்தொழிலுடன் தொடர்புடையதா யிருக்கவேண்டும்.

(4) இக்கல்வி முறையால் வரும் வருமானம், அப் பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்களின் சம்பளத்திற்கு வேண்டிய அளவு இருக்கவேண்டும்.

இத்தீர்மானங்கள் நிறைவேறியபின், அம் மகாநாடு 'அடிப்படைக் கல்வி'க்கான பாடத்திட்டத்தை உருவாக்க,

டாக்டர் ஜகீர் ஸ்ரீசேன் என்றப் பெரியாரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது அந்தக் கமிட்டியார் 1937 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தங்கள் கருத்துக்களை ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டனர். இந்த அறிக்கையில்-தான் அடிப்படைக் கல்விக்கு வேண்டிய எல்லா விவரங்களையும் காண்கிறோம்.

இத் திட்டத்தின்படி ஒவ்வொரு குழந்தைக்கும் ஏழு முதல் பதினான்கு வயதுவரை கல்வி கற்பிக்கப்படும். பள்ளிப் படிப்பை முடிப்பது பதினான்காவது வயதில். இந்த வயதில் பள்ளியை விட்டு வாழ்வில் நுழைந்தால், அவர்கள் உபயோகமான நிரந்தர எழுத்தறிவைப் பெற்றிருப்பதுடன், சமூகப் பிரச்சினைகளை அறிந்து முடிவு செய்யவும், சமூக சேவையைத் தம்மாலானவரை செய்யவும் வேண்டிய மனப் பக்குவம் உடையவர்களாய் இருப்பார்கள். இவற்றிற்கு வேண்டிய மனப் பக்குவம் பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதுக்குமுன் ஏற்படாது என்பது மனோதத்துவ ஆராய்ச்சியாளர்களது கருத்து. கல்வியை ஏழு வயதுக்கு முன் ஆரம்பித்தாலும், கல்வியை ஏழு வருடங்களுக்குக் குறைவான வரையறையில் முடித்துவிட்டாலும், பள்ளியை விட்டுச் செல்லும் பிள்ளை 14 ஆண்டுகள் முடியுமுன் வாழ்வில் ஈடுபடவேண்டி வரும். இதைத் தவறு என்று அறிந்தே இளகிய மனநிலை சென்று மனவுறுதி பெறும்வரை அவர்களை நல்ல சூழ்நிலையில் வைத்திருந்து பயிற்சி தரவேண்டியது அவசியம் என முடிவு செய்யப்பட்டது.

'அடிப்படைக் கல்வி' என்பதில், எதற்கு இக்கல்வி அடிப்படை என்ற கேள்வி எழக்கூடும். இது நம் தேசியப் பண்பாட்டுக்கு அடிப்படை என்பதுதான் சரியான விடை.

இந்த ஏழு வருஷங்களில் தரப்படும் கல்வி இந்நாட்டுக் குழந்தைகள் அனைவருக்கும் பொது உடைமையாக இருக்க வேண்டும். கற்கும் மாணவர்கள் இந்துக்களாயினும் முகமதியர்களாயினும் வேறு எந்த வகுப்பைச் சேர்ந்தவராயினும் அனைவருக்கும் இது பொதுவாக இருக்கவேண்டும். எந்த இந்தியக் குழந்தையானாலும் சரி, (அங்கவீனமோ, மனநிலை கெட்டோ இருந்தாலொழிய) இந்தக் குறைந்த பட்சக் கல்வியைப் பெறுவது கட்டாயமாக அமையவேண்டும். இன்னொரு முறையிலும் இக் கல்வியை அடிப்படைக் கல்வி என்று கூறலாம். மனிதனுக்குள்ள அடிப்படைத் தேவைகளையும், பற்றுக்களையும் பொறுத்து அமைவது இக் கல்விமுறை. இதனாலும் அப்பெயர் பொருந்தும். மனித வாழ்வுக்கு ஓர் அடிப்படைத் தேவை, உபயோகமுள்ள ஆக்க வேலைகளைச் செய்வது. ஆகவே, இதற்கு இக்கல்வித் திட்டத்தில் முதன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, கல்வியென்பது சமூக வாழ்க்கையிலுள்ள அடிப்படைத்தொழில் முறைகளைத் தழுவியதாக இருக்கவேண்டும். இதற்கும் உதவியாயிருக்கிறது இக் கல்விமுறை.

தற்காலத்திலுள்ள கல்வியாளர்கள் அனைவரும் "சில உபயோகமான கைத்தொழில்களைக் கொண்டு கல்வி போதிப்பது சிறந்த முறை" என்பதுபற்றி ஏகமனதாக இருக்கிறார்கள். இதனாலேதான் உருவாயும் ஆக்கமும் உள்ளதான கைத்தொழில்களை மிக முக்கியமாகக் கருது கிறது இத்திட்டம்.

மனோதத்துவ முறையில் பார்த்தாலும் குழந்தைக்குக் கல்வியானது முற்றும் ஏட்டுப் படிப்பாகவும் கோட்பாடுகள் நிறைந்ததாகவும் இருப்பது நல்லதல்ல. இப்படியிருந்தால் குழந்தையின் சுற்றுசுறுப்பு—இயற்கை, கல்வியையே

வெறுக்கும். இங்ஙனம் குழந்தையின் மனத்தில் ஓர் ஆர்வத்தையும் குன்றாத ஊக்கத்தையும் உண்டாக்கப் பிரயோக முறைக் கல்விதான் தேவை. முதலில் சொல்லித் தரும் கருத்துக்கள் அனைத்தையும் கண்கூடாக வாழ்வுக்குப் பயன்படுத்திப் பார்த்தால்தான் இளம் உள்ளம் மகிழ்ச்சி அடையும். இதனால் குழந்தையின் உடலும் உள்ளமும் ஒருங்கே வளரும். பிற்காலத்தில் கைகளையும் அறிவையும் உபயோகப்படுத்தி ஆக்க வேலைகளைச் செய்து முடிக்கும் திறமை அப்பொழுதுதான் உண்டாகும். சுருக்கிக் கூறினால் இதை 'முழு மனிதனின் கல்வி' அல்லது "மனிதனின் எல்லா முக்கிய பாகங்களுக்கும் கல்வி" எனலாம்.

சமூக நிலையிலிருந்து பார்போம். இங்ஙனம் பிரயோக முறையில் விளைவுதரும் வேலைகளைக் கல்வித் திட்டத்தில் புகுத்துவதால் எல்லாக் குழந்தைகளும் இக்கல்வியைப் பெற்றுத்தான் தீரவேண்டும். இதன் விளைவாகத் தொழிலாளிக்கும் அறிவாளிக்குமிடையிலுள்ள வேறுபாடுகளும் வீண் சச்சரவுகளும் மறையும். அறிவை உபயோகித்து அதனால் வருமானம் பெற்று வாழ்பவன் உயர்ந்தவனா என்ற கேள்வி தோன்றாதொழியும். 'மனிதர்களுக்குள் வேற்றுமை இல்லை' என்ற கொள்கையை நிலைநாட்டுவதற்கு இது பேருதவியாய் இருப்பதுடன், தொழிலின் மேன்மையை விளக்கவும் இது உதவும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் சமூகத்திற்கு அஸ்திவாரம் போன்றதாக இருக்கிறது இத்திட்டம்.

பொருளாதார வகையில் பார்க்குங்கால், திறமையாகவும் உண்மை ஆர்வத்தோடும் இத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவந்தால், நம் தொழிற்சாலைகளின் உற்பத்திப்

பெருக்கம் எளிதில் கைகூடும். தொழிலாளர்களின் தொழிலின் திறம் உயரும். அவர்கள் குறைந்த நேரம் வேலை செய்தாலும் போதும். ஒழிந்த நேரங்களில் தொழிலாளர்கள் வேறு உபயோகமான வேலைகளைச் செய்ய முடியும்.

கல்வி வகையில் பார்த்தாலும் இத்திட்டம் மிக நல்லதென்றே தோன்றுகிறது. ஒரு தொழிலை அடிப்படையாகக் கொண்டு கல்வி புகட்டுவதால், குழந்தை பெறும் கல்வி அல்லது அறிவு விளக்கமாகவும், உபயோகமானதாகவும், நிலைபெற்றும் இருக்கும். அறிவானது வாழ்வுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும். பள்ளியில் பெறும் அறிவும் பிறகு வாழும் வாழ்க்கையும் ஒத்துச் செல்லும்.

இத்திட்டத்தில் கைத்தொழிற் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதே? இது எதற்காக? இதனால் தேர்ந்த கைத்தொழிலாளர்களை உண்டுபண்ணுவது நோக்கமன்று; கைத்தொழில்களை உபயோகப்படுத்தி, அவற்றின் மூலம் கல்வியை எளிய முறையில் போதிப்பதே நோக்கமாகும். ஆகவே கல்வி புகட்டுவதற்கு உபயோகமாயிருக்கும் தொழில்களை மட்டுமல்லாமல், எல்லாத் தொழில்களையும் சொல்லித் தருவது சரியல்ல. இன்னும் இத்தொழில்கள் மனிதனுடைய வாழ்விற்கும், இயற்கைப் பற்றுதலுக்கும் தகுந்தவாறு இருக்கவேண்டும். இதனால் அடிப்படைக் கல்வித் திட்டத்தின்படி கைத்தொழில் என்பது மற்றப் பாடங்களைப்போல ஒரு பாடமாக அமைவது மட்டும் போதாது. இந்தத் தொழிற்கல்வியை அடிப்படையாகக் கொண்டே மற்றப் பாடங்கள் கைத்தொழிலுடன் இணைக்கப்படவேண்டும். காந்தியடிகள் கூறியுள்ளபடி கைத்தொழிலைக் கற்பிக்கும்போது, அறிவுக்கு வேலை கொடாமல்

அந்தத் தொழில் முறையை மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. அறிவை உபயோகித்து, ஒவ்வொரு செயல் புரியும் போதும் அதை ஏன் செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்றும் தெரிந்து கொள்ளவேண்டும். இப்படிக் கைத்தொழிலை அறியுமானால், குழந்தைக்குப் பலவித சந்தேகங்கள் எழும். அவற்றைத் தீர்த்துக்கொள்ள ஆசிரியனிடம் சென்று பல கேள்விகள் கேட்கும். அப்போது கணக்கு, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் போன்ற பள்ளிப் பாடங்களைப்பற்றிப் பேச ஆசிரியனுக்குத் தக்க சமயம் வாய்க்கும்.

இலவசக் கட்டாய ஆரம்பக்கல்வியை எல்லாக் குழந்தைகளுக்கும் தருவது சர்க்காரின் முதற்கடமையாம். இந்த விஷயத்தில் இரண்டு கருத்துக்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பக்கல்விக்காக ஏராளமான பணம் செலவிட வேண்டியது சர்க்காரின் கடமையானாலும், வார்தா திட்டமானது ஆரம்ப நடுத்தரக் கல்விகளைப் பற்றியது. சர்க்கார் நடுத்தரக் கல்விக்கெனச் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை; ஆரம்பக்கல்விக்கு மாத்திரம் செலவழித்தால் போதும். அதிலும் அடிப்படைக் கல்விப் பள்ளிகள் தங்கள் செலவுக்கான பொருள்களைத் தாங்களே சம்பாதித்துக் கொள்ளும். ஆகையால், இவ்வகையிலும் சர்க்காருக்குச் செலவு குறைவே. எதிர்பாராத சில வகைச் செலவுகளுக்கு மாத்திரம் சர்க்கார் செலவழித்தால் போதும். இந் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான பொதுமக்களுக்கு இலவசக் கல்வி தரவேண்டுமானால் சர்க்கார் பெருவாரியாகப் பணத்தைச் செலவழிக்க வேண்டும். இது முடியாத காரியமென்றே சொன்னாலும் தகும். ஆகவே, பள்ளிக் கட்டிடங்களுக்கும், எதிர்பாராத வகையில் வரும்.

சில் செலவுகளுக்கும் மாத்திரம் சர்க்கார் உதவித் தொகைகள் கொடுத்தால் போதும். ஆசிரியர்களுடைய சம்பளத்துக்கு வேண்டிய பணத்தைத் தொழிற்பயிற்சியால் உண்டாக்கப்படும் பொருள்களை விற்றுச் சம்பாதிக்கலாம். இதனால் பள்ளிகளின் செலவின் பெரும்பாகத்தை அவையே ஏற்றுக் கொள்ளும். இங்ஙனம் சர்க்காரின் செலவு குறைந்த போதிலும், சர்க்கார் தன் பொறுப்பை முற்றிலும் உதறித் தள்ளி விடமுடியாது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சிறு பிள்ளைகளின் கையில் கொடுக்கும் மூலப் பொருள்கள் ஏராளமாக வீணாகுமே? இந்தப் பெரு நஷ்டத்தை ஈடு செய்வது எப்படி? (இப்பொழுது, உதாரணமாக, ஏழு அல்லது எட்டு வயதுள்ள குழந்தையின் கையில் பஞ்சைக் கொடுத்து நூற்கச் சொன்னால், அது அந்த வேலையைக் கற்றுக்கொள்ளுமுன் எவ்வளவு பஞ்சை வீணாக்கும்) இதற்குக் காந்திஜியின் விடை பின்வருமாறு: "இப்படி மூலப் பொருள்கள் வீணாகப் போகும் என்பது உண்மையே. இருப்பினும் ஒரு வருடம் முடிந்ததும் பார்த்தால் கொஞ்சமாவது இலாபம் கிடைப்பதில் ஐயமில்லை. கிராமப் பள்ளிகளில் அதிலும் ஆரம்ப நிலையில், பல மூலப் பொருள்கள் வீணாக்கப்படும. ஆனால் திறமைவாய்ந்த ஆசிரியனாயிருந்தால், அதிகம் வீணாகாமல் கைத்தொழிலைச் சொல்லிக் கொடுத்து விடுவான். இதைக் காந்திஜி கூறியதற்காக யாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. 'நூற்றல்' தொழிலில் இந்த வீணாகும் பொருள்கள் போக, மீதி கிடைக்கும் இலாபத்தைப் பற்றி ஜாகிர் ஹுசேன் கமிட்டி கூறுவதைப் பார்போம்: "தக்ளியை உபயோகித்தாலும் சரி, கை ராட்டையை உபயோகித்தாலும் சரி, ஆரம்பத்திலிருந்தே சிறிதும் நூல் (அறுந்து போவதால்) வீணாய்ப்

போகாமல் பார்த்துக்கொள்வது ஆசிரியனின் முக்கிய வேலையாகும். 10% வீணாகப் போவதாகக் கொள்வோம். மொத்தம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் உற்பத்தியில் 25% நோய் முதலானவற்றால் மாணவர்கள் நூற்க முடியாததால் குறைவதாக வைத்துக்கொள்வோம். இப்படி இருந்தாலும் இலாபம் வரும் என்பதில் ஐயமில்லை.'' அடிப்படைக் கல்வி புகட்டும் ஒரு பள்ளி தன் செலவுக்கான பொருளைத் தயாரிக்கும் பொருள்களின் விற்பனையால் பெறமுடியும் என்று அந்தக் குழு நிரூபித்துக்காட்டியது.

இக் குழந்தைகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் உயர்தரமாக இருக்காதே, அவற்றை யார் வாங்குவார்கள் என்பது அடுத்த கேள்வி. நாட்டுப் பற்று உள்ளவர்கள் தங்கள் கிராமத்திலுள்ள குழந்தைகள் செய்த பொருள்களைக் கட்டாயம் வாங்குவார்கள். மேலும் சர்க்கார் கச்சேரிகளில் வேண்டிய பொருள்களை யெல்லாம் இப்பள்ளிகளே தயாரித்துக் கொடுக்கக்கூடும். ஒரு தலைமுறைக்கு மக்கள் எல்லோரும் வார்தா திட்டத்தின்படி கல்வி பயிலட்டும். பிறகு, எல்லோரும் பள்ளிகளில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்க முன்வருவர். ஆகவே இது உண்மையில் அதிகக் கஷ்டமன்று.

இனி ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். கல்விச்சாலைகளை ஒருவகையில் தொழிற்சாலையாக்கி விடுமே இத்திட்டம்? குழந்தைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே கொடுக்கல் வாங்கல் வழியிலேயே சென்று விடும் மனம். ஏழு எட்டு வயதுள்ள குழந்தைகளுக்குப் பொருளாதாரப் பிரச்சினைகளில் (உற்பத்தி, விலைக்கு விற்றல், இலாபம் அடைதல்) ஊக்கம் ஏற்படுத்தினால்,

அவர்களிடம் ஒரு விதமான அடிமை மனப்பான்மை உண்டாகாதா? ஏதோ தொழிலாலைகளில் வேலை செய்வதைப்போல் அல்லவா ஆகிவிடும் மாணவர்கள் வாழ்க்கை? இக் கேள்விக்குக் காந்திஜியின் பதில் வருமாறு:—

1. நாம் ,ஒவ்வொருவரும் தினம் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்யவேண்டும். வேலை செய்வதால் யாரும் அடிமைகளாகி விடமாட்டார்கள். வீட்டில் பெற்றோர் சொன்னபடி கேட்டு வேலை செய்வதால் நாம் அடிமைகள் ஆகிறோமா? அதேபோல பள்ளிகளில் அடிமைத்தனம் என்ற எண்ணம் தோன்றுவதே தவறு.

2. 'அடிமைத்தனம்' வளரும் என்று பயப்படுவது அறியாமை. தீயவர்கள் கையில் அகப்பட்டால் நல்ல பொருள்களும் தீமையே விளைக்கும். அதுபோல எதை எடுத்துக்கொண்டாலும் அது நன்மையை விளைக்கும்; தீமையும் விளைக்கும். அதைச் சரிவர உபயோகித்துக் கொள்வது நம் பொறுப்பு.

3. தொழிலாளிகளுக்கும் இம் மாணவர்களுக்கும் அடிப்படையில் வேற்றுமை அதிகம். தொழிலாளிகள் வயிற்றுப் பிழைப்பைத் தவிர வேறு எந்தக் காரணம் பற்றியும் வேலை செய்வதில்லை. ஆனால் இங்குக் கல்வி கற்பதுதான் மாணவனின் நோக்கம். அதற்கு உதவும் வகையில் அவன் கைத்தொழில் பயில்கிறான். இத்திட்டத்தின்படி அமைக்கப்பட்ட பள்ளிகளில் பயில்வோன் தற்போது உயர்தரப் பள்ளிகளில் சொல்லித்தரப்படும் பாடங்களில் ஆங்கிலத்தைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் கற்கிறான். அவற்றுடன் கூட உடற்பயிற்சி, இசை, ஓவியம் ஒரு கைத்தொழில் இவற்றையும் பயில்கிறான். ஆகவே

இப் பள்ளிகளைத் தொழிலாலைகள் என்று கூறுவது உண்மையை மறுப்பதற்குச் சமமாகிறது.

(4) ஒரு குழந்தையின் முழுத்தன்மையையும் ஒரு கைத்தொழிலின் மூலம் வளர்க்கிறோம் என்பதனாலேயே இப்பள்ளிகள் தொழிற்சாலைகளாகா என்பது வெளிப் படை. ஏனெனில், கைத்தொழிலிற் சிறப்புப் பெறுவது போக, மற்ற எல்லாப் பாடங்களிலும் குழந்தை பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெறவேண்டும். இதனால் குழந்தையின் வளர்ப்பு முழுமை பெறுகிறது.

இந்தக் கல்வி முறைப்படி உயர்ந்த நெசவாளர்களையும் தச்சர்களையும் உண்டாக்க முடியுமே அல்லாது உண்மை யில் பண்பாடு உற்ற மனிதர்களை உருவாக்க முடியுமா? இதைப் பற்றிக் கல்வித்துறையில் உழைத்து மிகுந்த அனு பவம் பெற்ற 'தென் இந்திய ஆசிரியர்கள் கழகம்' பின் கண்டவாறு தன் அறிக்கையில் கூறுகிறது: "வார்தா திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களும் நோக்கங் களும் ஏழு முதல் பதினான்கு வயதுள்ள குழந்தைகளுக்குத் தகுந்தவையாயும் போதுமானவையாகவும் இருக்கின்றன. இலக்கியம், விஞ்ஞானம், கலை, தொழிற்பயிற்சி, அழகின் தத்துவம் ஆகிய எல்லா முக்கியத்துறைகளையும் திட்டத்தில் சேர்த்திருப்பது போற்றத்தக்கது. ஆகவே பண்பாடு வளர இக்கல்வி முறை உதவாதே என்று பயப்படுவது தவறு. அதற்கு ஆதாரம் சிறிதும் இல்லை." இன்னும் கத்தோ லிக்கப் பாதிரிமார்களால் நடத்தப்படும் "நியூ ரெவியூ" என்ற பத்திரிகை 'வர்தாவிலிருந்து ஒளி' என்ற தலைப்பின் கீழ்க் கூறுவது பின்வருமாறு: "வார்தாத் திட்டப்படி கிரா மக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் யாதொரு தீங்

குடி இல்லை. தற்போதைய ஆரம்பப் பள்ளிகளில் பின் பற்றப்படும் செயற்கையானதும் நிலைக்காததும் உபயோக மற்றதுமான முறையால் அடையும் கல்வியைவிடப் பன் மடங்கு அதிக நலனை இயற்கையான முறையில் தொழிலை அடிப்படையாகக் கொண்ட கல்வியைப் பயின்றால், மாண வர்கள் பெறுவார்கள் என்பது நிச்சயம். அவர்கள் பல துறைகளில் பயிற்சி பெற்றிருக்கமாட்டார்கள். ஆனால் பயின்ற சில துறைகளிலாவது அறிவு மிகுந்து நிலைக்கத் தக்க பிரயோகக் கல்வி பெறுவார்கள். அனைத்தையும் பார்த்தால் இப்புதுத் திட்டத்தின் மூலம் குழந்தைகள் மிக்க பண்பாடு பெறுவார்கள், கல்வியின் உண்மைப் பயனை அடைவார்கள் என்று தெரிகிறது.'' இம் முறையால் பள்ளிகளிலிருந்து வெளியேறிச் செல்வோருள் சிலர் நெசவு, தச்சுவேலை முத லான தொழில்களை மேற்கொண்டு சமூகத்தில் உழைக்க லாம். இன்னுஞ் சிலர் உண்மைப் பண்பாடும் உண்மையான நாட்டுப் பற்றும் மிகுந்து வாழலாம்.

இனி இத்திட்டத்தில் ஆசிரியர்களின் வேலை என்ன வென்பதைப் பார்ப்போம். தற்காலப் பள்ளிகளில் செய் வதுபோல ஓர் ஆசிரியர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு குழந்தைகளைப் பாடம் படிக்கச் சொல்லிவிட் டால், புதுமுறைப் பள்ளியில் ஒன்றும் நடைபெறாது. வார்தாப் பள்ளியில் ஆசிரியர் எப்பொழுதும் சுறுசுறுப் பாக இருக்கவேண்டும். குழந்தைகளுக்கு வேலை கொடுத்து விட்டு, அதைப் பரிசீலனை செய்துவர வேண்டும். திட்டத் தில் கண்டுள்ள பாடங்கள் எல்லாவற்றையும் கைத்தொழி லின் மூலம் கற்பிக்கவேண்டும். வகுப்பு முழுவதும் சுற்றித் திரிந்து மாணவர்கள் கைத்தொழிலில் செய்யும் தவறு களைத் திருத்தவேண்டும். தொழில் முறையிலிருந்து அறி

வேண்டிய பல உண்மைகளை உடனுக்குடன் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். உண்மையில் ஆசிரியர்களது வேலை அதிகக் கஷ்டமாகத்தானிருக்கும். இதனால்தான் கமிட்டியார் (ஜாகிர் ஹுஸேன்) விடுத்துள்ள அறிக்கையின் படி, சரியான ஆசிரியர்களைப் பொறுக்கி எடுப்பது இன்றியமையாததாகின்றது. சரியான ஆசிரியர்கள் இல்லையானால் இத்திட்டம் தோல்வியுறும்; ஒரு பயனையும் விளைக்காது. இதை நடைமுறையில் வெற்றிபெறச் செய்யவேண்டுமானால் ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவேண்டும். கமிட்டியார் சொல்லியுள்ளபடி ரூ. 25 கொடுத்தால் நல்ல அறிவுள்ள தொழிற் பயிற்சியுள்ள யாரும் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளமாட்டார்கள். இது ஒரு முக்கிய மான விஷயமாகும்.

உடற் பயிற்சிக்கு உரிய இடம் இத்திட்டத்தில் காணப் படவில்லை என்பது நோக்கத்தக்கது. தினம் ஒன்றுக்கு 5½ மணி நேரம் பள்ளிக்கூடம் வேலை செய்யும். இதில் 10 நிமிஷ நேரமே உடற்பயிற்சிக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பலருக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பாடத் திட்டத்தில் முக்கியமான இடம் தராததால் உடற் பயிற்சி அழிந்து போகாது. பாடப் பகுதிக்குப் புறம்பே யுள்ள இந்த உடற்பயிற்சியைக் கட்டாயப்படுத்திப் பாடத் திட்டத்திற்குள் புகுத்தினால் குழந்தைகளுக்கு அதன்மேல் வெறுப்பு ஏற்படும். உடற்பயிற்சி இயற்கையாகவும், அவர்களது விருப்பத்திற்கு ஏற்றபடியும் இருந்தால்தான் குழந்தைகள் அதில் ஊக்கம் கொள்வர். அறிவுத்துறை யினின்றும் விலகிச் சென்று ஒய்வுகொள்ளும் வகையில் எப்பள்ளியிலும் உடற்பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்யப் படும் என்பதை மனத்திற் கொள்ளவேண்டும். இருப்பினும்

பாடத் திட்டத்திலேயே சிறிது உடற் பயிற்சியும் சேர்க்கப் பட்டுள்ளது. உடற் பயிற்சியின் இயல்பு, தத்துவம் இவற்றைப்பற்றி வேண்டுமானால் உடலமைப்பு நூல், சுகாதார நூல், உணவு நெறி நூல் ஆகியவற்றின் மூலம் பாடங் களிலிருந்து அறியலாம். உடற் பயிற்சியை நேராகப் பெற்றுப் பயனடைய வேண்டுமானால் கைத்தொழில், விளை யாட்டுக்கள், தோட்ட வேலை முதலானவற்றின் மூலம் அடையலாம். ஆகவே, 'உடற் பயிற்சி தொலைந்து போயிற்று' என்ற கூக்குரல் கிளம்ப நியாயமில்லை.

மதக் கல்விக்கு இடமே தராத இத்திட்டம் ஏதாவது பலன் தருமா? மதக் கல்வி இல்லாமற் போனால் கல்வி முழுதும் வீணாக அல்லவா முடியும்? காந்தியடிகள் படித்த இந்தியர்கள் பலர் மதக்கல்வி இல்லாமலும், சமய வாழ்வின் இன்றியமையாமையை அறியாமலும் இருப்பதை எத்தனை தடவை கண்டித்துப் பேசியிருக்கிறார்! உடலைவிட ஆன்மா எப்படி முக்கியமோ அதேபோல உடற்பயிற்சி, உலகியல் அறிவு இவற்றைவிட ஆன்மீகக் கல்வி அல்லது மதக்கல்வி முக்கியமானது அல்லவா? இப்படியிருக்கக் காந்திஜி தமது கல்வித் திட்டத்தில் மதக்கல்வியை அறவே புறக் கணித்திருக்கிறாரே! இதற்குக் காந்தியடிகள் பதில் கூறு கிறாரேனும் அது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. தனக்குத் தானே உதவிக்கொள்ளுவது என்பதை 'பிரயோக சமயம்' என்று உயர்த்திக் கூறினால் போதாது. சமயவுணர்வு இல்லாமலேயே எவரும் தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ளலாம். ஆகவே மதக்கல்விக் குச் சரியான இடம் வார்தா திட்டத்தில் கொடுக்கப்பட வில்லை என்பதை மறுக்கமுடியாது. இந்தியப் பண்பாட்டை

ஒட்டிக் கல்வி போதிக்கப்படவேண்டுமானால் மதக்கல்வி யில் பயிற்சியளித்தல் மிக இன்றியமையாதது.

ஆனால், பல சமயங்கள் உள்ள இந் நாட்டில் எல்லாருக்கும் பொதுவாகச் சமயக்கல்வி புகட்டமுடியாது. ஆகவே, ஒவ்வொரு குழந்தைக்கும் அதனுடைய சமயத்தைப் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும். இதனால் வகுப்பு மனப்பான்மையும் பிரிவு உணர்ச்சியும் உண்டாகும் என்பதும் முழு உண்மையன்று. தவறான வழியில் கற்பித்தால் சமயக் கல்வி தீமை விளைக்கும் என்பது நிச்சயம். இதனால் சமயக் கல்வியைப் புறக்கணித்துவிடக் கூடாது. நெருப்பு ஏதோ ஒரு குடிசையைச் சாம்பலாக்கிவிட்டது என்ற காரணத்தால் அதை உபயோகிக்காமல் இருக்கிறோமா? கூர்மையான கத்தி யாரோ ஒருவனுடைய விரலை அறுத்து விட்டது என்ற காரணத்தால் அதைப் புறக்கணிக்கிறோமா? அந்த நெருப்பைக் கொண்டே உணவு சமைப்பதில்லையா? அபாயம் விளைவிக்கக் கூடிய நிலையில் இருக்கும்போது நோயாளியின் புண்ணைக் கீறி அவனுடைய உயிரைக் கத்தி காப்பாற்றுவதில்லையா? சரியான முறையில் சரியான ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப் படுமானால் சமயக் கல்வியைப்பற்றிப் பயப்படவேண்டிய காரணம் எதுவும் இல்லை. இன்னும் பார்த்தால் அதனால்தான் நல்ல நாட்டுப் பற்றும், சுத்த சுதந்திர தாகமும், தியாக புத்தியும் உண்டாகும்; பிரிவு உணர்ச்சியையும் வகுப்பு மனப்பான்மையையும் ஒழிக்க உண்மையான சமயக் கல்வியைத் தவிர வேறு எதனாலும் முடியாது. இதுவன்றி, சமயக்கல்வியைப் புறக்கணித்து நடத்தும் பள்ளிகள் எவையும் இந்தியப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டன ஆகா. இந்தியாவின் மூச்சு சமயவாழ்வில்; இந்தியாவின் உயிர் சமயம்.

இதை எக்காரணம்பற்றியும் மறந்துவிடக் கூடாது. ஆகவே, வார்தாத் திட்டத்திலேயே சமயக்கல்விக்கென்று சிறிது நேரம் ஒதுக்கிவைத்துக் குழந்தைகளுக்குத் தத்தம் சமயங்களைப் பற்றிய அறிவைப் புகட்டத் தக்க ஏற்பாடுகளைச் செய்யக் கல்வியாளர்களும் அரசியலாரும் முயற்சி செய்வர் என்று நம்புகிறேன்.

இன்னும் இத்திட்டத்தின்படி பள்ளிவேலை செய்ய வேண்டிய நாட்கள் அதிகம் என்றும், இங்ஙனம் கைத்தொழிற் கல்வியைக் 'கட்டாயக்கல்வி'யின் பகுதியாக்குவதால் ஆலைத் தொழில்களின் அழிவிற்கு விதை விதைப்பதாகிறது என்றும், காந்தியடிகள் கொடுத்த திட்டமாகையால் கல்வியாளார்கள் இதைக் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்றும் சிலர் கூறலாம். அவை எல்லாம் ஆதாரமற்ற சந்தேகங்கள்; வீண் விவாதத்திற்கும் சச்சரவுக்கும் வழிதேடுவனவே ஆகும்.

ஒரு கைத்தொழிலைச் சுற்றி அமைக்கப்பட்டதும், தனக்குத்தானே உதவிக்கொள்ளுவதுமான கல்விமுறையை நடைமுறையில் கொண்டுவர முடியுமா என்ற சந்தேகம் இன்றைக்கும் சிலருக்கு உண்டு. 'தனக்குத்தானே உதவிக்கொள்வது' என்பதற்கு இரண்டு வகைளில் பொருள் கூற வேண்டும். அடிப்படைக்கல்விப் பள்ளிகள் தன்னைத்தானே பண விஷயத்தில் உதவிக்கொள்ள வேண்டும்; அப் பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணவர்களும் பிற்கால வாழ்வில் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் திறம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். இம்முறை வெற்றி பெறும் என்பதற்குச் சில உதாரணங்கள் தர விரும்புகிறேன்.

1937ம் ஆண்டில் கூடிய கல்வி மகா நாட்டி லேயே ஜாகிர் ஹுசேன் அவர்கள் பின்வருமாறு கூறினர்:- கல்வித் துறையில் அனுபவம் பெற்றவர்களுக்கு இது புதுமைத் திட்டமாக இருக்காது. செயல்களை உதவியாகக் கொள்ளாமல் உண்மை அறிவுபெற முடியாது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். பல்வேறு பாடங்களையும் உடலை வருத்திச் செய்யும் வேலைகளின் மூலம் போதிப்பது நல்லது என்பதையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். குழந்தைகளுக்குப் பதின்மூன்று வயது வரை ஒருவித மனவுணர்ச்சி உண்டு. தான் செய்யும் வேலையைத் தானே கெடுக்கும்; தான் செய்து தவறிப் போன காரியத்தைப் பல முறை முயன்று எப்படியாகிலும் சரியாகச் செய்து முடிக்கும். இது குழந்தைகளின் இயற்கை. இப்பருவத்தில் குழந்தைகளைப் புத்தகங்களை வைத்துக்கொண்டு ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கச் செய்வது அவர்களது இயற்கைக்குத் தீங்கு விளைப்பது ஆகும். இதையறிந்த சில கல்வியாளர்கள் ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கொண்டு கல்வி போதிக்க முன்னமேயே ஆரம்பம் செய்துவிட்டார்கள். இது அமெரிக்கா, ரஷிய ஆகிய நாடுகளில் பல வருடங்களாகப் பழக்கத்திலிருந்து வருகிறது. அமெரிக்காவில் இதை "வெளிப்படுத்து முறை" என்றும், ரஷியாவில் "கலப்பு முறை" என்றும் கூறுகிறார்கள். இது கல்வித் துறைக்குப் புதிதன்று. இதன் வெற்றியைச் சந்தேகிக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்ஙனம் கைத்தொழிலின் உதவியால் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றவர்களை விட உற்சாகமாகவும் ஊக்கத்தோடும் பள்ளிக்குச் சென்று பயிற்சி பெறுகிறார்கள். பள்ளியைக் கண்டால் அவர்களுக்குப் பயமில்லை; பள்ளியை நினைத்தால் அவர்களுக்கு

அழுகையில்லை. உடல் வலிமையிலும் இவர்கள் முன்னணி யில் இருப்பதாகத் தெரிகிறது. "அடிப்படைக்கல்வி" நடைமுறையில் வருவதற்கு முன்னமே மதுரை ஜில்லாவிலுள்ள பசுமலை உயர்தரப் பாடசாலையிலும் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியிலும் இத்தகைய கல்வி அளிக்கப்பட்டு வந்தது. தோர்ணகல் என்ற இடத்திலுள்ள உயர்தர ஆரம்பப்பள்ளி யிலும் இம்முறை பின்பற்றப்பட்டுவந்தது. அங்கு இம் முறை வெற்றி பெற்றது என்று அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் நிர்வாகிகளும் உறுதி கூறுகிறார்கள். ஆகவே, இது நடைமுறையில் வெற்றி தருமா என்ற சந்தேகத் திற்கு இடமே இல்லை.

இனி 'அடிப்படைக் கல்வி'க்கு அமைந்துள்ள பாடத் திட்டத்தைச் சிறிது பார்ப்போம். இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள துறைகளாவன:—

I அடிப்படைத்தொழில்
II தாய்மொழி
III கணக்கு
IV சமூகப்பாடங்கள் (இவற்றில் சரித்திரம், பூகோளம், ஸிவிக்ஸ் ஆகியவை அடங்கும்)
V இயற்கையை ஆராய்தல், தாவர நூல், மிருக சாஸ்திரம், மனித சாஸ்திரம், சுகாதாரம், இரசாயனம் உள்பட விஞ்ஞானம்.
VI கலைத்தொழில் (ஆர்ட்-வர்க் என்று ஆங்கிலத் தில் இதைக் கூறுவர்)
VII இசை.
VIII இந்துஸ்தானி.

ஜாகிர் ஹூசேன் கமிட்டியார் மேலே குறித்த பாடங்களுக்குப் பின்வருமாறு கால வரையறை செய்திருக்கிறார்கள்.

அடிப்படைத் தொழில்	3 மணி 20 நிமிடங்கள்
இசை, ஓவியம், கணக்கு	40 நிமிடங்கள்
தாய்மொழி	40 நிமிடங்கள்
சமூகப் பாடங்கள், பொது விஞ்ஞானம்	30 நிமிடங்கள்
உடற்பயிற்சி	10 நிமிடங்கள்
ஓய்வுநேரம் (இடையில்)	10 நிமிடங்கள்
மொத்தம் பள்ளி நேரம்	5 மணி 30 நிமிடங்கள்

"அடிப்படைக் கல்வி"த் திட்டத்திற்கும் பழைய கல்வித் திட்டத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகளைப் பார்ப்போம்.

1. பழைய திட்டத்தின்படி கட்டாயக் கல்வி ஐந்து ஆண்டுகளுக்குத்தான் போதிக்கப்படும். புது திட்டத்தின் படி ஏழு ஆண்டுகளுக்குக் கல்வி கட்டாயப் படுத்தப்படும்.

2. ஐந்து முதல் பத்துவருடங்களாக இருந்ததற்குப் பதிலாகக் கட்டாயக் கல்விக்கு வயதளவு ஏழிலிருந்து பதினன்கு என்று ஆக்கப்பட்டிருக்கிறது.

3. ஐந்து ஆண்டுகளும் பள்ளியில் ஆரம்பக்கல்வியே பெற்று வந்ததற்குப் பதிலாக, வார்தா திட்டத்தின்படி ஏழு ஆண்டுகளில் ஆரம்ப, உயர்தரப் பள்ளிப் படிப்புகள் அனைத்தும் முடிந்துவிடும்.

4. பெற்ரேர்கள் ஒரு கட்டணமும் செலுத்தாத தால் பழைய திட்டத்தின்படி 'கட்டாயக் கல்வி' யென்ருல் பள்ளிக்குச் சர்க்காரிடமிருந்து வருவதைத் தவிர வேறு வருமானமேயில்லை. பெற்ரேர்களைத் தவிரக் குழந்தைகள் கட்டணம் செலுத்தமுடியாது. வார்தா திட்டத்தின்படி, பெற்ரேர்கள் கட்டணம் செலுத்துவதில்லை. ஆயினும் குழந்தைகளே கைத்தொழில்களைச் செய்வதின் மூலம் சில பொருள்களை உற்பத்தி செய்கின்றன. அவை பள்ளிகளுக்குச் சொந்தமாய் விடுவதால், அவற்றை விற்ருல் பள்ளிகளுக்கு வருமானம் உண்டு.

5. ஜாகிர் ஹுசேன் கமிட்டியார் செய்துள்ள ஒரு நல்ல முக்கியமான குறிப்பு தேர்வுகளைப் பற்றியது. ஆசிரியர்கள் குழந்தைகளுடன் கூடிப் பழகுவதால் அவற்றின் அறிவுத் திறமையையும், கைத்தொழிலில் கொள்ளும் ஊக்கத்தினையும், அவைகளின் தனிப்பட்ட ஆர்வத்தையும் எளிதில் அளந்துவிடலாம். ஆகவே, இப்பொழுதுள்ளது போல எழுதும் தேர்வுகளைத் தனியாக நடத்தவேண்டுவதில்லை.

XII

அடுத்தபடியாக ஸர் ஜான் ஸார்ஜண்ட் என்பாரின் திட்டத்தைச் சிறிது ஆராய்வோம். அவரது திட்டத்தை விரிவாக எடுத்துக் கூறுவது என் நோக்கமன்று. அவரது தேசீயக் கல்வித் திட்டத்தின் முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு:—

1. அனைவருக்கும் ஐந்து அல்லது ஆருவது வயதிலிருந்து பதினன்கு ஆண்டுகள் நிறையும் வரை கட்டாய இலவசக் கல்வி கொடுக்கவேண்டும். இதனல் பதினன்

காம் ஆண்டில் மாணவர்கள் எழுதப்படிக்கவும் கணக்குப் போடவும் தெரிந்துகொள்வதுடன், நல்ல ஒரு பிரஜையாக இருக்கவும் தகுதியுடைவர்களாக இருக்கவேண்டும்.

2 கட்டாயக் கல்வி ஆரம்பிப்பதற்கு முன்னமே பராமரிப்புப் பள்ளிகளில் (இவற்றை கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் 'பிருந்தாவனம்' என்ற அழகிய பெயரால் குறிப்பிடுவது வழக்கம்) குழந்தைகள் சேர்க்கப்பட வேண்டும். இதனுல் சுகாதார வசதிகள் இல்லாத வீடுகளாயிருந்தாலும், குழந்தைகள் தேக ஆரோக்கியத்தைப் பெறுவது முடியும்.

3. இந்தக் கட்டாயக் கல்விக்குப் பின்னுல் உயர்தரப் பள்ளிகளில் கல்விபெற விரும்புவோருக்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். சாதாரணமாகக் குழந்தைகளில் 20% பேர் உயர்தரப் பள்ளிகளில் சேரலாம். அவர்களுக்குத் தரப்படும் கல்வி பலதிறப்பட்டதாக இருக்கவேண்டும். குழந்தைகள், தங்களுடைய ஆர்வத்திற்கு ஏற்ப ஏதேனும் ஒரு பாடத்தை எடுத்துக்கொள்ள வசதிசெய்ய வேண்டும். இது தவிர மிக்க திறம்படைத்த மாணவர்கள் தங்கள் ஏழ்மையால் கல்வி பெருமல் போகாதபடி, அவர்களுக்கு வேண்டிய சம்பளக் குறைப்பு, உதவித்தொகை கொடுத்தல் போன்ற வசதிகளேயும் சர்க்கார் செய்ய முன்வரவேண்டும்.

4. பொறுக்கி எடுக்கப்பட்ட சில மாணவர்களேப் பல்கலைக் கழகங்களில் எடுத்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக, உயர்தரப் பள்ளிகளிலிருந்து வெளிவரும் மாணவர்களில் சுமார் பதினைந்துக்கு ஒருவர் வீதம் பல்கலைக் கழகங்களில் சேர தகுதியுடையவர்களாயிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

5. தொழில், வியாபாரம், கலை ஆகிய துறைகளில் வேண்டுவோருக்குக் கல்விதரப் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். இதன் பாடதிட்டங்கள், கல்விமுறை, இத்தகைய பள்ளிகளை நிறுவவேண்டிய இடம் முதலானவை பெரும் பாலும் தொழில், வியாபாரம் ஆகியவற்றின் தேவைகளைப் பொறுத்து நிச்சயிக்கப்பட வேண்டும்.

6. தொழில் முறையாலும், வேறு முறைகளாலும் முதியோர் கல்வியைப் பரப்ப ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

7. புரட்சிகரமான புதுக்கல்வித் திட்டங்களின்படி கல்விபோதிக்க ஏராளமான ஆசிரியர்கள் வேண்டும். இவர்களுக்குச் சரியாகப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல் (சர்க்காரின்) முதற் கடமையாகும்.

8. பள்ளிகள் நல்ல சுகாதாரமான சுற்றுப் புறங்களில் இருக்கவேண்டும். சரியான வகையில் வகுப்பறைகளும், அதிலுள்ள மரச்சாமான்களும் அமைக்கப்பட வேண்டும். விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றைச் சரிவர நடத்தவேண்டும். மாணவர்களை அப்போதைக் கப்போது ஒரு சிறந்த வைத்தியரைக் கொண்டு பரிசோதித்துப் பார்க்கவேண்டும். மாணவர்களிடம் காணப்படும் உடல் கோளாறுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

9. உடல்நலம் குன்றினவர்களுக்கும், அங்கவீன மானவர்களுக்கும், மனநிலை சரியாய் இல்லாதவர்களுக்கும் தனிப் பள்ளிகள் அமைப்பதும் அவசியம். அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டிய பாடங்களும் முறையும் வேறுபடும்.

10. பள்ளி நேரங்களைத் தவிர, மற்றபடி பொழுது போக்குவதற்கு வேண்டிய விளையாட்டுக்களையும், கூடிப்

பழகுதல், கூடி விளையாடுதல் ஆகியவற்றிற்கு வேண்டியவை களையும் பள்ளிகள் ஏற்பாடு செய்யவேண்டும். கூட்டுறவு மனப்பான்மை சிறு வயதிலிருந்தே வளர்க்கப்பட வேண்டும்.

11. பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளி யேறிச் செல்வோருக்கு உதவ வேலைதரும் கழகங்களை ஏற் படுத்த வேண்டும். மாணவனின் தனிச் சிறப்பையும், உடல் நலம் குடும்பநிலை ஆகியவற்றையும் தெரிந்துகொண்டு, சமூ கத்தில் எந்த இடத்தில் அவனை வைத்தால், அவனும் பய னடைந்து சமூகத்திற்கும் சிறந்த சேவை செய்ய முடியும் என்று அறிந்து, அவனை வேலையில் அமர்த்துவது இக் கழகங்களின் வேலையாயிருக்க வேண்டும்.

12. கல்வியைப்பற்றி நினைத்து அத்துறையில் உழைத் துள்ள அறிஞர்களுக்கு ஊக்கமூட்டி, அரசியல் நிர்வாகத் தில் அவர்களுக்கும் பங்கு அளிப்பது, சர்க்கார் செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும்.

இனி இதன் உட்பொருள்களையும் விவரங்களையும் சொல்லத் தேவையில்லை.

இதுகாறும் சில பெருங் கல்வியாளர்களின் கருத்துக் களைப் பார்த்தோம். பண்டைநாளில் இந் நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் இருந்த கல்வி முறைகளை ஆராய்ந்தோம். சமீபகாலத்தில் வெளிவந்த இரண்டு பெரிய கல்வித் திட்டங் களின் தத்துவங்களையும், நன்மை(தீமை)களையும், மற்ற எல்லா விவரங்களையும் தெளிவாகத் தெரிந்துகொண்டோம். இப்பொழுது அமுலில் இருந்துவரும் கல்வித் திட்டத்தைப் பற்றிச் சொன்னால் பயனில்லை; அது யாவரும் அறிந்ததே.

அதுவும் தவிர, இதுவரை கூறியவற்றிலிருந்து தற்காலக் கல்வித்திட்டத்தில் உள்ள முக்கியமான ஊழல்கள் தெரிய வரும். இப்பொழுது வருங்காலத்திற்கான ஒரு சிறந்த கல்வி முறையை உருவாக்கவேண்டும். அதற்கு நாம் சொல்லும் யோசனைகள் யாவை? வருங்கால இந்தியாவின் கல்விக்கு எந்தத் திட்டம் வகுத்தால் நல்லது? இதுதான் பிரச்சினை. இதற்கான யோசனைகளைச் சுருக்கிக் கூறு கிறேன்.

வருங்கால இந்தியாவிற்கு உருவாக்கப்படும் கல்வி முறையைப் பற்றிக் கூறுமுன்பு அதை இரண்டு பிரிவுகள் ஆக்கிக்கொள்ள வேண்டும். (1) அதன் தத்துவம் அல்லது அடிப்படைக் கொள்கைகள் (2) முழுவிவரம். நான் முதலில் அதன் விவரத்தைச் சொல்லி விட்டுப் பின்பு அடிப்படைக் கொள்கைகளைப் பற்றிக் கூறுகிறேன்.

கட்டாய இலவசக்கல்வி எல்லாக் குழந்தைகளுக்கும் ஆறு வயது முதல் பதினான்கு வயதுவரை கொடுக்க வேண்டும். இந்தக் கல்வியை ஆரம்பக் கல்வியென்றும் நடுத் தரக் கல்வியென்றும் பிரித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கட்டாயக் கல்வியில் முதல் ஐந்து ஆண்டுகள் ஆரம்பக் கல்வியும் பின் மூன்று ஆண்டுகள் நடுத்தரக் கல்வியும் கொடுக்கப்படும்.

ஆனால் இந்த மாதிரியான ஆரம்பப்பள்ளிகளில் சேரு முன்பே குழந்தைகள், சில ஆண்டுகளைப் பராமரிப்புப் பள்ளிகளில் கழிக்கவேண்டும். இரண்டாவது வயதில் பராமரிப்புப் பள்ளியில் சேர்த்து, ஆறு வயதாகும் வரை அங்கே அவர்களை வைத்திருப்பது நல்லது. நல்ல சூழ் நிலையில் (சுகாதார, சமூக வசதிகள்) உள்ளவர்கள் தங்கள்

குழந்தைகளை இப்பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டியதில்லை. ராஜாஜிஅவர்கள் "தெருவிற்கோர் பிருந்தாவனம்'' வேண்டுமென்கிறார். அது மிகவும் நல்லயோசனை தான். ஆனால் அதற்காகச் செலவிடப் பணமும் அங்கு வேலைசெய்ய ஆசிரியர்களும் இல்லையாதலால் மேற்கூறிய ஏற்பாடு செய்யலாம். ஆனால், தொழிலாளிகள் வாழுமிடங்களிலும், ஏழைப் பாட்டாளிகள் வாழும் சேரிகளிலும் இத்தகைய பராமரிப்புப் பள்ளிகள் உடனே ஏற்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்டோர் முன்வந்து இத்தகைய பள்ளிகளை ஏற்படுத்தி நடத்தினால் மிகவும் நல்லது. ஆனால் அத்தகையோருக்குச் சர்க்கார் தம்மாலான உதவியைச் செய்யும் என்று நம்புகிறேன். இந்தப் பள்ளிகளில் சிறிது உணவும், பால் போன்ற சத்துள்ள பொருள்களும் வழங்கவேண்டும். மேலும் குழந்தைகளுக்கு இளைப்பாறவும் வேண்டியபோது விளையாடவும் வசதிகள் இருக்கவேண்டும். பராமரிப்புப் பள்ளிகள் அனைத்தும் நல்ல அழகான தோட்டங்களில் அமைக்கப்படவேண்டும். இயற்கைச் சூழ்நிலை யென்பது தொனிக்க 'பிருந்தாவனம்' என்று அப்பள்ளிகளை ராஜாஜி கூறியது எவ்வளவு பொருத்தம் பாருங்கள்!

இனி ஆரம்பக் கல்வியைப் பற்றிப் பார்ப்போம். பராமரிப்புப் பள்ளி, ஆரம்பப்பள்ளி, உயர்தரப்பள்ளி ஆகிய மூன்றுவகைப பள்ளிகளும், தொழிற் கல்விக்கும் வியாபாரக் கல்விக்குமான பள்ளிகளும் இருந்தால் போதும். உயாதர ஆரம்பப்பள்ளிகள் என்று வழங்கும் எட்டு வகுப்புக்களை உடைய பள்ளிகள் அனைததும் மூடப்படலாம். அல்லது அவை உயர்தரப் பளளிகளாக மாற்றப்படலாம். ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளி

திறக்கப்படவேண்டும். இப்பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளுக்குப் பலகை, புத்தகம், எழுதுகோல் போன்றவைகளைப் பள்ளிகளில் கொடுக்கவேண்டும். மேலும் அக்குழந்தைகளுக்கு உச்சிவேளையில் உணவும் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் அதிக அளவில் பெண்களை ஆசிரியர்களாக நியமிக்க முயற்சி செய்யவேண்டும். பொது மக்களது குழந்தைகளின் ஆரம்பக் கல்விக்குச் சர்க்கார் முழுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். தற்போதுள்ள பள்ளிகளில் நன்றாக நடைபெறுவனவற்றைத் தவிர, மற்றவைகளைச் சர்க்காரே ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டும். பள்ளிகளில் தேவையான விளையாட்டு வசதிகளும், சுகாதார வசதிகளும் உள்ளனவா என்பதையும், அங்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்குச் சரியானபடி சம்பளம் கொடுக்கப் படுகிறதா என்பதையும் சர்க்கார் அதிகாரிகள் அடிக்கடி மேற்பார்வையிட வேண்டும். இங்ஙனம் நியமிக்கப்படும் சர்க்கார் அதிகாரிகள் கல்வித்துறையில் உழைத்தவர்களாகவும் ஆசிரியர்களாக இருந்து அனுபவம் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்து அனுபவம் பெற்றவர்களையே ஆரம்பப் பள்ளிகளைப் பார்வையிட நியமிக்கவேண்டும். வெளிநாடுகளில் கல்விபயின்ற காரணத்தாலோ, கல்வி இலாகாவில் திறமையான குமாஸ்தாவாக இருந்ததற்காகவோ, கல்லூரிகளில் திறமைப்பட வேலை செய்ததற்காகவோ எவரையும் ஆரம்பப் பள்ளிக்கு மேற்பார்வை அதிகாரிகளாக நியமிக்கக்கூடாது.

ஆறு வயது முதல் பதினோரு வயதுவரை ஆரம்பப் பள்ளிகளில் பயின்றபின், பதினொன்றிலிருந்து பதினான்கு

வரை நடுத்தரப் பள்ளிகளிலும், பதினன்கிலிருந்து மூன்று ஆண்டுகள் உயர்தரப் பள்ளிகளிலும் பயிற்சி கொடுக்கலாம். பதினன்கு வயது வரை அடிப்படைக் கல்வியையே எல்லாப் பள்ளிகளிலும் கைக்கொள்ளலாம். ஆரப்பப் பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்களை ஒரு தேர்வு மூலம் பொறுக்கி யெடுக்கும் முறை சரியன்று. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சிபார்சைப் பரிசீலனை செய்து நடுத்தரப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இம்மூன்று ஆண்டுகளிலுங் கூட எல்லோருக்கும் ஒரே விதமான பொதுக் கல்வியே வழங்கப்படும்; எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படும். உடற் பயிற்சி, கைத்தொழில், வைத்தியரைக் கொண்டு மாணவர்களைப் பரிசோதிக்கச் செய்து அவரிடமிருந்து அவர்களது உடல் நிலையை அறிதல் ஆகிய மூன்றையும் முக்கியமாகக் கருதவேண்டும். நடுத்தரப்பள்ளியிலிருந்து வெளிவந்ததும் மாணவனுக்கு (1) எழுதப்படிக்க நன்முகத் தெரிந்திருக்க வேண்டும் (2) தொழிற் கல்விக்காகுலும் கலைக் கல்விக்காகுலும் தகுதியிருக்கவேண்டும். (3) உடனே வேண்டுமாறுலும் ஒரு கைத்தொழில் செய்து பிழைக்கத் தயாராயிருக்க வேண்டும்.

உயர்தரப் பள்ளிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போதும் முன்கூறப்பட்ட முறையே அநுசரிக்கப்பட வேண்டும். இந்தப் பள்ளிகளை இருவகையாகப் பிரிக்கலாம்: அவை (1) தொழிற் (கல்விப்) பள்ளிகள் (2) தயாரிப்புப் பள்ளிகள் என்பன. மாணவனும் ஆசிரியரும் கலந்து ஆலோசித்து, அம்மாணவன் கல்லூரிகளில் சென்று பயில்வதானுல் அவனைத் தயாரிப்புப் பள்ளிகளிலும், அவன் நேரே ஒரு தொழிலில் பயிற்சிபெற விரும்பினுல் தொழிற்

பள்ளிகளிலும் சேர்க்கவேண்டும். ஆகவே, இதுவரை எல்லா மாணவர்களும் வார்தா திட்டப்படி ஒரு கைத்தொழிலைப் பயின்றூர்கள் என்றுலும், உயர்தரப் பள்ளிகளுக்கு வந்ததும் தயாரிப்புப் பள்ளிகளில் சேருவோர் அறிவுத் துறையிலேயே அதிக கவனம் செலுத்துவர். ஆனுல் அவர்களுக்கும் ஏதாவது ஒரு கைத்தொழில் (அவர்கள் ஆரம்ப, நடுத்தரப் பள்ளிகளில் கற்றது) கற்பிக்கப்பட வேண்டும். தொழிற் பள்ளிகளில் சேருவோர் தொழிற் பயிற்சியிலேயே அதிக கவனம் செலுத்துவர். ஆயினும் அவர்களுக்கும் செய்யும் தொழில்களுக்கேற்பச் சிறிது அறிவுத்துறையில் ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்.

உயர்தரப் பள்ளிகள் அனைத்தும் கிராமங்களிலோ, நகரங்களுக்குப் புறம்பேயுள்ள இயற்கைச் சுற்றுப் புறங்களிலோதான் அமைக்கப்பட வேண்டும். பெற்றேரைப் பிரிந்துவந்து வாழும் மாணவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்த வேண்டும். இவை பள்ளிகளுக்கருகில் சிறு வீடுகளிலோ, குடிசைகளிலோ இருப்பின் நல்லது. ஒவ்வொரு வகுப்பிலும் முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கலாகாது. இருப்பின், ஆசிரியர் மாணவரிடையே உறவு நல்ல முறையில் இருக்கமுடியாது. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வோர் ஆசிரியர் இருந்து, அவ்வகுப்பிலுள்ள மாணவர்களின் பொதுநிலையை (உடல் நலன், ஒழுக்கம், சிறப்பு, ஊக்கம் ஆகியவை) அறிந்துகொள்ள வேண்டும். மாணவர் விடுதிகளில் அதிக மாணவர்களிருப்பின் அவர்களைப் பதினைந்து அல்லது இருபதுகொண்ட சிறு கூட்டங்களாகப் பிரித்து, அவர்களைத் தனித்தனிக் குடிசைகளில் வசிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு குடிசையும் ஒரு ‘இல்லம்’ என வழங்கப்படலாம். ஒவ்வொரு

இல்லத்தின் பொறுப்பையும் ஓர் ஆசிரியர் ஏற்று நடத்த வேண்டும்.

உயர்தரப் பள்ளிகளில் படித்து முடிந்தபின் மாணவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் கல்விக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தொழிற் கல்லூரிகள் மூலமோ, சாதாரணக் கலை விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கும் கல்லூரிகள் மூலமோ பல்கலைக் கழகம் கல்வி அளிக்கும். தொழிற் கல்லூரிகளின் பொறுப்பு, கல்வி, வியாபாரம், தொழில் இலாகாக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும். உயர்தரப்பள்ளி முடிந்ததும், கைத்தொழில் செய்து பிழைக்கவோ, மேலும் தொழிற் கல்வி பெறவோ மாணவன் தகுதியுடையவனாக இருந்தால், பல்கலைக் கழகத்தில் (அவற்றின் கீழுள்ள கல்லூரிகளில்) இப்பொழுது உள்ளதுபோல, பல மாணவர்கள் வந்து குவியமாட்டார்கள். இதனால் இப்பொழுதுள்ள ஒரு பெரிய பிரச்சினை எளிதில் தீர்ந்துவிடும். கல்லூரிப் படிப்பு இப்பொழுதுள்ளது போல நான்கு ஆண்டுகள் நடைபெற வேண்டியதில்லை. ஒரு பட்டம்பெற மூன்று வருடங்கள் ஏதாவது ஒரு கல்லூரியில் படித்தால் போதும். அதற்குப் பிறகு ஆராய்ச்சிகள் நடத்த விரும்புவோர், ஆராய்ச்சிக்கான பாடத்தில் மாத்திரம், ஒரு பட்டம் பெற்றபின், இரண்டு ஆண்டுகள் பயிலவேண்டும். ஆகவே, தொழிற் கல்லூரிகளில் ஆயினும் சரி, கலைக் கல்லூரிகளிலாயினும் சரி, ஒரு மாணவன் இடம்பெற அவன் உயர்தரப் பள்ளியில் படித்து முடித்திருந்தால் போதும். தொழிற் கல்லூரிகளில் பாடத்திட்டங்கள் அத்தொழிலின் தேவைக்கும், அத்தொழிலை நன்கறிய வேண்டிய அடிப்படையான அறிவுக் கல்விக்கும் தக்கவாறு அமைய

வேண்டும். எத்துறையிலாயினும் சமூக உணர்ச்சிக்கான பாடங்களைப் போதிப்பது அவசியம். பள்ளிகளிற் போலவே கல்லூரிகளிலும் மாணவர்களைச் சிறுசிறு கூட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு கூட்டத்தின் பொது நிலையையும் அறிய ஓர் ஆசிரியரை நியமிக்கவேண்டும். இம் முறை ஆக்ஸ் போர்ட் போன்ற மேனாட்டுக் கலைக்கழகங்களில் நடை பெற்று வருகிறது. இதை ஆங்கிலத்தில் "டியூடோரியல்" முறை என்று கூறுவர். மாணவர் விடுதிகளமைக்க வேண்டுமானால் மாணவர்களை இருபத்தைந்து அல்லது முப்பது மாணவர்கள் கொண்ட சிறு கூட்டங்களாகப் பிரித்துத் தனித்தனி இல்லங்களில் வசிக்கச் செய்தல் நல்லது. ஒவ்வொரு இல்லத்தையும் பார்த்துக்கொள்ள ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும்.

இனி ஆராய்ச்சிக்கான ஏற்பாடுகளைச் சிறிது பார்ப் போம். ஒவ்வொரு கல்லூரியிலும் (சாதாரணக் கல்லூரி ஆனாலும் சரி, தொழிற் கல்லூரி ஆனாலும் சரி), அங்குப் பயிற்றப்படும் பாடங்களில் மாணவர்கள் ஆராய்ச்சி செய் வதற்கான வசதிகள் செய்துதரப்பட வேண்டும். ஒவ் வொரு கல்லூரியிலும் அதிகப்படியான ஆசிரியர்களை நியமித்து, அவர்களது வேலை நேரத்தைக் குறைத்து, ஆராய்ச்சிக்காக நன்கு யோசிக்கவும் புதிய புத்தகங்களைப் படித்தறியவும் அவகாசம் கொடுக்க வேண்டும். அப் பொழுதுதான் ஆசிரியர்கள் ஆராய்ச்சித் துறையில் ஏதே னும் செய்ய முடியும். இங்ஙனம் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சர்க்கார் ஏதாவது உதவித்தொகை கொடுக்கவேண்டும். மேலும் ஆராய்ச்சித் துறையில் வேலை செய்வோருக்கும், ஆராய்ச்சி எந்தத் தொழிலைப் பற்றியதோ அந்தத் தொழிலுக்கு உரிய சர்க்

கார் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். உதாரணமாக விவசாய முறைகளில் ஆராய்ச்சி செய்வதானால் ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்கும் விவசாய டைரக்டர் போன்ற அதிகாரிகளுக்கும் தொடர்பு இருந்தால், விவசாயத்திற்கு உடனே தேவையானவற்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துக் கொடுக்கலாம்; அவர்கள் கண்டு பிடித்ததை உடனே விவசாயத்திற்கு நேரே உபயோகித்துப் பார்க்கலாம். இதுபோலவே ஒவ்வொரு துறையிலும் நடக்க வேண்டும்.

பெண்களுக்குக் கல்வி அவசியமென்பதைப் பற்றிக்கூற வேண்டுவதில்லை. ஆனால் முக்கியமாக இரண்டு விஷயங்களை மாத்திரம் கூற விரும்புகிறேன். குடும்பவாழ்வு இன்பமானதாக இருக்க வேண்டுமானால், வருங்காலக் குழந்தைகள் நன்றாக வளர்க்கப்பட வேண்டுமானால், வீட்டிலுள்ள பெண்களிடையே நல்ல முறையில் கல்வியை வளர்க்க வேண்டும். இரண்டாவதாகச் சமூகத்தில் கல்வி புகட்டுவது, வைத்தியம் முதலான சில தொழில்களுக்கு ஏராளமான பெண்கள் தேவை. இங்ஙனம் சமூகத்தில் சில இடங்களில் இருந்து தொண்டு புரியவும் பெண்களுக்குக் கல்வி யளிக்கவேண்டியது இன்றியமையாததாகும். ஆரம்பப் பள்ளியிலிருந்து வெளிவரும் வரையிலும் (11-வயது நிரம்பும் வரை) கல்லூரிகளில் சேர்ந்த பிறகும் (17க்கு மேல்) வேண்டுமானால் ஆண், பெண் மாணவர்கள் எல்லோருக்கும் ஒரே வகுப்பில் (ஒரே பள்ளியில்) பாடங் கற்பிக்கலாம். ஆனால் 11 முதல் 17 வரையுள்ள அந்தப் பருவத்தில் ஆண்களுக்குத் தனிப் பள்ளிகளும் பெண்களுக்குத் தனிப் பள்ளிகளுந்தான் ஏற்படுத்த வேண்டும். இது மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறும் கருத்து. பெண்களுக்கு என்று தனியாக உயர்

தரப் பள்ளிகளையும் நடுத்தரப் பள்ளிகளையும் அமைப்பது அவசியம். அங்குப் பெண்களுக்கான வேலைகளைச் சொல்லித் தர வேண்டும். பெண்களுக்கும் விடுதிகள் ஏற்படுத்தலாம் ஆனால் அவர்களுடன் வயதான பெண் ஆசிரியர்கள் வாழ்ந்து நெருங்கிப் பழகுவது மிக அவசியம். ஆண், பெண் இருபாலார்க்கும் கல்வி தரும் எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு உயர்தரப் பள்ளிகளில் தையல், சமைத்தல், குழந்தைகளின் பராமரிப்பு போன்ற விஷயங்களில் தனிப் பாடங்கள் சொல்லித்தரப்பட வேண்டும். பெண்களுக்குக் கல்விச் சாலைகளில் தரப்படும் கல்வியும் (கலை, விஞ்ஞானம்) உடற் பயிற்சியும் பிற்காலத்தில் அவர்களுக்கு உபயோகமாகும் வகையில் இருக்கவேண்டும்.

தற்காலக் கல்வி நிலையைப் பற்றி ஆராயும்போது சிறப்பாக நாட்டுப் புறங்களில் தற்போது இருந்துவரும் கல்வி முறையைப்பற்றித் தீர ஆலோசிக்க வேண்டும் இப்படிப் பார்க்கும்போது முக்கியமாக ஐந்து ஊழல்கள் தென்படுகின்றன. அவையாவன :- (1) நாட்டுப்புறங்களில் கல்வி முழுவதும் தொடக்கக் கல்வியே ஆகும். அது படித்தல், எழுதுதல், கணக்குப் பார்த்தல் இவற்றுள் அடங்கும். இந்தக் கல்வியைக்கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கை நிலைக்குரிய பல்வேறு அறிவுகளையும் பெறவேண்டியிருக்கிறது. ஆனால் இது நடைமுறையில் மிகவும் கஷ்டமாகத் தானிருக்கும். (2) நாட்டுப்புறங்களில் ஒரு பள்ளிக்கூடம் அமைந்திருப்பதே அரிது. நான்கு அல்லது ஐந்து கிராமங்களுக்கு ஒரு பள்ளிக்கூடந்தான் இருக்கும். இங்ஙனம் இருப்பதால் பலருக்கு “அவ்வளவு தூரம் சென்று படிப்பதா? இது நம்மால் முடியாது” என்று தோன்றிவிடுகிறது.

இதனாலேதான் மேல்நாடுகள் மக்களைத் தேடிப் போகும் வகையில் கல்வி முறை அமைந்திருக்கிறது. வீடு வீடாகச் சென்று மக்களைக் கண்டு பேசி அவர்கள் கல்வி பயிலுவதற்கான உதவிகளைச் செய்துவரப் பலர் நியமிக்கப் பட்டுள்ளனர். (3) அப்படி ஒரு பள்ளிக்கூடம் இருந்தாலும் கிராம மக்கள் அங்கே சென்று கல்விபெற அவர்களுக்கு வேண்டிய நேரமும், பண செளகரியங்களும் கிடைப்பது கஷ்டம். கிராமங்களில் இருப்போர் பெரும்பாலும் விவசாயிகள். அவர்களுக்கு விதை போடுதல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற வேலைகள் வருமாயின், பள்ளிக்கூடங்களுக்கு அவர்களால் போக முடியாது. அதுவுமன்றி, மற்ற நாட்களிலும் காலையிலிருந்து மாலை வரையில் வயல்களில் வேலை செய்ய வேண்டியிருக்கக் காலை ஒன்பது மணிமுதல் மாலை நான்கு மணிவரை பள்ளிக்கூடத்தில் வந்து இருக்க வேண்டுமென்றால், அது இயலாத காரியம் என்றே தோன்றுகிறது. இதைச் சரி செய்ய நம் பள்ளிக்கூடங்களின் வேலைநேரம் அவையுள்ள கிராமங்களில் உள்ளவர்களுடைய வேலையைப் பொறுத்திருக்க வேண்டும். (4) அப்படியும் வேண்டிய மாறுதல்களை ஏற்படுத்தினாலும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் தான் இவர்கள் பள்ளிக்குச்சென்று படிப்பார்கள். (5) காலத்தை வீணாக்கக் கூடாது என்பது பற்றி இரண்டு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. காலச் சுருக்கமுள்ள முறைதான் நல்லது ஆனால் காலச் சுருக்கம் என்ற கருத்தின் பெயரால் பலர் தத்தம் மனம் போன போக்கில் கல்வி கற்பித்து வருகின்றனர். பண்டை முறைகளிலிருந்த உண்மைக் கல்விக்கான கருத்துக்கள் அனைத்தும் மறைந்து வருகின்றன. (6) மேல் வகுப்புப் பாடங்களில் நாட்டுப்புற மக்களுக்கு வேண்டிய விஷயங்கள்

சிறிதும் காணப்படுவதில்லை; பிற நாட்டு நகரங்களின் சிறப்பு, அங்குள்ள பலர் வரலாறுகள் போன்றவை பாடங்களாக அமைந்துள்ளன. இன்னும் ஊன்றிப் பார்த்தால் பாடப் புத்தகங்களைப் பரிசோதிப்போர், நடைமுறை வாழ்வுக்கு ஒவ்வாத கருத்துக்கள் இருப்பின் அப் புத்தகங்களைத் தள்ளிவிடவேண்டும். பாடப் புத்தகங்களைப் பரிசீலனை செய்து தம் கருத்தைத் தெரிவிப்பதன் மூலம் நம் நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வைத் தாங்கள் நிர்ணயிக்கின்றார்கள் என்ற கருத்தை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். [உதாரணமாக இன்று சென்னை மாகாணத்தில் 'கிராமப் புனருத்தாரணத் திட்டம்' அமுலில் வந்துகொண்டிருக்கிறது. காந்தியடிகளின் கருத்துப்படிக் கிராமக் கைத்தொழில்களை உயிர் பெற்று எழச் செய்தாலன்றி நாட்டிற்கு உய்வு இல்லை. இத்தகைய அரும் பணியை ஆற்ற நம் சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பாடப் புத்தகத்தில் கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பிப்பது கூடாத காரியம் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தைச் சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள பாடபுத்தகக் குழுவினரே அங்கீகரித்து அதைப் பள்ளிகளில் போதிக்க அனுமதிப்பார்களானால் இதை என்னென்பது! காந்தியத்தின் அடிப்படைத் தத்துவம் தவறிப் போகிறதே! சிறு வயதில் இத்தகைய விஷயங்களில் ஒரு கருத்து ஏற்படுமானால் வயதான பிறகு அதை மாற்றுவது கடினமான காரியம் ஆயிற்றே] (7) நீதி நூல்கள் மிகவும் இன்றியமையாதவை. சிறு பிள்ளைகளுக்காயினும் சரி, முதியோர்களுக்காயினும் சரி, நீதி நூல்களைக் கற்பித்தால் அல்லாமல் அவர்களது கல்வி பயன் உடையதாகாது. இப்படியிருக்க நீதிநூல்

களை முழுவதும் ஒதுக்கியோ, அல்லது சிலவற்றைப் பொறுக்கி முறை தவற அமைத்தோ, இக்காலத்துப் பாட நூல்கள் தோன்றுகின்றன. இந்த முறையும் கைவிடப்பட வேண்டும்.

இந்த ஊழல்களை நீக்கச் சிலமாறுதல்கள் செய்ய வேண்டும். (1) கல்வி மக்களைத் தேடிப் போகவேண்டும். இதற்கான முயற்சிகள் எல்லாவற்றையும் மேற்கொள்ள வேண்டும். ஆனால் இவ்வகையில் செலவழிக்கவேண்டிய தொகை அதிகமாயிருக்கும். செலவு அதிகம் என்பதனாலேயே இந்தத் திட்டத்தை ஒதுக்கிவிடுதல் கூடாது. (2) புதுநூல்களைக் கற்பிக்கும்போதுகூட, நம் நாட்டில் பழங்காலத்திலிருந்து வந்த நீதி நூல்கள் முறையாகப் பயிற்றப்படல் வேண்டும். (3) கற்கும் மாணவர்களுக்குத் தங்கள் ஊர், நாடு, நகரம், தேசம் ஆகியவற்றைப்பற்றிச் சொல்லித் தரவேண்டியது அவசியம். முதலாவதாகத் தன் ஊரின் பெயர், பெயர்க் காரணம், தன் ஊரைச் சுற்றிலுமுள்ள ஊர்கள, தன் ஊரின் சுற்றளவு, ஜனத் தொகை, அதன்கண் உள்ள நன்செய், புன்செய், தோட்டம், குடியிருப்பு, புறம்போக்கு முதலியவைகளைப்பற்றி நன்கு தெரிநதுகொள்ள வேண்டும். (4) நிலம் அளப்பது, நிலத்தை வேண்டியபடி பிரித்துப் பங்கிடுவது இவை போன்றவைகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். இன்னும் நிலங்களில் பயிரிடும் குடிகள், நிலக் கிழவர், அரசியலார் என்னும் இவர்களுக்கு உரிய உரிமைகள் யாவை, விளைவுப் பொருள்களிலும் தொகை வருமானத்திலும் அவரவர் பெறவேண்டிய பகுதிகள் எத்தகையன என்பவற்றைத் தெரிந்துகொண்டால் மிக்க பயனடையலாம். (5) சாலை வரி, தண்ணீர் வரி, காவல் வரி போன்ற பல

வரிகளின் போக்கையும் உணரவேண்டும். (6) வெளியிடங்களிலிருந்து வரும் கடிதங்களைப் படித்து அறியவும் தாங்களாகவே கடிதங்கள் எழுதவும் பழகிக்கொள்ளவேண்டும். (7) பிற்கால வாழ்க்கையில் ஒய்வு நேரங்களைப் பயன்படுத்திக்கொள்ளும்பொருட்டுச் சிறு கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். (8) இராப் பள்ளிகள் வைத்து முதிய மக்களுக்கும் கல்வி புகட்டவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். [இது பற்றிய விவரங்களைப் பின்பு ஆராய்வோம்.]

XV

'முதியோர் கல்வி'யைப்பற்றிச் சிறிது பார்ப்போம். முதியோர் கல்வியாவது வயதில் முதியவர்களுக்குக் கல்வி புகட்டுவது. வயதில் முதியவர்கள் என்ருல் யார் என்பது அடுத்த வினு. இது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாக விடை பெறும். லாபக் என்ற பேரறிஞர் ஒரு கிறிஸ்துவப் பாதிரியாரானவர். அவர் ஐம்பது, ஐம்பத்தைந்து வருஷங்களான கிழவர்களுக்கும் கல்வி போதிக்கலாம் என்று அனுபவத்தில் கண்டறிந்து கூறியிருக்கிருர். இது எப்படியானுலும் நம்மைப் பொறுத்தவரையில் பதினெட்டு முதல் நாற்பத்தைந்து வயதுள்ளவர்களை முதியோர் என்று கொள்ளுவோம். முதியோர் கல்வி அவசியமா என்பது அடுத்த கேள்வி. இந்தக் கேள்வி இப்பொழுது பழங் கதையாய்விட்டது. முதியோர்கள் என்ருலே போதும். "அதற்குத் திட்டம் போட்டிருக்கிறீர்களா? என்ன செய்யப் போகிறீர்கள்? இங்கேகூட அதற்கு ஏற்பாடுகளைச் செய்வீர்களா?" என்று எல்லோரும் கேட்க ஆரம்பித்துவிடுகிருர்கள். இதுவே நமது நாட்டில் முதியோர் கல்வி இயக்கத்துக்கு ஒரு நல்ல ஆரம்பம். ஆனல் நான்

இப்போது சொன்னதெல்லாம் பாதிஉண்மைதான். முதி யோர் கல்வி இயக்கத்திலே ஆர்வங் காட்டுபவர்களும் அதற் காக உழைப்பதற்கு முன் வருபவர்களும் எத்தனைப் பேர்? படித்த மக்களில் ஒரு சிலர்தான் முதியோருக்குக் கல்வி புகட்டத் தயாராய் இருக்கிறார்கள். அதேபோல படியாத முதியவர்களில் வெகு சிலருக்குத்தான் இந்த இயக்கத்திலே நம்பிக்கையும் ஊக்கமும் பிறந்திருக்கிறது. இந்த இயக்கம் மற்ற நாடுகளிலே மிகத் தீவிரமாக வேலை செய்தது; இன் னும் செய்துவருகிறது. இதன் பயனாக மேல்நாடுகள் எல்லா வற்றிலுமே நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குமேல் படிக்கவும் எழுதவும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அதி லும் இரஷ்யா தேசத்திலே நூற்றுக்கு நூறு பேரும் எழு தப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றே சொல்லிவிடலாம்.

நமது நாட்டில் முதியோர் கல்வி இயக்கமே இப் பொழுதுதான் கருக் கொண்டிருக்கிறது. அதற்குப் போதிய ஆதரவு இதுவரை கிடைக்கவேயில்லை. நம்மை அடிமையாக்கி வைத்துக்கொண்டிருந்த பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்துக்கு நமது படிப்பின்மை பேருதவியாக இருந்தது. ஆகவே, 'பல கமிட்டிகளின் சிபார்சுகளுக்குப் பிறகுங் கூட நடைமுறைக் கல்வி, முதியோர் கல்வி போன்ற நல்ல திட் டங்கள் அமுலில் வரவேயில்லை. இப்பொழுது (சுதந்திரம் கிடைத்தபிறகு) நம் சர்க்கார் தம்மாலான உதவியை இவ் வியக்கத்துக்கு அளிக்க முன்வந்துள்ளனர். அதிலும் நமது மாகாணக் கல்வி மந்திரி இந்த விஷயத்தில் தனி ஆர்வம் கொண்டவர். ஆண்டவன் அருளாலும் அரசியலார் ஒத் துழைப்பாலும் இந்த முதியோர் கல்வித் திட்டம் வெற்றி பெறுவதாகுக!

படித்த சிலர் இப்பொழுது படியாத முதியவர்களுக்கு எழுத்தறிவிக்க முன்வருகிறார்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் ஓர் எச்சரிக்கை செய்யத்தான் வேண்டும். படியாதவர்கள் எல்லோருக்கும் எழுத்தறிவு வேண்டும் என்ற உணர்ச்சி நன்றாக உண்டாகி விடவில்லை. "நமக்கெதற்குப் படிப்பு? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையப் போகிறதா? படித்தவர்கள் எல்லாம் என்ன சுகங்கண்டு விட்டார்கள்? நம் பாட்டன்மார்கள் எல்லாம் படிக்காமலேயே சுகமாக இருக்கவில்லையா?" என்று சொல்லும் முதியோர்களை நாட்டுப்புறங்களில் இன்றைக்கும் பெருவாரியாகக் காணலாம். ஆகவே, முதியோர் கல்வித் திட்டத்தில் படித்தவர்களுக்கு இருக்கும் ஊக்கம் படியாதவர்களுக்கு இல்லை. அவர்களிடம் நம்பிக்கையையும் பேருக்கத்தையும் உண்டு பண்ணுவது நமது முதல் கடமை. ஆகவே, முதியோருக்குக் கல்வி புகட்டும் எண்ணத்துடன் முன்வரும் ஒருவனுக்கு முதல் வேலை, முதியோர் கல்வியின் அவசியத்தை அனைவருக்கும் போதித்து, அவர்களுக்கு அதில் ஆர்வம் உண்டாக்குவதுதான். இனி, நான் சொல்லும் சில விஷயங்கள் இவ்வகையில் பயன்படுமென எண்ணுகிறேன்.

முதலாவதாக, நல்ல விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்குப் படிப்பு அவசியம். இந்தக் காலத்தில் எத்தனையோ தினசரிப் பத்திரிகைகள், வார மாதப் பத்திரிகைகள், எத்தனையோ நல்ல சிறு புத்தகங்கள் வெளிவருகின்றன. அவற்றிலே அடங்கியுள்ள சிறந்த கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் சிறுகதைகள், தொடர் கதைகள் இவைகளெல்லாம் படியாதவர்களுக்கு உபயோகமில்லாமல்தானே போகின்றன! அவற்றையெல்லாம் படிக்கத்தெரிந்துகொண்

டால் எவ்வளவு உருசிகரமான விஷயங்கள், எவ்வளவு உபயோகமான விஷயங்கள் எல்லாம் தெரியவரும்! ஆகவே புத்தகங்கள், பத்திரிகைகள் இவற்றின் பலனை அனுபவிக்காமல் போகிறார்கள் படிப்பில்லாதவர்கள்.

இரண்டாவதாக, கடிதங்கள் எழுதவும் வந்த கடிதங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளவும் முடியாமல் அவர்கள் படும் கஷ்டம் சொல்லி முடியாதது. தனது உறவினர்களுக்குக் கடிதம் எழுதினால் அதில் எவ்வளவோ வீட்டு விஷயங்கள், இரகசியமான விஷயங்கள் எழுதவேண்டி இருக்கலாம். ஆனால் படிப்பில்லாதவர்கள் கடிதம் எழுத வேண்டுமானால் படித்த ஒருவரிடம் போய்க் கடிதம் எழுதிக் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் மனமுருகி எழுதினால் சரி. எழுதாவிட்டால் படித்தவர்களில் இன்னொருவரைத் தேடிக் கொண்டு அலைய வேண்டும். கடைசியில் ஒருவர் எழுத ஒப்புக்கொள்ளலாம். ஆனாலும் அவர், சொன்ன சமாசாரங்களை யெல்லாம் அப்படியே எழுதுவார் என்று சொல்ல முடியாது. ஒருவர் விஷயங்களை யெல்லாம் சொல்லிக்கொண்டே போவார். அவற்றில் சில மறுபடியும் திரும்பி வந்துகொண்டேயிருக்கும். அவற்றை யெல்லாம் விட்டுவிட வேண்டும். மீதி விஷயங்களைச் சரியாகத் தொகுத்து முறைப்படி எழுத வேண்டும். ஆனால் இவ்வளவுக்கும் பொறுமை எவருக்கிருக்கும்? கடிதமெழுதுவோருக்குக் கிடைக்கும் நேரம், அவரது மனநிலைமை, கடிதத்தின் நீளம் இவற்றிற்குத் தகுந்தபடி சொல்லும் விஷயங்கள் குறைக்கப்படும். இதனால் கடிதம் எழுதும்படி வேண்டிக் கொள்பவர் நினைக்கும் விஷயங்கள் எல்லாம் கடிதத்தில் இடம் பெறுவதில்லை. இது தவிரத் தனக்கு வேண்டும்போது ஒரு கடிதத்தை எழுதிப்

போட்ப் படியாதவனால் முடியாது. கடிதம் எழுதுவோ ரின் சௌகரியத்தைப் பொறுத்துத்தான் அவன் போக வேண்டும்.

மூன்றாவதாக, பாண்டு பத்திரங்கள் முதலியவற்றை எழுதுதல் ஒரு கஷ்டமான வேலை. படிப்பில்லாதவர் களுக்குப் படித்த ஒருவர் சாதாரணமாக ஒரு சிறிய ஊரா னால் அவ்வூர் கிராம முன்சீபையோ, மணியக்காரரையோ கண்டு, அவரை எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் எழுதிவிட்டு அதைத் தானே படித்துக் காட்டுவார். சில சமயங்களில் மற்றொருவரைக் கூப்பிட்டு படித்துக் காட்டும்படி சொல்லுவதுமுண்டு. படித்து முடிந்தவுடன் படியாத பாட்டாளி உடனே தன் கையெழுத்திடுகிறான். ஆனால் கையெழுத்துப் போடத் தான் எததனை பேருக்குத் தெரியும்! அவன் தொட்டு விட்ட பேனாவால் பத்திரம் எழுதியவரே அவன் பெயரை எழுதிவிட்டுக் கீறல் என்று பக்கத்தில் எழுதிவிடுவார்; அல்லது அவன் பெருவிரலை மையில் அழுத்தி அடையாள மிடச் செய்வார். இவ்வளவுதான். படிப்பில்லாத அவன் ஒரு கட்டுக்கு அடங்கியவன் ஆய்விடுகிறான். ஆயிரம் ஆயிரமாகக் கொடுக்கல் வாங்கல் செய்யும போதுகூடப் பிறரை நம்பித்தான் பிழைக்க வேண்டியிருக்கிறது. இதில் ஏமாந்து போகவும் இடமுண்டு.

நான்காவதாக, தன் சுற்றுப் புறத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது, அதற்குத் தக்கபடி, தான் என்ன செய்யவேண்டும் என்று அறியப் படிப்பு அவசியம். உதாரணமாக வரி விஷயங்கள, கிணறு வெட்டச் சர்க்கார் கொடுக்கும உதவித் தொகை, விளைவு மான்யங்கள், குறிப்பிட்ட காலத்துக்கு விலைவாசிகள், நல்ல விவசாய

முறைகள், சுகாதார விதிகள் முதலியவை யெல்லாம் அவனுக்கு நேரடியாகத் தெரியா. பிறர் சொல்லி ஏதாவது தெரிந்தால் உண்டு.

ஐந்தாவதாக, படிப்பில்லாதவனைச் சுரண்டுவது சுலபம். விலைவாசிகளையும் வெளியூர் நிலவரங்களையும் சரியாக அறியாத பாட்டாளியைச் சுரண்டி இலாபமடைகிறான் நகர வியாபாரி. கச்சேரிகளுக்குப் போகும் படியாத பாட்டாளியை ஏமாற்றி இலாபமடைகிறான் படித்த உத்தியோகஸ்தன். வட்டி, அசல் திட்டங்களை அறியாத அவன் பரிதாப நிலையை உபயோகப்படுத்திப் பணக்காரன் அவர்களுக்குக் கடன் கொடுத்து ஏமாற்றுகிறான். அவர்களைக் கடன் வாங்கத் தூண்டுவதற்காக அவர்களது கெட்ட வழக்கங்களை அதிகரிக்கப் பார்க்கிறான் பணக்காரன். இப்படியாகப் படித்த ஒவ்வொருவனும் தத்தம் இலாபத்திற்காகவும் சுகத்திற்காகவும் படியாதவனை ஏமாற்ற முயற்சி செய்கிறான். [இதுவரை சொல்லப்பட்டவை படிப்பின்மையால் ஏற்படும் நேரடியான கஷ்டங்கள். இனி நாடு முழுவதற்கும் சமுதாயம் முழுவதற்கும் நேரும் தீங்குகளைப் பார்ப்போம். இவை படித்தவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டியவை.]

ஆறுவதாக, முதியோர் வோட்டுரிமை அமுலில் வந்திருக்கிறது. இதன்படி வயது முதிர்ந்த ஒவ்வொருவனுக்கும் அரசாங்கத்தை நடத்துவோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. இதைத் தேர்தல்களின் மூலம் அவன் உபயோகித்துக்கொள்ளலாம். நாட்டு அரசாங்கத்தை ஒரு சிலர்தான் முன்னின்று நிர்வகிக்கவேண்டும். நாடு சுதந்திரம் பெற்றுவிட்டதாலேயே நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் அரசாங்கத்தில் நேரடியாகப் பங்கு பெறவேண்டுமென்பது

முடியாது. ஆகவே, எல்லோருமாகச் சேர்ந்து சில பிரதிநிதிகளைப் பொறுக்கி அனுப்பவேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கும் பொறுப்பு யாருடையது? நாட்டு மக்களுடையது. அதாவது நூற்றுக்குத் தொண்ணூறு வீதமுள்ள, படியாத நம் நாட்டு மக்கள்தான் அரசாங்கம் நடத்துவோரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது மிக வருந்தத் தக்க விஷயமாகும். படியாதவர்கள் தேர்தலில் யாருக்கு வோட்டு போடப்போகிறார்கள்? யாருடைய பெயரை அதிகமாகக் கேள்விபட்டிருக்கிறார்களோ அல்லது யாருக்காக அவ்வூர் உத்தியோகஸ்தர்களும் மிராசுதார்கள் போன்ற பெரிய மனிதர்களும் பிரசாரம் செய்கிறார்களோ அவருக்குத்தான் அவ்வூரிலுள்ள வோட்டுகள் எல்லாம் கிடைக்கும். பிரசாரம் செய்வோருக்கு ஒரு தனி மனிதன் செய்யும் உபகாரச் செயலாகவே முடிகிறது இத்தேர்தல். ஆகவே முதலாளிகளையும் பதவியில் உள்ளவர்களையும் கைவசம் வைத்துக்கொண்டுள்ள நபருக்குத்தான் வெற்றி. இது என்ன தேர்தல்! என்ன ஜனநாயகம்! என்ன சுதந்திரம்!

ஏழாவதாக, நம் நாட்டின் கல்வி நிலை உயரவேண்டும் என்பது உறுதி. ஆகவே, ஆரம்பக் கல்வி கட்டாயமாக அமையவும் ஆரம்பித்துவிட்டது. சிறுவர்கள் பள்ளிக்குச் சென்று கல்வி பெறவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பமுமாகும். ஆனால் சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி பயனளிக்க வேண்டுமானால் முதியோர் கல்வி அதற்கு அவசியம். ஏன்? படியாத பெற்றோர் தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில் சிரத்தை காட்டமாட்டார்கள் அவர்களுக்குப் படிப்பைவிடச் சொந்தத் தொழில்தான் மதிப்புக்கு உரியதாக அமைகிறது. படித்த பெற்றோர்கள்

வீட்டுக் குழந்தைகள் சரிவரப் பள்ளிக்குச் செல்வதையும், மற்றவர்கள் அதைப் பார்த்தும் வெட்கம் அடையாமல் இருப்பதையும் இப்பொழுதும் கிராமங்களில் பார்க்கலாம். இப்படியிருந்த காரணத்தால்தான் கல்வியென்பதே ஒரு சில குடும்பங்களின் தனி உரிமையாகப் போய்விட்டது. எல்லாவற்றையும்விட முக்கியமாக, எந்தச் சமூக சீர்திருத் தத்திற்கும் கல்விதான் அடிப்படை என்பதை மறக்கக் கூடாது.

கடைசியாக, ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக அமுலில் கொணர்ந்து இக்காலச் சிறுவர் சிறுமிகளை எல் லாம் படிப்புள்ளவர்களாக்கி விடுவதாக வைத்துக்கொள் வோம். இவர்கள் இன்னும் பத்து அல்லது பதினைந்து வருஷங்களில் தனி மனிதர்களாகப் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். அதுவரை நம் நாட்டுச் சுதந்திரமும் நாட்டுச் சர்க்காரும் நிலைத்திருக்குமா என்பதே யோசனைக் கிடமான பிரச்சினை. இன்னும் பதினைந்து வருஷங்கள் அரசியலைச் சரிவர நடத்திப் பிற நாடுகளுக்கு அடிமை யாகாமல் நாட்டு நிலையைப் பாதுகாத்து வந்தால்தான் கல்விச் செல்வம் பெற்ற வருங்கால இளைஞர்கள் பொறுப் பேற்கும்போது அவர்களிடம் சுதந்திர இந்தியாவை ஒப்பு விக்க முடியும். தற்போது நாட்டு நிர்வாகம் திறமையாக நடத்தத் தற்கால முதியோர்கள் ஜனநாயகத்துக்குத் தகுதி யுள்ளவர்களாக இருக்கவேண்டுமே. இல்லாவிட்டால் சுதந்திரமுள்ளபோது அதை நிர்வகிக்கத் திறமைபெற்ற வோட்டுரிமைத் தொகுதியில்லாமல் போகும். திறம் படைத்த வோட்டுரிமைத் தொகுதி கிடைக்கும்போது சுதந்திரமே இல்லாமல் போய்விடக்கூடும். "நாயைக்

கண்டால் கல்லைக் காணோம்" என்ற கதையாகவா விட்டு விடுவது இப் பெருநாட்டின் சுதந்திரத்தை?

ஆண்டவன் அருளால் இம் முதியோர் கல்வித் திட்டத்தை அரசியலாரே ஏற்று நடத்த முற்பட்டுள்ளனர். அத்திட்டத்தை விளக்குதல் என் நோக்கமன்று. ஆனால் இவ்விஷயத்தில் ஒன்று மட்டும் கூற விரும்புகின்றேன். மாணவர்கள் முதியோர் கல்வித்திட்டத்தில் ஊக்கம் கொள்ளவேண்டும். மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் கல்விக்குச் செய்யக்கூடிய தொண்டு பெரும்பாலும் முதியோருக்குக் கல்வி புகட்டுவதேயாகும். தாங்களே கல்வியைப் பெறும் வசதி பெற்றுள்ள கல்லூரி மாணவர்கள் சொற்பத் தொகையினர்தாம். எனவே, மாணவர்கள் கல்லூரிகளிலோ பள்ளிகளிலோ கல்விபயில வசதி பெற்றிருாத மக்களை மறந்துவிடுதல் கூடாது. முதியோருக்கு அளிக்கும் கல்விக்குப் புத்தகப் படிப்பு ஆரம்பத்திலும் முடிவிலும் அவசியம் அன்று. முதியோர்களுக்கு எழுத்தறிவு ஐயமின்றி அவசியந்தான். ஆனால் அவர்களுக்கு ஆரம்ப எழுத்தறிவை ஊட்டுவதற்குமுன் அன்னாருக்குப் பயன்படும்படியான வகையில் பொது அறிவைக் கற்றுக்கொடுக்க வேண்டும். சம்பாஷணை வகுப்புகளையும் மற்றும் பற்பல பரிசோதனை வகுப்புகளையும் நடத்திவர வேண்டும். முதியோர்களுக்குச் சிறந்த முறையில் பொது, சுய சுகாதாரத்தைப் பற்றியும், உலகத்தின் முன்னேற்றத்தைப் பற்றியும், ஏதாவது ஒரு குடிசைத் தொழிலை அன்னாருக்குக் கற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்கள் வீணாக்கும் நேரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றியும் கற்றுக்கொடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகச் சுதந்திர நாட்டின் சுதந்திரக் குடிகள் என்ற

முறையில் அவர்களுக்குள்ள உரிமைகளையும் அன்னார் தம் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளையும் போதித்தல் வேண்டும். சீன நாட்டிலே மாணவர்களால் நடத்தப்படும் "புத்துயிர் இயக்கம்" அந்நாட்டு மக்களின் உணர்ச்சிகளைப் பெரிதும் தட்டி எழுப்பிவிட்டிருக்கிறது. முன் கூறியபடி முதியோர் கல்வியானது மிகுந்த ஊக்கத்தோடும், திறமையோடும், தொடர்ச்சியாகவும் நடத்தப்பட வேண்டும். உண்மைத் தொடர்ச்சியின்றி முதியோர் கல்வி முயற்சியானது கீழ்த்தரமான விளம்பரமாக மாறிவிடுதல் கூடும். காந்தியடிகளின் கருத்துப்படியே "இந்துஸ்தானி தாலிமி சங்கத்தார்" முதியோர் கல்வித் திட்டமொன்றைத் தயார் செய்திருக்கிறார்கள். மாணவர்கள் அதனைப் படித்துத் தங்களால் இயன்றவரை அதன்படி நடக்க முயலுதல் வேண்டும். முதியோர் கல்வியின் வெற்றிக்கு அறிகுறி ஒரு கிராமத்திலோ ஒரு நகரத்திலோ அவ்வியக்கத்தால் கல்வி அறிவு பெற்ற மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தன்று; அவ்வியக்கத்தினால் சீர்திருத்தப்பட்ட சமூகத்தின் பலத்தையும், கூட்டுறவு வாழ்க்கையையும் வளத்தையும், நாட்டின் நலனைக் காக்கத் தனி மனிதர்கள் செய்யும் காரியங்களையும் பொறுத்திருக்கின்றது. இத்தகைய பணியினை வெற்றியுடன் நடத்த அனுபவம் மிக்க மாணவத் தொண்டர்கள்தான் தேவை.

முதியோர்களுக்கு நாம் செய்யவேண்டிய சேவை அவர்களுக்கு எழுத்தறிவு தருவதோடு முடிந்துவிடாது. அவர்களுக்கு நவீன உலகில் வாழ்க்கைக்கான அறிவைத் தருவதும் நம் கடமை. முதியோர்களுக்குக் கல்வி புகட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தக்க முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்

இருந்தாலன்றி முதியோர் கல்வித் திட்டம் வெற்றிபெறாது. மாலை வேளைகளில் வகுப்புக்கள் நடத்தியோ, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கல்வி போதித்தோ, படியாத முதியவர்களிடத்து அறிவைப் பெருக்குவது நம் கடமை. இந்தத் திட்டத்தில் முதியவர்களுக்கு ஊக்கத்தை எழுப்புவது முதலில் செய்யவேண்டிய காரியம். இதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துச் சர்க்கார் உதவ முன்வரவேண்டும். இதுபற்றி மேற்கொண்ட விவரங்களை இதற்குமேலும் கூறவேண்டுவதில்லை. நமது மாகாண சர்க்கார் முதியோர் கல்வித் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவர ஆரம்பித்துள்ளனர். சர்க்காருடன் ஒத்துழைத்து இத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வது பொதுமக்கள்—அதிலும் படித்த மக்கள் — செய்யவேண்டிய முதற்கடமை. இதற்குப் பேருதவியாகப் பல்கலைக் கழகத்தார் ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும். நான் சொல்லப் போகும் கருத்து புதியதன்று. கல்லூரிகளில் படித்து முடிந்ததும் ஒவ்வொரு மாணவனும் ஒரு குறித்த காலத்திற்கு முதியோர்கல்வி போன்ற ஏதாவதொரு சமூக சேவையைச் செய்தாலன்றி, அவனுக்குப் பட்டம் அல்லது நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கக் கூடாது.

XVI

கல்வி முறையில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களில் எதுவும் ஆசிரியர்களின் உதவியின்றி நடைபெறாது. ஆசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டுவது சர்க்காரின் பொறுப்பு மாத்திரம் அன்று; பொது மக்களுடையதும் ஆசிரியர்களுடையதும் கூடத்தான். ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்தச் சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். இதைப்பற்றி இரண்டு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

ஆனால் அதிகச் சம்பளம் பெறுவதால் மட்டும் ஆசிரியர்களின் நிலை உயராது. நாம் சமூகத்திற்கு ஆசிரியர்களின் இன்றியமையாமையையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நன்மதிப்பையும் உணர வேண்டும். கல்வி பரப்பும் புனிதமான தொழிலை மேற்கொண்டுள்ள ஆசிரியர்களை மரியாதையுடன் நடத்துதல் சமூகத்தின் கடமை. இனி, சமூகத்தை நன்முக நடத்த வேண்டுமானால், ஆசிரியர்கள் அதற்குத் தகுதி உடையவர்களாக இருக்கவேண்டும். தங்களது நல்லொழுக்கத்தாலும் எளிய வாழ்விலுைம், அறிவுத் திறமையாலும், சமூக சேவைக்கான ஆர்வத்தாலும், மக்களால் மதிக்கத் தக்க தகுதி பெறவேண்டும். ஆசிரியர்களுடையதும் மாணவர்களுடையதுமான கஷ்டங்களை நன்குணர்ந்து, அவற்றைத் தீர்க்க வழி செய்ய வேண்டுமானல், பள்ளிகளில் உழைத்து அனுபவம் பெற்றவர்களையே பள்ளிகளின் மேற்பார்வை அதிகாரிகளாக நியமிக்கவேண்டும். அவர்களுடைய யோசனையின் பேரில் சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

XVII

நான் மேலே கொடுத்துள்ள திட்டத்தின் பொதுப்படையான சில கருத்துக்களைச் சுருக்கிக் கீழே குறித்துள்ள அட்டவணை காட்டுகிறது.

பராமரிப்புப் பள்ளி (வயது. 2-6) (ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுப்பள்ளி) → ஆரம்பப் பள்ளி (வயது 6-11) (இரு பாலார்க்கும் பொது) → நடுத்தரப் பள்ளி (வயது 11-14) → உயர்தரப் பள்ளி (வயது 14-17)

கட்டாயக் கல்வி (அடிப்படைக் கல்வி)

தயாரிப்புப் பள்ளி → கலைக் கல்லூரி (வயது 17-20) (இருபாலார்க்கும் பொது)

தொழிற் பள்ளி → தொழிற் கல்லூரி (வயது 17-26) (இருபாலார்க்கும் பொது)

→ ஆராய்ச்சிக் கழகங்கள் (இருபாலார்க்கும் பொது)

(1) ஆராய்ச்சிக் கழகங்களில் தவிர மற்றெல்லாப் பள்ளிகள், கல்லூரிகளிலும் தாய் மொழியில் கல்வி கற்பிக்கப்படவேண்டும். (2) கலை, தொழிற் கல்லூரிகளில் தாய் மொழியும் மற்றப் பாடங்களும் அல்லது தொழில் இவை தவிர அந்தந்த துறையில் செய்யப்பட்டுள்ள சிறந்த ஆராய்ச்சி நூல்கள் எம்மொழியில் உள்ளனவோ அம்மொழியையும் கற்றுக்கொடுக்க வேண்டும். உதாரணமாக, தத்துவ பாடத்தைக் கல்லூரியில் படிப்பவனுக்கு வடமொழியோ, ஜெர்மன் மொழியோ சொல்லித் தரவேண்டும். வைத்தியக் கல்லூரியில் படிக்கும் ஒருவனுக்கு ஜெர்மன், இலத்தீன் மொழிகளில் ஏதாவது தெரியவேண்டும். (3) ஆராய்ச்சிக் கழகங்கள் தவிர மற்றெல்லாக் கல்விச் சாலைகளிலும் சமயக் கல்விக்கு இடந்தர வேண்டும். (4) கல்விச்சாலைகள் அனைத்தும் இயற்கைச் சுற்றுப்புறங்களில் அமைக்கப்பட வேண்டும்.

XVIII

இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது. நாடெங்கும் ஆரவாரம் மிகுந்துள்ளது. ஆனல் சுதந்திரம் எப்பொழுதும் பொறுப்புடன் கூடியே நிற்கிறது. சுதந்திர இந்தியாவில் திருத்தி அமைக்கவேண்டிய விஷயங்களில் கல்வி மிகவும் முக்கியமானது. அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் ஆராய்ச்சிகள் நடத்தி, அவற்றிற்கான புதுத் திட்டங்கள் வகுத்தால் நாடு முன்னேற்றம் அடையும் என்றும், கல்வி போன்ற பிற துறைகளின் வளர்ச்சி தானே பெருகிவிடும் என்றும் நினைப்பது தற்காலப் போக்காய்விட்டது. ஆனல் கல்வியின் மேன்மையை உணர்ந்து அதை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் வகுத்தாலன்றிச் சுதந்திர இந்தியா உண்மையில் முன்னேறியதாகாது. நாட்டில் கல்வியைப் பரவச் செய்வதும், தற்போதுள்ள கல்வித் திட்டங்களைத் திருத்தி அமைப்பதும் மிகவும் அவசியம். கல்வித் திட்டங்களைத் திருத்தி அமைப்போர் தேசிய உணர்ச்சி, சமயவுணர்ச்சி, சகோதர மனப்பான்மை இவற்றை நாட்டு மக்களிடையே வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

அரசியல் நிர்ணய சபையிலாயினும், மாகாண சட்ட சபைகளிலாயினும் புதுக்கல்வித் திட்டங்களை வகுப்பதில் முழுமனத்துடன் தீவிரமாக முனையவேண்டும். அதே ஊக்கத்தோடு வகுத்த திட்டங்களை அமுலில் கொண்டுவர வேண்டும். ஒரு பள்ளிக்கு இயற்கையான சூழ்நிலையில் ஒழுங்கான ஒரு சில சிறு கூரைக் குடில்களும், சிறந்த தகுதி வாய்ந்த ஆசிரியர்களும், ஒரு நூல்நிலயமும், வேண்டிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடமும் போதுமானவை. இவற்றிற்கு மேலும் ஏதேனும் இருக்க வேண்டும் என்று

பள்ளி நிர்வாகிகளைப் பல்கலைக்கழகங்களும், அரசாங்க அதிகாரிகளும் வற்புறுத்தக் கூடாது. தற்பொழுது, அரண்மனை போன்ற கட்டிடங்களுக்கும் இன்னும் அவை போன்ற ஆடம்பரங்களுக்குமே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நம் நாட்டு அறிஞர் பலரும் ஒரு சில கட்டிடங்கள் சேர்வதால் ஒரு பள்ளி உருப்பெற்று விடுவதில்லை என்றும், உண்மையில் அப்பள்ளியை உருவாக்குவோரும், அதை வளர்ப்போரும், அதன் பெருமைக்கு அடிகோலுபவரும் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களே என்றும் கூறுகின்றனர். குருதேவர் தாகூர், சந்தோஷமும் அன்புமே கருவிகளாய்க் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க வேண்டுமென்று பன்முறை கூறியுள்ளார். ஏனெனில், அவ்விதக் கல்வியின் மூலம் அச்சிறுவரின் மனப்பான்மை விரிகிறது. இத்தகைய கல்வி முறைதான் இந் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். நம் நாட்டுக் கல்வியாளர் பலரும் இயற்கை எழிலின் இடையே, இயற்கைக்கு முரண்படாத முறையில் போதிக்கப்படும் கல்வியைத்தான் விரும்புகின்றனர்.

சில குதர்க்கவாதிகளின் அபிப்பிராயங்கள் யாதாயினும் சரி, நம் நாட்டில் அரசியலில் சாதிச் சண்டைகளும், குறுகிய மனப்பான்மையும், கட்சிப் பிரதி கட்சிகளும், மூடப் பிடிவாதமும் தாண்டவமாடும் இச்சமயத்தில் ஒவ்வொருவனும் தனது சமயக் கோட்பாடுகளைத் தெரிந்து அதற்குத் தக்கவாறு ஒழுகுவானேயானால் நாடு நலம் பெறும். இப்பொழுது இந்தியாவின் புதிய கல்வி முறை எவ்வாறு இருக்கவேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மத, தரும விஷயங்களில் பள்ளிகளில் பயிற்சி

அளிக்க ஏற்பாடு செய்வதானல் இது ஏற்ற சந்தர்ப்பமாகும். தன்னினப்பற்று, நம் தேசிய வாழ்வில் உள்ள பெரும் இழுக்கு. ஆனல், மத, தரும வாழ்வு தூய்மைக்கு அவசியம். "மாணவர்களுக்குச் சமய விஷயங்களைப் போதித்தல், மத சமூகத் துவேஷங்களைத் தூண்டிவிடுவதற்கு ஏது வாகும்" என்று சிலர் கூறுகின்றனர். ஆனல் பள்ளி களில் முதல் வகுப்பு முதல், மத தரும விஷயங்கள் போதிக்கப்படுமானல் அதன் மூலம் மாணவர்கள் எல்லா மதங்களினுடைய அடிப்படைத் தத்துவங்களையும் அறிந்து பயனடைவர். இதை மறந்துவிட்டுக் குற்றங் காண்பது வருந்தத் தக்க விஷயமாகும். அரசாங்கமும் கல்வி இலாகா அதிகாரிகளும் தாங்கள் நடுநிலைமை வகிக்க விரும்புவதா கக் கூறி, அதன் மூலம் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயல்கின்றனர். மதத்தின் பேரால் தங்களுடைய சகோதரரைச் சூரையாடும் எண்ணற்ற மக்களின் விஷயத் தில் தலையிடவேண்டியது சர்க்காரின் கடமை அல்லவா! 'மதம்' அல்லது 'சமயம்' என்பது நாம் விரும்பிய பொழுது விலக்கிவிடக் கூடிய இறைவனைப் பற்றிக் கூறும் வெறும் ஏட்டுச் சாத்திரம் அன்று; 'சமயம்' என்பது ஒரு சமூகத்தின் ஆன்மீக அனுபவம்; அதன் எழுச்சியின் பதிவு; அச்சமூகத்திற்கு அது ஒரு முக்கிய ஆதாரம். சமயக் கல்வி பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடத் திட்டத்துடன் இணைக்கப்படல் வேண்டும். ஆனல் அது வகுப்புத் துவேஷம் ஊட்டுவதாகவோ, மனப்பான்மையைக் குறுகச் செய்வதாகவோ, வேற்று சமயத்தைச் சார்ந்தவர் களை வெறுக்கத் தூண்டுவதாகவோ இருத்தல் கூடாது. நம் நாட்டில் இன்று காணப்படும் சண்டை சச்சரவுகள், கலகங்கள், பசிப்பிணி முதலானவை, சமயங்களாலோ

பல்வேறு சமயங்களைப் பின்பற்றுவோர் இங்கு இருத்தலாலோ ஏற்பட்டவை அல்ல; அவனவன் தன் சமயத்தைச் சரிவர அறிந்து, அதன் கோட்பாடுகளைப் பின்பற்றாது நெறி தவறிச் செல்வதாலேயே ஏற்பட்டவை.

இங்ஙனம் நம் நாட்டு மொழிகளுக்கும், இந்துஸ்தானிக்கும் தக்க முக்கியத்துவம் அளித்து, சமயக் கல்வியைப் பாடத் திட்டத்தில் புகுத்தி, இயற்கைச் சூழ்நிலையில் கல்வி போதிக்க ஏற்பாடுகள் செய்து, வகுப்புப் பேச்சேயின்றி இசை, ஓவியம், கைத்தொழில் இவை மூலமாகவும் கல்வி தரும் முறைகளைக் கையாண்டு நம் நாட்டுக்கேற்ற கல்வியை மக்கள் அனைவருக்கும் தந்து மகிழவேண்டும்.

இறைவன் அருளால், நம் நாட்டிற்கு வேண்டிய புதுத் திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறையில் கொண்டு வந்து, நாட்டுப்பணி செய்ய வேண்டுமளவு சக்தியையும் அறிவையும் திட மனத்தையும் பெறுவோமாக!

“அன்ன சத்திரம் ஆரயிம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.”

விலை ரூபா 1/-

101